நவம்பர் / டிசம்பர் 2012 தமிழாக்கம்

# The Herald
## of Christ's Kingdom




## உங்கள் விசுவாசத்தோடு வளர்ச்சியடைய வேண்டிய நற்குணங்கள்

விசுவாசத்தோடு கூட்ட வேண்டிய நற்குணங்கள் ● நற்பண்புகள் வழியாக பெறுதல்

அறிவு ● சுயக்கட்டுப்பாடு ● விடா முயற்சி

தேவ பக்தி ● சகோதர அன்பு ● அகாபே

உங்கள் விசுவாசத்தோடு வளர்ச்சியடைய வேண்டிய நற்குணங்கள்

# ஆதியிலே



"இதினிமித்தம், இவைகளை நீங்கள் அறிந்தும், நீங்கள் இப்பொழுது அறிந்திருக்கிற சத்தியத்தில் உறுதிப்பட்டிருந்தும், உங்களுக்கு இவைகளை எப்பொழுதும் நினைப்பூட்ட நான் அசதியாயிரேன்" (2பேதுரு 1:12) சத்தியத்தில் நிலைத்திருப்பதற்கு கவனமாக வேதத்தை வாசித்து தெளிவாக அதை மெய்ப்பித்துக் கொள்ள வேண்டும். இப்படி செய்வதினால் நம்முடைய விசுவாசம் உறுதியாக நிலைத்து நிற்கும். ஆயினும், நாம் தேடக்கூடிய மேலான நிலைக்கான நம்முடைய தெரிந்து கொள்ளுதலை, விசுவாசம் மட்டுமே உறுதிபடுத்துவதில்லை. நாம் இந்த உலகத்தில் மிகுந்த வல்லமையுள்ள ஆவிக்குரிய எதிரிகளின் மத்தியில் வளர்ச்சியடைய வேண்டியவர்களாய் இருக்கிறோம். (எபேசியர் 6)

நம்முடைய போர்களை கண்ணோக்கும் போது நாம் எதிர் நோக்கக் கூடிய மாம்சத்தின் பெலவீனங்கள், சோதனைகள் அனைத்திலும் மிக ஜாக்கிரதையோடு கிறிஸ்தவர்களுக்குரிய குணலட்சணங்களை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்று பேதுரு நம்மை துரிதப்படுத்துகிறார். (2பேதுரு 1:5-7) இந்த குணங்களே இந்த பிரதியில் நாம் காணக்கூடிய பாடங்களாகும்.

1927-ம் வருஷம் வெளியிடப்பட்ட ஹெரால்டிலிருந்து எடுக்கப்பட்ட "விசுவாசத்தோடே கூட்டப்பட வேண்டியவைகள்" என்ற தலைப்போடு இந்த பிரதி துவங்குகிறது. இதில் நாம் கிறிஸ்துவின் குணங்களை அணிந்து கொண்டு, தேவனோடு கிரியை செய்வதற்கான நம்முடைய முயற்சிகளைப் பற்றி விவரிக்கப்படுகிறது. நம்முடைய அறிவை வளர்த்துக் கொள்வதற்கு மட்டுமல்ல, நம்முடைய இருதயங்களையும் வாழ்க்கைகளையும் சுத்திகரிப்பதற்காகவே சத்தியம் கொடுக்கப்பட்டுள்ளது.

"நற்பண்புகளின் வழியாக ஜெயம் பெறுதல்" என்ற தலைப்பு இந்த உலகத்தையும், அதன் ஆவியிலும் இருந்து நம்மை வேறுபடுத்தி காட்டக் கூடிய நம்முடைய தூய்மையான நற்குணங்களின் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டுகிறது. இந்த உலகம் நம்முடைய விசுவாசத்தை எதிர்த்தாலும் இப்படிப்பட்ட குணங்களை அங்கீகரித்துக்கொள்ளும்.

தேவனுடைய வார்த்தைகளைக் கவனமாக வாசித்து, அவருடைய தெய்வீக திட்டத்தை தெளிவாகப் புரிந்துகொண்டு, நம்முடைய காலத்தில் அவர் செய்யக்கூடிய கிரியைகளை புரிந்து கொள்வதற்கு "அறிவு" என்ற தலைப்பு நம்மை துரிதப்படுத்துகிறது. நம்முடைய நாட்களில், தேவனுடைய திட்டம் செயல்பட்டுக் கொண்டிருப்பதை அறியாத அநேகர் பரியாசக்காரர்களாய் இருக்கிறார்கள்.

இன்றைய கடினமான வாழ்க்கை மத்தியில் நம்முடைய கிறிஸ்தவ வாழ்க்கையை தக்க வைத்துக் கொள்வதற்குரிய காரியங்களை "சுயக் கட்டுப்பாட்டை அப்பியாசப்படுத்துதல்" என்ற தலைப்பில் நாம் காணலாம். கிறிஸ்துவைப் பின்பற்ற விரும்புபவர்கள், கிறிஸ்துவ அன்பு மற்றும் இரக்கத்திலிருந்து திசை திருப்பக்கூடிய சகலவிதமான மாம்ச இச்சைகளுக்கு எதிராக தங்களை காத்துக் கொள்ள வேண்டும்.

மோசே, பவுல், இயேசு தேவனுடைய வேலைகளை செய்வதற்காக மேற்கொண்ட ஜாக்கிரதையான முயற்சிகளை பின்பற்றும்படி "இச்சையடக்கம்" என்ற தலைப்பு நமக்கு அறிவுறுத்துகிறது.

நம்முடைய அழைப்பையும், தெரிந்து கொள்ளுதலையும் உறுதி படுத்தும்படிக்கு, இக்காலத்து வாழ்க்கையின் நம்பிக்கைகள் மற்றும் வருங்காலத்தில் நாம் பெறக்கூடிய பரிசுகள் என்று ஹாலிஸ்ட்டரினால் ( B.F Hollister) விவாதித்த விபரங்களை "தேவ பக்தி" என்ற தலைப்பு விவரிக்கிறது.

பிலதெல்பியா என்ற கிரேக்க வார்த்தையைப் பற்றி "சகோதர அன்பு" கண்ணோக்குகிறது. இதில் யூதர்கள் மற்றும் புறஜாதியான கிறிஸ்தவர்களை ஐக்கியப் படுத்துவதற்கு பேதுரு மற்றும் பவுல் எடுத்த முயற்சிகள் விவாதிக்கப்படுகிறது. மேலும் இன்று கிறிஸ்துவின் சரீரத்திற்குள் இருக்கும் பலவகையான அவயவங்களைப்பற்றி புரிந்து கொள்ளுதலை ஊக்குவிக்கிறது. இயேசுவைப் பின்பற்றக் கூடிய அனைவரும் உயர்நிலையான குணலட்சணங்களைப் பெறுவதைக் குறித்து "அகாபே" என்ற தலைப்பு பேசுகிறது. மனிதர்களுடைய அன்பைக் காட்டிலும் தேவனுடைய அன்பு மிகப் பெரியது. மேலும் கிறிஸ்தவர்கள், சகோதரர்கள் மற்றும் இந்த உலகத்தாரிடமும் தேவனுடைய அன்பை பிரதிபலிப்பதற்காக அவருடைய அன்பை அவசியமாகப் புரிந்துகொள்ள வேண்டும்.

தேவனுடைய கற்பனைகளையும், கட்டளைகளையும் நம்முடைய இருதயங்களில் எப்பொழுதும் பசுமையாக நிலைத்து நிற்பதற்கு ஏற்ற முயற்சிகளை மேற்கொள்வதற்கு இந்த பிரதி வாசிக்கக் கூடிய ஒவ்வொருவரையும் ஊக்குவிக்கும் என்று நம்புகிறோம். அறிவோடு விசுவாசத்தில் நிலைத்திருப்பது ஒரு காரியம், ஆனால் கிறிஸ்துவின் குணலட்சணங்களிலும் ஆவிக்குரிய கனிகளிலும் நிலைத்திருப்பது மற்றொரு காரியமாகும். நம்முடைய விசுவாசத்தோடு கிறிஸ்துவ சாயலை கூடுதலாக பெற்றுக் கொள்வதற்கு எல்லாவித முயற்சிகளையும் நாம் மேற்கொள்வோமாக.

## நவம்பர் - டிசம்பர் 2012


| | |
|---|---|
| **விசுவாசத்தோடு கூட்ட வேண்டியவைகள் ....** | 64 |
| இயேசுவின் குணாதிசயங்களை தரித்துக்கொள்ளுதல் | |
| **நற்பண்புகளின் வழியாக பெறுதல்** | 66 |
| சிறப்பு மிக்க நற்பண்புகள் | |
| **அறிவு** | 70 |
| புரிந்து கொள்வதற்காக ஆராய்ச்சி செய்தல் | |
| **சுயக்கட்டுப்பாட்டை அப்பியாசப்படுத்துதல்** | 73 |
| சோதனையில் விசுவாசத்தில் நிலைத்திருத்தல் | |
| **வீடா முயற்சி** | 77 |
| மோசே, பவுல் மற்றும் இயேசுவைப் போல கவனமாக இருத்தல் | |
| **தேவ பக்தி** | 81 |
| இக்கால நன்மைகள், வருங்கால பரிசுகள் | |
| **சகோதர அன்பு** | 86 |
| கிறிஸ்தவ சகோதரர்கள் மேல் நாம் காட்டவேண்டிய அன்பு | |
| **அகாபே** | 89 |
| தேவன் கொண்டிருக்கும் சுயநலமற்ற அன்பு | |
| **தீர்க்கதரிசனத்தில் இன்று** | 91 |



அஸ்திபாரமான விசுவாசம்

# விசுவாசத்தோடு கூட்டவேண்டியவைகள்

"இப்படியிருக்க, நீங்கள் அதிக ஜாக்கிரதையுள்ளவர்களாய் உங்கள் விசுவாசத்தோடே தைரியத்தையும், தைரியத்தோடே ஞானத்தையும்" (11பேதுரு 1:5)

*1927-ம் வருடம், நவம்பர் மாதத்தின் ஹரால்டின் மறுபதிவு*

சிலரிடத்தில் விசுவாசத்தின் முழு உறுதி இல்லாததினால் தேவன் வாக்களித்த அனைத்தையும் கேட்பதற்கும், தேவனோடு இணைந்து கிரியை செய்வதற்கும் தவறி விடுகிறார்கள். தைரியத்தையும், நீடிய பொறுமையாகிய சகிப்பு தன்மையையும், அறிவையும் அதோடு அன்பையும் தங்களின் விசுவாசத்தோடு கூட்டிக்கொள்வதற்கு தவறிவிடுகிறார்கள்."…. தீர்க்கதரிசிகள் சொன்னயாவையும் விசுவாசிக்கிறதற்குப் புத்தியில்லாத மந்த இருதயமுள்ளவர்களே," (லூக்கா 24:25)-ல் என்று நம்முடைய ஆண்டவர் இவர்களைப் பற்றி கூறுகிறார். இப்படிப்பட்டவர்கள் பசுமையான தைரியத்தைக்கொண்டு விலையேறப்பெற்ற வாக்குறுதிகளை இறுகப்பற்றிக் கொண்டு இவைகளை தங்களுக்கே சொந்தமாக்கிக்கொண்டு, தங்களுடைய நம்பிக்கையை விடாதிருக்கவேண்டும். "ஆகையால், மிகுந்த பலனுக்கேதுவான உங்கள் தைரியத்தை விட்டுவிடாதிருங்கள்" (எபி 10:35)

பிதாவை அனைவரும் கனப்படுத்துவதைப் போல அனைவரும் குமாரனை கனப்படுத்தும்படியாக இயேசுவை எல்லாவற்றிற்கும் மேலாக உயர்த்தி எல்லா நாமங்களுக்கும் மேலான நாமத்தை தேவன் கொடுத்திருக்கிறார். மேலும் ஏறக்குறைய 2000 வருட காலமாக இயேசுவுக்கு ஏற்ற மணவாட்டியை, தேவனுக்கு சுதந்திரராயும் இயேசுவுக்கு உடன் சுதந்திரராயும் தேவன் புது சிருஷ்டிகளை ஆயத்தப்படுத்திக் கொண்டிருக்கிறார். தேவன் இந்த உயர்நிலைக்கு, அங்கும் இங்கும் உள்ள மனுஷர்களுக்கு அழைப்பிதழைக் கொடுத்தார். இவர்களை மரண சாபத்திலிருந்து இலவசமாக மீட்க இயேசுவை அனுப்பினார். சகல காரியங்களிலிருந்தும் அவர்களை நீதிமான்களாக்கி மணவாளனுடைய அங்கத்தினர்களாக பாவித்தார். இவர்களை கிறிஸ்துவின் பள்ளியில் பயிற்றுவித்து, மரண பரியந்தம் விசுவாசமுள்ள இருதயத்தோடு முழுமையான கீழ்ப்படிதலை இவர்களிடம் எதிர்பார்க்கிறார். தேவைப்படும்போதெல்லாம் நியாயமான உதவிகளைத் தந்து ஜெயிப்பவர்களாய் மட்டுமல்ல முற்றிலுமாக ஜெயம் பெற்றவர்களாக மாற்ற உறுதியளிக்கிறார்.

### இயேசுவின் குணம்

கிறிஸ்தவ வாழ்க்கையில் வெற்றி காணக்கூடிய ஒவ்வொரு நபரும் இயேசுவின் குணங்களைப் பிரதிபலிக்க வேண்டும். மற்றும் முடிவு பரியந்தம் தேவனோடு இசைந்து கிரியை செய்ய வேண்டும். இதன் காரணமாக நம்முடைய விசுவாசத்தோடு சகல விதமான நற்பண்புகளையும் நாம் கூட்டிக்கொள்ளவேண்டும். நம்முடைய பிதாவாகிய தேவனுடைய வழி நடத்துதலையும், கிறிஸ்துவோடுகூட நாம் பெறும் கசப்பான அனுபவங்களையும், கிறிஸ்துவின் பள்ளியில் பயின்று, இந்த குணங்களில் நாம் வளர்ச்சி அடையலாம். "நம்முடைய சிலுவையை எடுத்துக்கொண்டு அனுதினமும் அவரைப் பின்பற்ற வேண்டும். (மாற்கு 10:21)

நிர்பந்தமான அன்பை நீங்கள் ஏற்றுக் கொண்டதனிமித்தம் உங்கள் அழைப்பை உறுதிபடுத்திக் கொண்டீர்கள். உங்களை முழுமையாக அர்ப்பணித்து மிக நெருங்கியிருக்கும் மகிமையான பூரண நிலையை அடைவதற்கு ஆயத்தப்பட்டும் கொண்டிருக்கிறீர்கள், தைரியம் இழந்து சோர்ந்து போய் விடாதீர்கள். உங்களுக்குக் கொடுக்கப்பட்ட வாக்குறுதிகளை முன்வையுங்கள். தேவனுடைய சமுகத்தில் உங்களை கறையற்றவர்களும், பிழையற்றவர்களுமாய் தேவனுக்கு முன் நிறுத்துவதற்கு தேவனுடைய வல்லமை உங்களுக்குள் கிரியை செய்கிறது என்று இயேசு உறுதியளிக்கிறார்.

### தேவனுடைய வல்லமை

பரலோகத்திலும், பூமியின் மேலும் ஒவ்வொரு மரங்களும், செடி கொடிகள் மேலும் மற்ற எல்லாவற்றின்

மேலும், தேவனுடைய வல்லமை வெளிப்படுத்தப்படுகிறது. மேலும் அவருடைய வல்லமையினால் மண்ணிலிருந்து மனிதன் உருவாக்கப்பட்டான். மனிதனுடைய சிருஷ்டிப்பை நாம் சித்தரிக்கும்போது - சரீரம், கரங்கள், கண்கள், வாய் மற்றும் உள்ளுறுப்புகள் அனைத்தும் மண்ணினால் உருவாக்கப்பட்டது. அவருடைய ஜீவசுவாசம் அவனுக்குள் பிரவேசிக்கும் வரை அவனுக்குள் ஜீவனும், வல்லமையும், எந்த செயலாற்றமும் இல்லை. ஆனால் ஜீவன் பெற்றவுடன் அந்த மண் கண்களைக் கொண்டு பார்த்தது, பேசியது, யோசித்தது - அவன் தான் மனிதன். வீழ்ச்சியடைந்த 6000 வருடங்களுக்குப் பின்னும், மனிதன் அற்புதமாக சிருஷ்டிக்கப்பட்டான் என்று வசன ஆதாரங்கள் மூலமாக நிரூபிக்கப்படுகிறது. (சங்கீதம் 139:14)

இப்படியிருக்க புது சிருஷ்டிகளை உருவாக்குவதற்கு தேவனுடைய வல்லமை வரையறுக்கப்பட்டுள்ளது என்று சொல்லுவோமா ? ஆதாமைப் பொறுத்த வரையில் தேவன் உயிரற்ற நிலையில் சிருஷ்டித்தாரா? மேலும் ஆதாமை சிருஷ்டிக்கும் பொழுது அவருக்குள் முழுமையான குணாதிசயங்களை சிருஷ்டிக்க வில்லை. ஆதாம் பெற்ற அனுபவங்களே அவருக்குள் குணாதிசயங்களை சிருஷ்டித்தது. புது சிருஷ்டிகள் உருவாக்கப்படுவதற்கு தேவன் நம்முடைய பழைய சரீரங்களைப் பயன்படுத்த அனுமதிக்கிறார். சிருஷ்டிப்பு பூரணமடையும்போது புதிய சரீரங்களைக் கொடுக்கிறார். அந்த ஒரு குணாதிசயம் நமக்குள் வளர்ச்சியடைவதற்கு நாம் தேவனோடு இசைந்து கிரியை செய்ய வேண்டும். ஆனால் தேவன் நமக்குள் எவ்வாறு கிரியை செய்கிறார் ?

அவருடைய ஆவியினாலே என்று வசனங்கள் பதிலளிக்கிறது. அவருடைய வார்த்தைகள் ஆவியாயும், ஜீவனாயும் இருப்பதை நம்முடைய ஆண்டவருடைய வார்த்தைகள் தெளிவாக விவரிக்கிறது. ஆகவே விலையுயர்ந்த வாக்குத்தத்தங்களை நம்முடைய நல்ல இருதயங்களில் விதைத்து, நீர்ப்பாய்ச்சும்பொழுது அதிகமான பலன் கொடுப்பதற்கு தேவன் நம்மை வழிநடத்துகிறார். நாம் விதைக்க வேண்டும், நீர்ப்பாய்ச்ச வேண்டும். தேவனே விளையச் செய்கிறவர்.

நாம் இவைகளை செய்வோமேயானால் தேவனுடைய இராஜ்யத்தில் நித்திய மகிழ்ச்சிகளைப் பெறுவதற்கு நமக்கு அதிகமாக வாய்ப்பளிக்கப்படும் என்று வசனங்கள் உறுதியளிக்கிறது.

ஒருவர் இவைகளில் குறைவுபட்டால், ஒருவருடைய ஆவிக்குரிய வளர்ச்சி குறைவுபட்டால் அவர்கள் தங்களைத் தாங்களே ஆராய்ந்து நிதானிக்க வேண்டும். வயலில் நல்ல விளைச்சலை எதிர்ப்பார்க்கும் ஒரு விவசாயியைப் போல இருக்க வேண்டும்.

அவர் தன் வயலை நன்றாக உழுது, களைகளை அகற்றி தானியங்கள் விளைவதற்கு அவர் நன்கு ஆயத்தமாகக் காத்திருந்தார். ஆனால் எந்த விதமான பயிறுகளையும் விதைக்க வில்லை. அவர் பயிறுகள் விதைப்பதை தவிர்த்து விட்டார். இப்படியாக நாம் இருந்துவிடாமல் நம்முடைய நீதிமானாக்கப்பட்ட நிலை, அர்ப்பணிக்கப்பட்ட நிலை மற்றும் நம்முடைய சுத்திகரிக்கப்பட்ட நிலைகளைக் குறித்து தேவன் தந்த விலையேறப்பெற்ற வாக்குறுதிகளை நமக்குள் விதைக்க வேண்டும்.

இவைகளை நமக்குள் சொந்தமாக்கிக் கொள்ள வேண்டும். நம்முடைய இருதயத்தின் ஆழத்தில் விதைத்து, நீர்ப்பாய்ச்சி, தொடர்ந்து அதை கவனிக்க வேண்டும். அப்பொழுது நம்முடைய மகிமையான விளைச்சலைக் காணலாம். ஒரு விதைக்குள் இருக்கும் வல்லமையைப் போல தேவனுடைய வார்த்தைகளுக்குள் அவருடைய வல்லமை மறைந்தி ருக்கிறது. ஆகவே, நல்ல நிலத்தில் விதைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டால், தேவன் பலனளிக்கக் கூடியவராக இருக்கிறார்.



நற்குணம்

# நற்குணத்தின் வழியாக ஜெயம் கொள்ளுதல்

"உன்னதமானவருக்கு விரோதமாக வார்த்தைகளைப் பேசி, உன்னதமானவருடைய பரிசுத்தவான்களை ஒடுக்கி, காலங்களையும் பிரமாணங்களையும் மாற்ற நினைப்பான்; அவர்கள் ஒரு காலமும், காலங்களும், அரைக்காலமும் செல்லுமட்டும் அவன் கையில் ஒப்புக்கொடுக்கப்படுவார்கள்." தானியேல் 7:25

**Jeff Mezera**

அப்போஸ்தலரின் காலம் நிறைவடைந்து சில நாட்களுக்குப் பின் கிறிஸ்தவ சபை நீதியுள்ள நடக்கையிலிருந்து விலகிச் சென்றது. வெகுசில சபைகளில் சிலர் மட்டுமே தங்களுடைய வாழ்க்கையில் நற்குணத்தை வெளிப்படுத்தினார்கள். ஒழுக்கக்கேடு துன்மார்க்கத்துக்கு வழி நடத்தியது. துன்மார்க்கம் மற்றவர்களை துன்புறுத்த வழி நடத்தியது. இப்படிப்பட்ட உபத்திரவங்கள் மரணத்திற்கு வழி நடத்தினது. வேதாகம விளக்கம் உரைப்பவரின் குறிப்பைக் காணலாம் :

"ஆதிகாலத்தில் அப்போஸ்தலரின் நாட்களில் கிறிஸ்துவின் சபையில் இருக்கும் சிலர் நற்குணம் இன்றி போதுமான விசுவாசத்தைக் கொண்டிருந்தனர். சிலர் உண்மையில் தேவ பக்தியை நடைமுறைப்படுத்த விரும்பினார்கள். அவர்களுக்குள் கரடுமுரடான பக்குவமற்ற கோட்பாடுகளும் நன்மை தராத அவநம்பிக்கைகள் காணப்பட்டாலும் மற்றவர்கள் மெச்சிக் கொள்வதற்காக மதம் என்னும் கட்டுப்பாட்டிற்குள் இருந்தனர்.

சபையில் கிறிஸ்தவர்களுடைய மதிப்பு பயனற்றதாக இருக்கிறதா? நற்குணமுள்ள ஒரு கிறிஸ்தவன் பயனற்று இருக்கிறாரா? நம்முடைய வாழ்க்கையில் இயேசு கிறிஸ்துவைப் பின்பற்ற விரும்பினால் நாம் மிகவும் உயர்வான குணநலன்களைப் பெற்றுக் கொள்ள நாட வேண்டும் அல்லவா! இப்படியாகத்தான் நாம் ஜெயம் பெற வேண்டும் அல்லவா! வரலாற்று முழுவதிலும், இயேசுவின் சீஷர்கள், பேதுரு தம்முடைய இரண்டாம் நிருபத்தில் குறிப்பிட்ட குணநலன்களை முழுமையாகப் பெற்றுக் கொள்ள முயற்சித்தனர்.

2 பேதுரு 1:3-8 - "தம்முடைய மகிமையினாலும் காருணியத்தினாலும் நம்மை அழைத்தவரை அறிகிற அறிவினாலே ஜீவனுக்கும் தேவபக்திக்கும் வேண்டிய யாவற்றையும், அவருடைய திவ்விய வல்லமையானது நமக்குத் தந்தருளினதுமன்றி, இச்சையினால் உலகத்திலுண்டான கேட்டுக்குத் தப்பி, திவ்விய சுபாவத்துக்குப் பங்குள்ளவர்களாகும்பொருட்டு, மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களும் அவைகளினாலேநமக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. இப்படியிருக்க, நீங்கள் அதிக ஜாக்கிரதை யுள்ளவர்களாய் உங்கள் விசுவாசத்தோடே தைரியத்தையும், தைரியத்தோடே ஞானத்தையும், ஞானத்தோடே இச்சையடக்கத் தையும், இச்சையடக்கத்தோடே பொறுமையையும், பொறுமையோடே தேவபக்தியையும், தேவபக்தி யோடே சகோதரசி நேகத்தையும், சகோதரசி நேகத்தோடே அன்பையும் கூட்டி வழங்குங்கள். இவைகள் உங்களுக்கு உண்டாயிருந்து பெருகினால், உங்களை நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை அறிகிற அறிவிலே வீணரும் கனியற்றவர்களுமாயிருக்கவொட்டாது."

விசுவாசத்திற்குப் பின் குறிப்பிடப்படும் முதல் காரியம் நற்குணம் ஆகும். இந்த பகுதியில் சொல்லப்பட்ட எல்லா குணங்களையும் நாம் வெளிப்படுத்துவதற்கு நாம் முயற்சித்தாலும் நற்குணம் அதிகமாக வலியுறுத்தப்படுகிறது.

நம்முடைய அழைப்பையும் தெரிந்து கொள்ளுதலையும் உறுதிப்படுத்திக் கொள்வதற்கு இக்குணங்கள் நமக்குள் வளர்த்துக் கொள்ள வேண்டும் என்று அப்போஸ்தலர் பேதுரு நம்மை ஊக்குவிக்கிறார். சரியான குணநலன்களை நமக்குள் வளர்ச்சியடைய செய்வதற்கு இந்த நற்குணத்தை நாம் ஒருக்காலும் தவிர்த்து விடமுடியாது. நம்முடைய ஆவிக்குரிய இலக்கை அடைந்து வெற்றிபெற இந்த குணத்தில் நாம் நிதானமாக வளர்ச்சியடைய வேண்டியது மிக அவசியமாக இருக்கிறது.

பேதுருவுக்குத் தோல்வி ஒரு அந்நியமான காரியமாக இருந்ததில்லை. எந்தவித தவறான நோக்கங்கள் இன்றி செய்யக்கூடிய தவறுகளின் விளைவுகளையும், அதைத் தொடர்ந்துவரும் ஆழமான வேதனைகளைக் குறித்து அவர் நன்கு அறிந்திருந்தார். ஆகவே அவருடைய நிருபத்தில் இயேசுவின் ஒவ்வொரு சோதனையிலும் ஒவ்வொரு ஏமாற்றத்திலும் அவரைப் பின்பற்ற வேண்டும் என்று நமக்கு ஆலோசனை கூறுகிறார்.

தோல்விகள் அடைந்தாலும் நம்முடைய நற்குணங்களை தொடர்ச்சியாக வெளிப்படுத்தக் கூடிய கிரியைகள் நம்மிடத்தில் காணப்பட்டால் நிச்சயமாக நாம் ஜெயம் பெறலாம் என்று பேதுரு நமக்கு உறுதியளிக்கிறார். இதில் நாம் நிலைத்திருந்தால் வெற்றிக்கு இதுவே திறவுக்கோல் ஆகும். ----- நம்முடைய கிறிஸ்தவ ஓட்டத்தில் எபிரெயர் 12:3 - "ஆகையால் நீங்கள் இளைப்புள்ளவர்களாய் உங்கள் ஆத்துமாக்களில் சோர்ந்துபோகாதபடிக்கு, தமக்கு விரோதமாய்ப் பாவிகளால் செய்யப்பட்ட இவ்விதமான விபரீதங்களைச் சகித்த அவரையே நினைத்துக்கொள்ளுங்கள்" என்று எச்சரிக்கப்படுகிறோம்.

**பேதுரு எழுதின இரண்டாம் நிருபத்தின் பின்னனி**

அதில் பேதுரு எழுதின முதல் அதிகாரத்தின் பின்னனியைக் குறித்து நாம் பார்ப்போம். பேதுரு நற்குணங்களை வரிசைப்படுத்துவதற்கு முன் "இப்படியிருக்க" எப்படியிருக்க? மூன்றாம் வசனத்தில் நமக்குத் தேவைப்பட்ட அனைத்தையும் தேவன் கொடுத்திருக்கிறார் என்று தெளிவாக விவரிக்கப்படுகிறது. பரிசுத்த ஆவியின் வழியாக அவருடைய குமாரனின் சீஷர்களாக இருப்பதற்கு நம்மை அழைத்திருக்கிறார். இந்த ஒரு தெய்வீக வல்லமையினால் மட்டுமே பேதுரு வரிசைப்படுத்தின துர்க்குணங்களை நம்மைவிட்டு முழுமையாக அகற்ற முடியும்.

2 பேதுரு 1:3 - "தம்முடைய மகிமையினாலும் காருணியத்தினாலும் நம்மை அழைத்தவரை அறிகிற அறிவினாலே ஜீவனுக்கும் தேவபக்திக்கும் வேண்டிய யாவற்றையும், அவருடைய திவ்விய வல்லமையானது நமக்குத் தந்தருளினதுமன்றி," 5-ம் வசனத்தின் துவக்கத்தில் பேதுரு நீங்கள் பெற்ற நற்குணங்களோடு வரிசைப்படுத்தின இந்த குணங்களையும் அதிகரிக்க ஊக்குவிக்கிறார்.

"கூடுதல்" என்ற வார்த்தை, epichoregeo என்ற பழமை வாய்ந்த கிரேக்க மொழியிலிருந்து மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. இதற்கு தாராளமான அல்லது திறந்த மனப்பான்மையுள்ள என்று பொருள்படும். பேதுருவால் வரிசைப்படுத்தப்பட்ட நற்குணங்கள் ஒன்றோடொன்று பிண்ணி பிணைந்திருக்கக்கூடிய ஒரு நிலைமையைக் காணலாம்.

நமக்குள் கிறிஸ்தவ குணநலன்கள் வளர்ச்சியடை வதற்கு நாம் தேவனோடு இசைந்து கிரியை செய்தால் மட்டும் போதாது. நாம் கிறிஸ்துவின் சரீர அங்கத்தினர்களோடும்கூட இணைந்து செயல்படவும் வேண்டும். இப்படி ஒருமித்து செயல்பட்டால் அன்பிற்கும் சகல நற்கிரியைகளுக்கும் நாம் ஒருவரிலொருவர் ஊக்குவிக்கலாம். எபிரெயர் 10:23, 24.

2 பேதுரு 1:3 - "தம்முடைய மகிமையினாலும் காருணியத்தினாலும் நம்மை அழைத்தவரை அறிகிற அறிவினாலே ஜீவனுக்கும் தேவபக்திக்கும் வேண்டிய யாவற்றையும், அவருடைய திவ்விய வல்லமையானது நமக்குத் தந்தருளினதுமன்றி,"

2 பேதுரு 1:5 - "இப்படியிருக்க, நீங்கள் அதிக ஜாக்கிரதையுள்ளவர்களாய் உங்கள் விசுவாசத்தோடே தைரியத்தையும், தைரியத்தோடே ஞானத்தையும்," இதில் "இப்படியிருக்க" என்று பேதுரு வசனத்தைத் துவக்குகிறார். இதற்கான காரணத்திற்குரிய பதிலை மூன்றாம் வசனத்தில் காணலாம். அதில் தேவன் தம்முடைய தெய்வீக வல்லமை வழியாக நாம் ஜீவனையும், தெய்வீக சுபாவத்தைப் பெறுவதற்கான சகல காரியங்களையும் தேவன் கொடுத்திருப்பதாக இவர் விவரிக்கிறார். முன்னதாகவே வாக்களிக்கப்பட்ட பரிசுத்த ஆவியினாலும், தேவனுடைய மகிமையை அறியக்கூடிய அறிவினாலும் நமக்குள் இருக்கும் அழியக்கூடிய சுபாவத்தைக் களைந்து கிறிஸ்தவ வளர்ச்சிக்காக பேதுரு வரிசைப்படுத்தின சகல நற்குணங்களையும் பெற்றுக் கொள்ளலாம்.

2பேது 1:4 - "இச்சையினால் உலகத்திலுண்டான கேட்டுக்குத் தப்பி, திவ்விய சுபாவத்துக்குப் பங்குள்ளவர்களாகும்பொருட்டு, மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களும் அவைகளினாலேநமக்கு அளிக்கப்பட்டிருக்கிறது." நாம் மட்டுமே இந்த ஒரு காரியத்தில் வாஞ்சையுள்ளவர்களாய் இருக்கவில்லை என்பதை பேதுரு நமக்கு நினைப்பூட்டுகிறார். ஏனெனில், பிலி 1:6 - "நான் உங்களை நினைக்கிறபொழுதெல்லாம் என் தேவனை ஸ்தோத்திரிக்கிறேன்." பரிசுத்த ஆவியினாலும் தேவன் நமக்குப் படிப்படியாகக் கொடுக்கக்கூடிய வல்லமையினாலும் இந்த உலகத்திலுள்ள கேடான பாவங்களுக்கு நாம் தப்பித்துக் கொள்ள உதவி செய்கிறார். இதற்கு இசைவாக நம்முடைய சுயநலமான மனித விருப்பங்களையும் இயல்பான புரிந்து கொள்ளுதலையும் புறக்கணிக்க வேண்டும். அப்பொழுது நாம் ஒரு உயர்வான ஆவிக்குரிய வாழ்க்கையை தேட முடியும். தேவனுடைய வார்த்தைகளை ஆராய்ச்சி செய்வதினால் ஒருவர் இந்த முக்கியமான குணநலன்களில் வளர்ச்சியடையலாம். தேவன் நமக்குள் கிரியை செய்வதற்கு நாம் ஒவ்வொருவரும் தேவனோடு

இணைந்து செயல்பட வேண்டும். (பிலிப்பியர் 2:13, 14) இக்காரணத்திற்காகவே நாம் பெறக்கூடிய நற்குணங்கள் மிக முக்கியமானதாய் இருக்கிறது. ஆகவே அப்போஸ்தலர் பேதுரு இவைகளோடு விசுவாசத்தையும், நற்குணங்களையும், கூட்டி வழங்கும்படி வலியுறுத்துகிறார்.

நம்முடைய விசுவாசத்தை கிரியைகளினால் வெளிப்படுத்தாவிட்டால் நாம் நம்மை வளர்த்துக் கொள்வதற்கு ஏற்ற சோதனைகளை அனுமதிப்பதில்லை என்று பொருளாகும். உண்மையுள்ள கிறிஸ்தவர்கள் தொடர்ந்து வளர்ச்சியின் பாதையில் நடக்கவும், அவர்களை வழிநடத்துபவர் மேல் உள்ள விசுவாசத்தில் உறுதிப்படவும், தொடர்ந்து சோதிப்பதற்கு அனுமதிக்கப்படுகிறார்கள்.

**கிரியை செய்யக்கூடிய கிறிஸ்தவ கோட்பாடுகள்**

யாக்கோபு 2:22-26 - "விசுவாம் அவனுடைய கிரியைகளோடேகூட முயற்சிசெய்து, கிரியைகளினாலே விசுவாசம் பூரணப்பட்டதென்று காண்கிறாயே. அப்படியே ஆபிரகாம் தேவனை விசுவாசித்தான், அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது என்கிற வேதவாக்கியம் நிறைவேறிற்று; அவன் தேவனுடைய சிநேகிதனென்னப்பட்டான். ஆதலால், மனுஷன் விசுவாசத்தினாலேமாத்திரமல்ல, கிரியைகளினாலேயும் நீதிமானாக்கப்படுகிறானென்று நீங்கள் காண்கிறீர்களே. அந்தப்படி ராகாப் என்னும் வேசியும் தூதர்களை ஏற்றுக்கொண்டு வேறுவழியாய் அனுப்பிவிட்டபோது, கிரியைகளினாலே அல்லவோ நீதியுள்ளவளாக்கப்பட்டாள்? அப்படியே, ஆவியில்லாத சரீரம் செத்ததாயிருக்கிறதுபோல, கிரியைகளில்லாத விசுவாசமும் செத்ததாயிருக் கிறது."

நேர்மை மற்றும் கருணை ஆகிய குணங்களோடு நற்பண்பை பொறுத்தலாம். ஆயினும் கிரேக்க மொழியில் நற்பண்பு என்பதன் அடிப்படைப் பொருள் "தைரியமாகும்." இந்த தீமை நிறைந்த உலகத்தில் பலவிதமான சோதனைகளைச் சந்திப்பதற்கு நிச்சயமாக நமக்கு தைரியம் தேவைப்படுகிறது. மேலும் தீமை நம்மை சூழ்ந்து கொள்கையில் கிறிஸ்தவ கோட்பாடுகளில் நிலைத்து நிற்பதற்கு நமக்கு தைரியம் தேவைப்படுகிறது. தீமை செய்பவர்கள் மத்தியில் சுதந்திரம் செய்பவர்கள் மத்தியில் துணிவோடு நன்மை செய்ய தைரியம் தேவைப்படுகிறது. மேலும் நாம் சகலவிதமான நற்குணங்களில் நிலைத்து நிற்க தைரியம் தேவைப்படுகிறது.

கிரேக்க மொழியில் நற்பண்பு என்ற வார்த்தைக்கு உறுதியான மாற்றங்களை ஏற்படுத்துதல் என்று பொருள்படும். இந்த பாவமான உலகத்தில் மனுஷருக்கு முன்பாக நம்முடைய விசுவாசத்தை வெளிப்படுத்த தைரியம் தேவைப்படுகிறது. ஆனால் நம்முடைய வார்த்தைகளும், கிரியைகளும் இந்த தைரியத்தை பிரதிபலிக்க வேண்டும். ஏனெனில் வெளிப்படையான கிரியைகளில்லாமல் விசுவாசம் செத்ததாயிருக்குமே!

விசுவாசமுள்ள கிறிஸ்தவர் பல குணங்களில் வளர்ச்சியடைந்தாலும் பல குணங்களுக்கு எதிராக போர்த்தொடுக்க வேண்டும். ஆனால் தேவன் நம் பட்சத்தில் இருப்பதால், அவருடைய தெய்வீக வல்லமையினால் நமக்கு தேவைப்பட்ட உதவிகளை அவர் செய்வார். மேலும் நாம் தோல்வியடைவதற்குக் காரணமாயிருக்கும் நம்முடைய பாவங்களை மேற்கொள்வதற்கு உதவி செய்வார்.

**பாவத்தை தடுத்து நிறுத்துதல்**

விசுவாசம் வளர்ச்சியடையும் போது நாம் பாவத்தை எதிர்த்து நிற்கும் தைரியமும் அதிகரிக்கிறது. தேவனுடைய வார்த்தையின் ஆராய்ச்சியின் மூலமாகவும், தனிப்பட்ட முறையில் பெறக்கூடிய அனுபவத்தின் மூலமாகவும் கிறிஸ்துவின் கோட்பாடுகளுக்கு இசைவாக நம்முடைய வாழ்க்கையை நடத்திக் கொள்வதற்கு ஏற்ற ஞானத்தைப் பெறுவோம். அப்பொழுது நாம் பரலோகப்பிதாவுக்கு நெருங்கிச் சென்று அவர்களுக்குத் தேவைப்படும் நற்பண்புகளை அதிகமாய் பெறுவோம். சின்ன சின்ன ஆதாயங்களினால் நாம் எப்பொழுதும் உற்சாகத்தை இழக்கக்கூடாது. ஏனெனில், சின்ன சின்ன ஆதாயங்களின் மூலம் நாம் நித்தியமான பலனைப் பெறலாம். மேலும் கிறிஸ்துவின் வழியாக மட்டுமே நாம் இவ்வனைத்துக் காரியங்களைச் செய்ய முடியும். சங்கீதம் 23:3 - "அவர் என் ஆத்துமாவைத் தேற்றி, தம்முடைய நாமத்தினிமித்தம் என்னை நீதியின் பாதைகளில் நடத்துகிறார்."

ஒரு சபையாகவும் இந்த நற்பண்புகளை நாம் வெளிப்படுத்த முடியும். நாம் ஒருவரையொருவர் ஊக்குவித்து இராஜ்யத்தின் நற்சுவிசேஷத்தை (நற்செய்தியை) அறிவிக்கும்போதும் நம்மை அழைத்த தேவனுக்கு முன்பாக நம்முடைய

நற்பண்புகளை வெளிப்படுத்தக்கூடியவர்களாக இருப்போம்.

**நற்குணங்களின் வழியாக வெற்றி பெறுதல்**

ரோமர் 6:13 - "நீங்கள் உங்கள் அவயவங்களை அநீதியின் ஆயுதங்களாகப் பாவத்திற்கு ஒப்புக்கொடாமல், உங்களை மரித்தோரிலிருந்து பிழைத்திருக்கிறவர்களாகத் தேவனுக்கு ஒப்புக்கொடுத்து, உங்கள் அவயவங்களை நீதிக்குரிய ஆயுதங்களாகத் தேவனுக்கு ஒப்புக்கொடுங்கள்."

2பேதுரு 1:4 - "இச்சையினால் உலகத்திலுண்டான கேட்டுக்குத் தப்பி, திவ்விய சுபாவத்துக்குப் பங்குள்ளவர்களாகும்பொருட்டு, மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களும் அவைகளினாலேநமக்கு அளிக்கப்பட்டிருக்கிறது."

பேதுரு குறிப்பிட்ட தெய்வீக சுபாவத்தை இந்த உலகத்தின் கேட்டிற்குத் தப்பித்துக் கொண்டோம். மற்றும் பெறமுடியாது ஆனால் அதற்கு ஒரு புதிதான ஜீவனைப் பெறவேண்டும். இவ்வாக்குறுதியை சுதந்தரிப்பதற்கு நாம் தேவனோடு இணைந்து கிரியை செய்ய வேண்டும். (2 பேதுரு 1:10, 11) தேவனுடைய ஆயுதமான அறிவினால் நாம் இவ்வளவு பெரிதும் விலையேறப் பெற்றதுமான வாக்குத்தத்தங்களைப் பெற்றுக் கொண்டு, இறுதியில் திவ்விய சுபாவத்துக்குப் பங்குள்ளவர்களாகிறோம்.

ஆனால் தெய்வீக வல்லமை மற்றும் தெய்வீக சுபாவம் இந்த சூழ்நிலையில் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. நாம் தேவனுடைய தெய்வீக வல்லமைக்கு முழுமையாக நம்மை அர்ப்பணித்தால் அவருடைய தெய்வீக பாவத்திலும் பங்கு பெறுவோம். இது தானாக நடைப்பெறக்கூடிய ஒரு செயலல்ல. எல்லாக் காரியங்களிலும் விடாமுயற்சியோடு விசுவாசத்துடன் பேதுரு தம்முடைய நிருபத்தில் நமக்கு மு நிலைத்திருக்கக்கூடிய நிலையை களை வேண்டும். அப்பொழுது கிறிஸ்துவின் வாசலுக்கு பிரவேசிக்கக்கூடிய வாசலைக் காணலாம். 2 பேது 1:11 - "இவ்விதமாய், நம்முடைய கர்த்தரு இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவினுடைய நித்தி ராஜ்யத்துக்குட்படும் பிரவேசம் உங்களுக்கு பரிபூரணமாய் அளிக்கப்படும்."

இந்த குணங்களை நமக்கு சொந்தமாக்கி கொள்வதற்கு விடாமுயற்சியாக செயல்பட்டால் ஒ தேறின கிறிஸ்தவனாக வளர்ச்சியடையலாம். நா தனித்து பிரிக்கப்பட்டு நமக்குள் தெய்வீக கிரி மூலம் சுத்திகரிக்கப்படுகிறோம். இந்த காரிய மனுஷரால் மட்டுமே செய்து முடிக்க இயலாது. ரோம 12:2 - "நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத் வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையு பிரியமும் பரிபூரணமுமானசித்தம் இன்னதென் பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மன புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்."

நம்முடைய முயற்சிகளில் நாம் நம்பிக்கை கொண்டிருந்தால் நாம் நல்மனசாட்சியோடும் முயற் செய்தால் தேவனுடைய தெய்வீக வல்லமையினா கிடைக்கும் உதவிகளை நாம் நிச்சயமா எதிர்பார்க்கலாம். இவைகள் இந்த உலகத்தி கேட்டுக்கு நம்மை தப்புவித்து உண்மையான தெய் பக்தியை நமக்குள் வளர்ச்சியடைவதற்கு தேவையான சகல உதவிகளையும் செய்யும். மேலு இக்காரியங்கள் நம்மை தெய்வீக சுபாவத்திற் பங்குள்ளவர்களாக மாறுவதற்கு வழி நடத்து பிலிப்பியர் 4:8 - "கடைசியாக, சகோதரே உண்மையுள்ளவைகளெவைகளோ, ஒழுக்கமுள் வைகளெவைகளோ, நீதியுள்ளவைகளெவைகளே கற்புள்ளவைகளெவைகளோ, அன்புள் வைகளெவைகளோ, நற்கீர்த்தியுள்ளவை ளெவைகளோ, புண்ணியம் எதுவோ, புகழ் எதுவே அவைகளையே சிந்தித்துக்கொண்டிருங்கள்."



# அறிவு

"தேவனையும் நம்முடைய கர்த்தராகிய இயேசுவையும் அறிகிற அறிவினால் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் பெருகக்கடவது. தம்முடைய மகிமையினாலும் காருணியத்தினாலும் நம்மை அழைத்தவரை அறிகிற அறிவினாலே ஜீவனுக்கும் தேவபக்திக்கும் வேண்டிய யாவற்றையும், அவருடைய திவ்விய வல்லமையானது நமக்குத் தந்தருளினதுமன்றி," (2பேதுரு 1:2,3)

**Wade Austin**

பேதுரு இயேசுவோடு பெற்றிருந்த அனுபவங்களை மீண்டும் நினைவு கூறும் பொழுது அவர் சிந்தனைக்குள் இந்த எச்சரிப்பான வசனம் வெளிப்பட்டது. இந்த அனுபவங்கள் தனக்கு அற்புதமான பாடங்களைக் கற்றுக்கொடுத்ததாக பரிசுத்தவான்களுக்கு நினைவு படுத்தினார். அந்த பாடங்களை மற்றவர்களுக்குக் கற்றுக்கொடுப்பதற்கும் தான் கற்றுக்கொள்வதற்கும் அதிகமாக அவரை ஊக்குவித்தது.

நாம் கற்றுக்கொள்வதற்காக தீர்க்கதரிசிகள், அப்போஸ்தலர்கள் மற்றும் இயேசுவின் வார்த்தைகள் பதிவு செய்யப்பட்டுள்ளது. இவைகளை நாம் எப்பொழுதும் சிந்தித்து நம் இருதயங்களில் பசுமையாகக் காத்துக் கொள்ளவேண்டும். இப்படிப்பட்ட அறிவின் வளர்ச்சியானது, நாம் செய்த பலியின் உடன்படிக்கையை, விசுவாசத்தோடு நிறைவேற்றுவதற்கு ஏற்ற காரியங்களை அதிகமாக கற்றுக்கொள்வதற்கு ஊக்குவிக்கிறது.

ஆதாமின் வீழ்ச்சிக்குரிய பலன்கள் மற்றும் அதன் அஸ்திபாரமான காரியங்களை, புது சிருஷ்டியான பேதுருவின் பலன்கள் தோற்கடித்தது. கடல் வாசியாக இருந்த மனுஷன் இப்பொழுது இயேசுவின் பார்வையில் மனிதரைப் பிடிக்கக்கூடியவராக மாறினார்." என் பின்னே வாருங்கள்,உங்களை மனுஷரைப் பிடிக்கிறவர் களாக்குவேன் என்றார்" (மத்தேயு 4:19)

"நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து எனக்கு அறிவித்தபடி நான் என் கூடாரத்தை விட்டுப்போவது சீக்கிரத்தில் நேரிடுமென்று அறிந்து, இந்தக் கூடாரத்தில் நான் இருக்குமளவும் உங்களை நினைப்பூட்டி எழுப்பிவிடுவது நியாயமென்று எண்ணுகிறேன்" (2பேது 1:13) சகோதரர்கள் சத்தியத்தில் மிக உறுதியாக நிலைத்திருந்தாலும் அவர்களுக்கு இந்த எச்சரிப்புகளை கட்டாயமாக்க் கொடுக்க வேண்டுமென்று பேதுரு உணர்ந்தார். ஒருவரை முழுமையாக ஊக்குவித்து, உற்சாகப்படுத்த வேண்டுமென்பதே அடிப்படை சிந்தனையாக இருந்தது. நாம் ஒவ்வொருவரும் சத்தியத்தையும் பெற்றிருக்கிறோம். சில நேரங்களில் நம்முடைய சிந்தைகளில் தவறியும் விடுகிறோம். நாம் இந்த இரண்டு காரியங்களில் சரியாக இருந்தால் புரிந்துகொள்ளுதலில் குறைவாகக் காணப்படுகிறோம். நாம் முழுமையாக எழுந்திராவிட்டால் (விழித்திரா விட்டால்) நம்முடைய தவறுகளை உணர இயலாது. நம்முடைய புரிந்து கொள்ளுதலையும் திருத்திக்கொள்ள இயலாது. இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் நம்முடைய நோக்கங்கள் எவ்வளவு உண்மையாக இருந்தாலும், சத்தியத்தையே இழக்கக் கூடிய அபாயம் நேரிடலாம்.

ஸ்தாபிக்கப்பட்ட சத்தியங்களை தொடர்ந்து உறுதி செய்துகொண்டு, முழுமையாகப் புரிந்துகொள்ளாத காரியங்களில் நாம் தொடர்ந்து தெளிவு பெறவேண்டும். இந்த ஒரு செயல் முறையில் வசனங்களின் சரியான விளக்கங்களைப் புரிந்து கொள்ளலாம். இன்னும் தேவனுடைய திட்டங்களை ஆழமாகப் புரிந்து கொள்ளலாம்.இப்படியாக நாம் அதிகமாக கற்றுக் கொள்ளும் பட்சத்தில் தேவனை அறிந்து கொள்ளும் அறிவில் நாம் அதிகமாக வளர்ச்சி அடையலாம். சில காரியங்களை நாம் வித்தியாசமாகப் புரிந்துகொள்வதற்கு வாய்ப்புகள் உண்டா? ஆம், நம்முடைய புரிந்து கொள்ளுதலில் தவறுகள் நேரிட்டால் இப்படிப்பட்ட சூழ்நிலைகள் நேரிடும்.

எச்சரிப்பின் மூலமாகவும், வேதவாசிப்பின் மூலமாகவும் தங்களுடைய சிந்தையை ஊக்குவித்துக்கொள்பவர், பேதுருவின் ஆலோசனையை பின்பற்றுகிறவராக இருப்பார். "இதினிமித்தம், இவைகளை நீங்கள் அறிந்தும், நீங்கள் இப்பொழுது அறிந்திருக்கிற சத்தியத்தில் உறுதிப்பட்டிருந்தும், உங்களுக்கு இவைகளை எப்பொழுதும் நினைப்பூட்ட நான் அசதியாயிரேன். நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து எனக்கு அறிவித்தபடி நான் என் கூடாரத்தை விட்டுப்போவது சீக்கிரத்தில் நேரிடுமென்று அறிந்து, இந்தக் கூடாரத்தில் நான் இருக்குமளவும் உங்களை நினைப்பூட்டி எழுப்பிவிடுவது நியாயமென்று எண்ணுகிறேன்."(2பேதுரு 1:12,13) இவைகளை நினைப்பூட்டுவதன் மூலம், ஒரு கிறிஸ்தவ வாழ்க்கைக்குத் தேவையான காரியங்களை நாம் கற்றுக்கொள்ளலாம். தான் பெற்றிருக்கும் அறிவு அல்லது ஞானத்தினால் ஒருவர் மற்றவருக்கு முன்பாக மேன்மை பாராட்டக்கூடாது. ஒவ்வொருவரும் தாங்கள் பெற்ற அடிப்படையான சத்தியங்களை மற்றவர்களுக்கு நினைப்பூட்ட கடமை பெற்றிருக்கிறார்கள். நித்தமும் வேதத்தை ஆராய்ந்து பார்த்து நற்குணசாலிகளாக இருக்கிறார்கள். ஒவ்வொரு மூப்பரும் போதகரும் தங்களுடைய மாணவர்கள் மேல் அன்போடு கவனம் செலுத்த வேண்டும். போதிக்கக் கூடியவர்களின் போதனைகள் அனைத்தையும், கேட்கக்கூடியவர்கள் முழுமையாக ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று எதிர்ப் பார்க்கக்கூடாது. ஒருவொருவரும் தாங்கள் பெற்ற பரிசுத்த ஆவியின் வழியாக தங்களுடைய தனிப்பட்ட முயற்சியினால் வேதத்தை கற்றுக் கொள்ளவேண்டும். ஒருவருடைய போதகத்தினால் மட்டும் நாம் சத்தியங்களை கற்றுக்கொள்வது போதாது. தங்களுடைய சுய முயற்சியினாலும் வேதவாசிப்பினாலும்,

ஆராய்ச்சியினாலும் கற்றுக்கொள்வது மிக அவசியமாயிருக்கிறது.

"வேதத்திலுள்ள எந்தத் தீர்க்கதரிசனமும் சுயதோற்றமான பொருளையுடையதாயிராதென்று நீங்கள் முந்தி அறிய வேண்டியது. தீர்க்கதரிசனமானது ஒருகாலத்திலும் மனுஷருடைய சித்தத்தினாலே உண்டாகவில்லை; தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டுப் பேசினார்கள். அவர் உலகத்தோற்றத்திற்கு முன்னே குறிக்கப் பட்டவராயிருந்து, தமது மூலமாய்த் தேவன்மேல் விசுவாசமாயிருக்கிற உங்களுக்காக இந்தக் கடைசிக் காலங்களில் வெளிப்பட்டார்.உங்கள் விசுவாசமும் நம்பிக்கையும் தேவன் மேலிருக்கும்படி, அவரை மரித்தோரிலிருந்து எழுப்பி, அவருக்கு மகிமையைக் கொடுத்தார்" (2பேதுரு 1:20,21)

இங்கு பரிசுத்த ஆவியே முக்கியத்துவம் பெறுகிறது. நாம் எந்த சத்தியத்தைப் பெற்றிருந்தாலும் அதை தேவனுடைய வல்லமையாகிய பரிசுத்த ஆவியின் வழியாகவே பெற்றிருக்கிறோம். தேவன் மனுஷனை தன்னுடைய கருவியாக பயன்படுத்துவதற்கு தேர்வு செய்தால், அவர்கள் சபையில் எந்த நிலையில் இருந்தாலும் சரி அவர்கள் பெறக்கூடிய மகிமை தேவனுக்கே உரியது. இப்படியிருக்க நாம் வேத வசனங்களை ஆராய்ந்து பார்ப்பதற்கு, தேவனுடைய வல்லமையை சார்ந்திருந்தால் நிச்சயமாக பேதுரு தன்னுடைய முதல் நிருபத்தில் உள்ள இரண்டாம் அதிகாரத்தில் விவரிக்கப்பட்டுள்ள தவறான உபதேசங்களைப் பின்பற்ற வாய்ப்பில்லை. மற்றொரு கோணத்தில் இதைப் பார்த்தால் நாம் ஆவிக்குரிய நித்திரையில் இருக்கும் பட்சத்தில், தேவன் நமக்கு வெளிப்படுத்தின சத்தியங்களைப் புரிந்து கொள்ளவே முடியாது.

நாம் அறிந்து கொள்ளவேண்டும் என்று பேதுரு விரும்பும் காரியங்களை 3-ம் அதிகாரத்தில் காணலாம். "பிரியமானவர்களே, இந்த இரண்டாம் நிருபத்தை இப்பொழுது உங்களுக்கு எழுதுகிறேன். பரிசுத்த தீர்க்கதரிசிகளால் முன்சொல்லப்பட்ட வார்த்தைகளையும், இரட்சகராயிருக்கிற கர்த்தருடைய அப்போஸ்தலராகிய எங்களுடைய கட்டளைகளையும் நீங்கள் நினைவுகூரும்படி இந்த நிருபங்களினால் உங்கள் உண்மையான மனதை நினைப்பூட்டி எழுப்புகிறேன்." (11பேதுரு 3:1, 2)

தீர்க்கதரிசிகள் மற்றும் அப்போஸ்தலர்களின் வசனங்களை நினைவு கூறும்படி பேதுரு நமக்கு கட்டளையிடுகிறார். அடிப்படையான உபதேசங்களைப் போதிப்பதற்கு முன்னதாகவே பவுலின் எழுத்துக்கள் மற்றும் மற்ற அப்போஸ்தலர்களின் வசனங்கள் எழுதப்பட்டிருப்பதை பேதுருவின் வார்த்தைகள் குறிப்பிடுகிறது. ஏனெனில் பேதுரு பல இடங்களில் அப்போஸ்தலனாகிய பவுலின் வார்த்தைகளை மேற்கோள் காட்டியுள்ளார்."மேலும் நம்முடைய கர்த்தரின் நீடிய பொறுமையை இரட்சிப்பென்று எண்ணுங்கள்; நமக்குப் பிரியமான சகோதரனாகிய பவுலும் தனக்கு அருளப்பட்ட ஞானத்தினாலே இப்படியே உங்களுக்கு எழுதியிருக்கிறான்" 2பேதுரு 3:15)

**பேதுருவின் எச்சரிப்பு**

"கடைசிநாட்களில் பரியாசக்காரர் வந்து, தங்கள் சுய இச்சைகளின்படியே நடந்து, அவர் வருவார் என்று சொல்லுகிற வாக்குத்தத்தம் எங்கே? பிதாக்கள் நித்திரையடைந்த பின்பு சகலமும் சிருஷ்டிப்பின் தோற்றமுதல் இருந்த விதமாயிருக்கிறதே என்று சொல்லுவார்கள்" (2பேதுரு 3:3,4) பேதுரு முன்னதாக அறிவித்தபடி இரண்டாம் அதிகாரத்தில் பரியாசக்காரர் என்ற வார்த்தை பொய் போதகர்களைக் குறிப்பிடப்படுகிறது. மேலும், யூதா 18-ம் வசனத்தில் காணப்படும் இதே வார்த்தைகள், இவ்விரண்டையும் பொதுவான குறிப்பாக இணைக்கிறது. இப்படிப் பட்டவர்களுக்கு எச்சரிப்பாக இருக்க வேண்டும் என்று யூதா நம்மை எச்சரிக்கிறார்.

"கர்த்தருடைய நாள் இரவிலே திருடன் வருகிறவிதமாய் வரும்; அப்பொழுது வானங்கள் மடமட என்று அகன்றுபோம், பூதங்கள் வெந்து உருகிப்போம், பூமியும் அதிலுள்ள கிரியைகளும் எரிந்து அழிந்துபோம்" (2பேதுரு 3:10) காணக்கூடிய சமுதாய ஒழுங்குகள் கடந்து செல்லும் நாள் வரைக்கும், சுவிசேஷ யுகத்தின் முடிவில் உபத்திரவத்தின் அக்கினியில் தேவனுடைய கரம் செயல்படுவதை அநேகர் அறியாதிருப்பார்கள் என்று பேதுரு கூறுகிறார். இந்த உபத்திரவ காலத்தின் துவக்கத்தில் பரிசுத்தவான்கள் மகிமை அடைவார்கள்.

"இப்படி இவைகளெல்லாம் அழிந்து போகிறதாயிருக்கிறபடியால் நீங்கள் எப்படிப்பட்ட பரிசுத்த நடக்கையும் தேவபக்தியும் உள்ளவர்களாயிருக்க வேண்டும்! தேவனுடைய நாள் சீக்கிரமாய் வரும்படிக்கு மிகுந்த ஆவலோடே காத்திருங்கள்; அந்த நாளில் வானங்கள் வெந்து அழிந்து, பூதங்கள் எரிந்து உருகிப்போம்" (2பேதுரு 3:11, 12)

பூமியின் மேல் வரும் உபத்திரவத்தைக் குறித்து நாம் சந்தோஷப்படலாமா? சபை மகிமை அடைவதையும், ஆயிரவருட ஆட்சியில் காணப்படும் புதிய வானங்களையும், புதிய பூமியையும் ஆயத்தப்படுத்தும் காலத்தையும் இந்த உபத்திரவ காலம் மிக நெருங்கியிருப்பதை எண்ணி மகிழலாம். இயேசு கற்பித்த பாடங்களில், பேதுருவின் மனதில் - சபை இந்த மகிமை அடைவதற்கான காரியம் மிகத்தெளிவாக பதிந்திருந்தது. "மேலும், நான் சென்று போனபின்பு இவைகளை நீங்கள் எப்பொழுதும் நினைத்துக்கொள்ள ஏதுவுண்டாயிருக்கும்படி பிரயத்தனம்பண்ணுவேன்" (2பேதுரு 1:15)

அடுத்து சபை மகிமை அடைவதன் அடையாளமான காரியங்களைக் குறித்து பேதுரு தொடர்ந்து பேசுகிறார். "அவருடைய வாக்குத்தத்தத்தின்படியே நீதி வாசமாயிருக்கும் புதிய வானங்களும், புதிய பூமியும் உண்டாகுமென்று காத்திருக்கிறோம்" 2பேதுரு 3:13. சபை இறுதியாக

மகிமைப்படுவதே நம்முடைய உண்மையான நம்பிக்கை என்று நமக்குத் தெளிவாகிறது.

**பேதுருவின் திறவு கோலான குறிப்புகள்**

ஜலப்பிரளயத்திற்கு முன் வாழ்ந்தவர்கள் மனப்பூர்வமாய் அந்த அறியாமையில் வாழ்ந்ததுபோல, அதாவது அவர்கள் அழிக்கப்படுவார்கள் என்று அறிந்தும் அவர்கள் வாழ்ந்ததுபோல, நம்முடைய இந்த நாட்களிலும் வசனத்தின் அறிவில் குறையுள்ளவர்களாக இருப்பதினால் பூமியை அழிப்பதற்கு வரும் படிப்படியான அழிவைக் குறித்து உணராதிருப்பார்கள் என்று பேதுரு எச்சரிக்கிறார். "இப்போதிருக்கிற இந்த உலம் அக்கினிக்கு இறையாக வைக்கப்பட்டிருக்கிறது" என்று மேலும் பேதுரு கூறுகிறார்.

இந்த ஒரு உபத்திரவம் மிகக்குறுகிய காலத்திற்கு உரியது என்று எதிர்பார்த்துவிடக் கூடாது என்று பேதுரு கூறுகிறார். ஏனெனில், "பிரியமானவர்களே, கர்த்தருக்கு ஒரு நாள் ஆயிரம் வருஷம் போலவும், ஆயிரம் வருஷம் ஒருநாள் போலவும் இருக்கிறதென்கிற இந்த ஒரு காரியத்தை நீங்கள் அறியாதிருக்க வேண்டாம்" (2பேதுரு 3:8) என்று பேதுரு குறிப்பிடுகிறார்.

தேவனுடைய கால கடிகாரம் நம்முடைய காலத்தைக் காட்டிலும் நீண்டதாக உள்ளது. நம்முடைய 24 மணி நேரம் கொண்ட ஒரு நாள் தேவனுக்கு கண் சிமிட்டும் நேரமாய் இருக்கிறது. சொல்லர்த்தமாக எடுத்துக் கொண்டால், தேவனுடைய ஒரு நாளுக்குள் நம்முடைய 365 நாட்கள் அடங்கும். ஆகவே தம்முடைய வாக்குறுதியைக் குறித்தும், சபை மகிமையடையும் காலத்தைக் குறித்தும் தாமதித்துக் கொண்டிருக்கிறார் என்று நாம் எண்ணி பொறுமையை இழந்து விடக் கூடாது. சபை நிறைவடைவதற்கு தேவனே தேவையான காலத்தை அனுமதிக்கிறார்." ஆகையால், பிரியமானவர்களே, இவைகள் வரக்காத்திருக்கிற நீங்கள் கறையற்றவர்களும் பிழையில்லாதவர்களுமாய்ச் சமாதானத்தோடே அவர் சந்நிதியில் காணப்படும்படி ஜாக்கிரதையாயிருங்கள். மேலும் நம்முடைய கர்த்தரின் நீடிய பொறுமையை இரட்சிப்பென்று எண்ணுங்கள்; நமக்குப் பிரியமான சகோதரனாகிய பவுலும் தனக்கு அருளப்பட்ட ஞானத்தினாலே இப்படியே உங்களுக்கு எழுதியிருக்கிறான்" (2பேதுரு 3:14,15) என்று பேதுரு கூறுகிறார்.

"ஆதலால் பிரியமானவர்களே, இவைகளை முன்னமே நீங்கள் அறிந்திருக்கிறபடியால், அக்கிரமக்காரருடைய வஞ்சகத்திலே நீங்கள் இழுப்புண்டு உங்கள் உறுதியிலிருந்து விலகி விழுந்துபோகாதபடிக்கு எச்சரிக்கையாயிருந்து, நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவின் கிருபையிலும் அவரை அறிகிற அறிவிலும் வளருங்கள். அவருக்கு இப்பொழுதும் என்றென்றைக்கும் மகிமையுண்டாவதாக. ஆமென்" (2பேதுரு 3:17,18) என்ற வார்த்தைகளோடு பேதுரு தன்னுடைய எச்சரிப்பின் வார்த்தைகளை நிறைவு செய்கிறார்.

பேதுருவைப் போல தீர்க்கதரிசிகள் மற்றும் நம்முடைய ஆண்டவரின் வார்த்தைகளை அப்போஸ்தலரின் வழியாக நாம் நினைவு கூறலாம். நம்முடைய சொந்த அனுபவங்களையும் நாம் நினைவு கொள்ள வேண்டும். இப்படி செய்வதினால் ஆண்டவருடைய வார்த்தைகளுக்குள் நாம் உறுதியாக நிலைத்து நின்று நமக்குள் தேவன் அவருடைய கிரியைகளை நடப்பிக்கிறார் என்ற உறுதியையும் பெறலாம். "பிரியமானவர்களே, உங்களைச் சோதிக்கும்படி உங்கள் நடுவில் பற்றியெரிகிற அக்கினியைக்குறித்து ஏதோ புதுமையென்று திகையாமல்," (1பேது 4:12) என்று பேதுரு கூறுகிறார்.

உண்மையில் சகோதர சகோதரிகளே, "அதிக உறுதியான தீர்க்கதரிசன வசனமும் நமக்கு உண்டு; பொழுது விடிந்து விடிவெள்ளி உங்கள் இருதயங்களில் உதிக்குமளவும் இருளுள்ள ஸ்தலத்தில் பிரகாசிக்கிற விளக்கைப்போன்ற அவ்வசனத்தைக் கவனித்திருப்பது நலமாயிருக்கும்" (2பேதுரு 1:19)

## பிறர்

சுயத்தை - மறந்த வண்ணமாக அனுதினமும்,
நான் வாழ உதவும் கர்த்தாவே,
நான் ஜெபம் பண்ண முழங்காற்படியிடும்போதும்,
என் விண்ணப்பங்கள் பிறருக்காகவே இருக்க
வேண்டுகிறேன்.

செய்யும் வேலைகள் அனைத்திலும் உண்மையாகவும்,
எப்பொழுதும் நேர்மையாகவும் இருக்க உதவும்,
உமக்காக செய்யும் காரியங்கள் மறைவானதல்ல,
அவர்களுக்கும் அதையே செய்ய நாடுகிறேன்.

பயனற்ற வீணாக புதைக்கப்படல் வேண்டும்,
சிலுவையிலறையப்பட்டு கொல்லப்பட்ட என் சுயம்,
மேலேறி வருவதற்கான ஒவ்வொரு முயற்சியும்,
பிறருக்காக வாழும் நோக்குக்கே செயல்படவேண்டும்.

பூலோகத்தில் என் வேலைகள் முடிந்தபிறகு,
பரலோகத்தில் புதிய வேலைகள் தொடக்கமாகும்,
ஆங்கே பரிசாக பெற்ற கிரீடத்தை மறந்து,
பிறறை பற்றி யோசிக்கவே விரும்புகிறேன்.

தன்னடக்கம்

# சுயக்கட்டுப்பாட்டை பயிற்றுவித்தல்



"ஆவியின் கனியோ, அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடியபொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம்; இப்படிப்பட்டவைகளுக்கு விரோதமான பிரமாணம் ஒன்றுமில்லை." (கலாத்தியர் 5 :22, 23)

**Tim Thomassen**

"வயது சென்ற அப்போஸ்தலனாகிய பேதுருவின் நிரூபத்தில் விசுவாச வீட்டாருக்குரிய ஒரு மென்மையான உணர்வுகளைக் காணலாம். அதில் அவர் பிரிந்து செல்லும் காலம் நெருங்கிய போது சபைக்குண்டான அவருடைய தனிப்பட்ட வளர்ச்சி அதிகமாகக் காணப்பட்டது. அதற்கேற்றவாறு அவர் இந்த பொதுவான இரண்டு நிருபங்களையும் எழுதினார். அவர் புதிதான எந்த சத்தியத்தைக் குறித்தும் எழுதாமல் முன்னதாகவே பெற்று கற்றறிந்த சத்தியங்களை மீண்டும் நினைவு கூர்ந்து கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சகல கிருபைகளிலும் விசுவாசத்தோடு வளர்ச்சியடைய அவர் ஆலோசனை சொன்னார் என்று பாஸ்டர் ரசல் எழுதினார். (R3215)

"நம்முடைய தேவனும் இரட்சகருமாயிருக்கிற இயேசுகிறிஸ்துவினுடைய நீதியால் எங்களைப்போல அருமையான விசுவாசத்தைப் பெற்றவர்களுக்கு, இயேசுகிறிஸ்துவின் ஊழியக்காரனும் அப்போஸ்தலனுமாகிய சீமோன் பேதுரு எழுதுகிறதாவது" (2பேதுரு 1:1) என்று பேதுரு எழுதினார். சகல கிருபைகள், சமாதானம் மற்றும் பிதாவாகிய தேவன் மற்றும் குமாரனாகிய இயேசுவை அறிகிற அறிவில் வளர்ச்சியடைவதற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தார். தேவனுடைய தெய்வீக வல்லமை நம்மை சகல தேவ பக்திக்குள்ளும் வழிநடத்தும் என்பதை அவர் குறிப்பிட்டார். "தம்முடைய மகிமையினாலும் காருணியத்தினாலும் நம்மை அழைத்தவரை அறிகிற அறிவினாலே ஜீவனுக்கும் தேவபக்திக்கும் வேண்டிய யாவற்றையும், அவருடைய திவ்விய வல்லமையானது நமக்குத் தந்தருளினதுமன்றி" (2பேதுரு 1:3)

தேவனுடைய விலையேறப்பெற்ற வாக்குறுதிகள் 4-ம் வசனத்தில் மேற்கோள் காட்டப்பட்டுள்ளது. இந்த வாக்குத்தத்தங்களினால் இந்த உலகத்தில் உண்டான கேட்டுக்குத் தப்பி நாம் திவ்விய சுபாவத்திற்கு பங்குள்ளவர்களாக மாறுவதற்கு நம்மை ஆயத்தப்படுத்துகிறது என்று வாசகர்களுக்கு பேதுரு அறிவிக்கிறார்.

பேதுரு தம்முடைய வாசகர்கள் எல்லா விதங்களிலும் ஊக்குவிப்பதற்கு ஆலோசனைத் தந்தார். இந்த ஒரு கட்டுரையில் "சுய கட்டுப்பாடு" என்ற தலைப்பில் அதிகமான கவனம் செலுத்தப்படுகிறது.

"இவைகள் உங்களுக்கு உண்டாயிருந்து பெருகினால், உங்களை நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை அறிகிற அறிவிலே வீணரும் கனியற்றவர்களுமாயிருக்கவொட்டாது" 1பேதுரு 1 என்று சகல நற்குணங்களிலும் வளர்ச்சியடைய வேண்டி முக்கியதுவத்தை பேதுரு வலியுறுத்துகிறார்.

இவைகளை நாம் எந்த அளவுக் பழக்கப்படுத்திக் கொள்ளுகிறோமோ அந்த அளவுக் நாம் தேவனுடைய நித்தியமான இராஜ்யத்தி பிரவேசிப்பதற்கு இடறமாட்டோம் என்று பேதுரு நமக் உறுதியளிக்கிறார். "ஆகையால், சகோதரரே, உங்க அழைப்பையும் தெரிந்துகொள்ளுதலையு உறுதியாக்கும்படி ஜாக்கிரதையாயிருங்க இவைகளைச் செய்தால் நீங்கள் ஒருக்காலு இடறிவிழுவதில்லை.இவ்விதமாய்,நம்முடைய கர்த்தரு

இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவினுடைய நித்தி ராஜ்யத்துக்குட்படும் பிரவேசம் உங்களுக்கு பரிபூரணமாய் அளிக்கப்படும்" 2பேதுரு 1:10,11

இந்த குறிப்புகளை நாம், மனதில் கொண் "சுயகட்டுப்பாட்டை" நமக்குள் வளர்த்துக் கொள் வேண்டியதின் முக்கியத்துவத்தை ஆராய்ந் பார்க்கலாம். தேவனுடைய இராஜ்யத்திற்கு பிரவேசிப்பதற்கு இந்த ஒரு குணலட்சணத்ை வளர்த்துக் கொள்ள வேண்டுமென்று பேதுரு ஏ வலியுறுத்துகிறார் ?

"அவர், இயேசுகிறிஸ்து மரித்தோரிலிருந் எழுந்ததினாலே, அழியாததும் மாசற்றது வாடாததுமாகிய சுதந்தரத்திற்கேதுவாக, ஜீவனுள் நம்பிக்கை உண்டாகும்படி, தமது மிகுந் இரக்கத்தின்படியே நம்மை மறுபடியு ஜெநிப்பித்தார்"(1பேதுரு 1:4) என்று பேதுரு தம்முடை முதலாம் நிரூபத்தில் கூறுகிறார். இவ்வளவு பெரிதா காரியத்தின் மத்தியில் சுயக்கட்டுப்பாடு எந்த இடத்தி பொருந்துகிறது ?

### சுயக்கட்டுப்பாட்டின் பொருள்

ஒருவருடைய சிந்தையை கட்டுப்படுத்துவதைக் காட்டிலும் அதை பழக்கப்படுத்துவதே சுயக்கட்டுப்பா என்று கூறலாம். தங்களுடைய உணர்ச்சிகளைக் கட்டு படுத்துவதற்கு ஏற்ற அறிவை பெறவேண்டுமென்ற பொ போதகர்களின் கருத்தை பேதுரு வெளிப்படுத் முயற்சித்தார். கிறிஸ்துவுக்குள் அர்ப்பணித்தல் என்றால் தீமை அல்லது தவறான பழக்கவழக்கங்களை முற்றிலுமாய் தவிர்த்து கிறிஸ்துவின் குணலட்சணங்களி வளர வேண்டுமென்று பேதுரு கற்பித்தார்./

சிலர் தன்னடக்கம், சுயநிர்வாகம், சுயஒழுங்கு போன்ற காரியங்களை சுயக்கட்டுப்பாடு என்று கருதுகிறார்கள்.

நம்முடைய சிந்தைகள், சந்தோஷங்கள், துக்கங்கள், நம்பிக்கைகள், வேலைகள், உணவுகள், இவையனைத்திலும் சுயக்கட்டுப்பாடு சம்பந்தப்பட்டிருக்கிறது. இது ஒரு மேலான குணலட்ணத்தின் வளர்ச்சியை பயிற்றுவிக்கிறது. சுயகட்டுப்பாடு, விசுவாசத்தோடு வளர்ச்சியடையும் போது தெய்வீக காரியத்தில் நம்முடைய வைராக்கியத்தையும் கிரியைகளையும் அதிகரிக்கும். தேவன் மற்றும் அவருடைய வார்த்தைகளின் வழியாக நாம் பெறக்கூடிய அறிவு - நம்முடைய சிந்தைகளிலும், வார்த்தைகளிலும், கிரியைகளிலும் மேலான மாற்றங்களைக் காண்பிக்க வழிநடத்தும்.

நாம் அஜாக்கிரதை உள்ளவர்களும், வெகு சீக்கிரத்தில் கோபம் கொள்ளக் கூடியவர்களும், எந்தக் காரியத்தையும் நிதானியாமல் சிந்திக்கக் கூடியவர்களுமாய் இருக்கக்கூடாது. மாறாக நம்முடைய மனது சமநிலை கொண்டதும், சிந்தித்து செயல்படக் கூடியதுமாய் இருக்கவேண்டும். நீதிமொழியில் உள்ள மூன்று பகுதிகள் நம்முடைய கோபத்தை கட்டுப் படுத்துவதற்கான ஞானத்தை போதிக்கிறது.

*"நீடிய சாந்தமுள்ளவன் மகா புத்திமான்; முற்கோபியோ புத்தியீனத்தை விளங்கப் பண்ணுகிறான்" ( நீதிமொழிகள் 14:29)

*"முற்கோபி மதிகேட்டைச் செய்வான்; துர்ச்சிந்தனைக்காரன் வெறுக்கப்படுவான்" (நீதிமொழிகள் 14:17)

*"மூடன் தன் உள்ளத்தையெல்லாம் வெளிப்படுத்துகிறான்; ஞானியோ அதைப் பின்னுக்கு அடக்கி வைக்கிறான்." (நீதிமொழிகள் 29 :11)

அன்பு மற்றும் கனிவோடு சுயக்கட்டுப்பாட்டை நாம் பயிற்சி பெற்று எல்லா இடங்களிலும் அதை செயல் முறைபடுத்த வேண்டும். நம்முடைய அலுவலகங்கள், பல்பொருள் அங்காடி, வங்கி, மருத்துவமனை, பேருந்து, புகைவண்டி, வீட்டில் குடும்பத்தின் ஒவ்வொரு நபர்கள், தொலைபேசியில், எல்லாவற்றிற்கும் மேலாக சபையில் நாம் இதை செயல்படுத்த வேண்டும். சுயக்கட்டுப்பாடு நல்ல குணங்களின் முக்கியமான அம்சமாகக் காணப்படுகிறது. நாம் எந்த சூழ்நிலைகளிலும் யாரோடு இருந்தாலும் இந்த குணலட்சணத்தை வெளிப்படுத்த வேண்டும்.

ஞானத்தின் மாதிரிகளாக நாம் எப்போதும் திகழ வேண்டும். இயேசு மற்றும் அப்போஸ்தலர்கள் வெளிப்படுத்தின உச்சகட்டமான நிலைகளை நாமும் வெளிப்படுத்த வேண்டும். "அந்த ஜீவன் வெளிப்பட்டது; பிதாவினிடத்திலிருந்ததும், எங்களுக்கு வெளிப்பட்டதுமான நித்தியமாயிருக்கிற அந்த ஜீவனை நாங்கள் கண்டு, அதைக் குறித்துச் சாட்சிகொடுத்து, அதை உங்களுக்கு அறிவிக்கிறோம். நீங்கள் எங்களோடே ஐக்கியமுள்ளவர்களாகும்படி, நாங்கள் கண்டும் கேட்டும் இருக்கிறதை உங்களுக்கும் அறிவிக்கிறோம்; எங்களுடைய ஐக்கியம் பிதாவோடும் அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவோடும் இருக்கிறது" (1யோவான் 1:2, 3) என்ற கட்டளையை நாம் பெற்றிருக்கிறோம். இயேசுவைப் பின்பற்றுபவர்கள் தங்களில் உள்ள பழைய புளித்தக் காரியங்களை வெளியே களைவதற்கு தன்னை கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டும்.

"பலவானைப் பார்க்கிலும் நீடிய சாந்தமுள்ளவன் உத்தமன்; பட்டணத்தைப் பிடிக்கிறவனைப் பார்க்கிலும் தன் மனதை அடக்குகிறவன் உத்தமன்" (நீதி 16 : 32) என்று நீதிமொழிகளில் சொல்லப்பட்டுள்ளது. நம்முடைய சகல காரியங்களையும் நம்முடைய கட்டிற்குள் வைக்க வேண்டும். நம்மை நாம் கட்டுப்படுத்துவதற்கு உண்மையான ஞானம் அதிகமாக தேவைப்படுகிறது. மற்றும் நம்முடைய எதிராளிகளின் பலத்தை படிப்படியாக ஜெயிக்கக்கூடிய தொடர்ச்சியான முயற்சிகள் அதிகமாக நமக்குள் இருக்க வேண்டும்.

நம்முடைய சிந்தை அல்லது சித்தத்தை முழுமையாக நமக்கு கீழ்ப்படுத்த வேண்டும். இப்படியாக நாம் நம்முடைய சிந்தையை கீழ்ப்படுத்துவதற்கு முதலாவது தேவனுடைய சித்தத்தை நம்முடைய சித்தமாக ஏற்றுக்கொள்ளவேண்டும். "என் தேவனே, உமக்குப் பிரியமானதைச் செய்ய விரும்புகிறேன்; உமது நியாயப்பிரமாணம் என் உள்ளத்திற்குள் இருக்கிறது என்று சொன்னேன்" (சங்கீதம் 40 :8) என்று சங்கீதக்காரன் எழுதினார். "அப்பொழுது நான்: தேவனே, உம்முடைய சித்தத்தின்படி செய்ய, இதோ, வருகிறேன், புஸ்தகச்சுருளில் என்னைக் குறித்து எழுதியிருக்கிறது என்று சொன்னேன் என்றார்" (எபிரெயர் 10:7) என்று இயேசுவைப் பற்றி எழுதியிருக்கிறது. ஒருவேளை இந்த அண்ட சராசரத்தில் உள்ள மிகப்பெரிய வல்லமை தேவனுடைய சித்தத்தத்தை நிறைவேற்றக்கூடிய வல்லமையாக இருக்க வேண்டும்.

### நமக்குள் சுயக்கட்டுப்பாட்டை வளர்த்து கொள்வதற்கான சில அறிவுரைகள்

1. சுயகட்டுப்பாட்டில் வளர்ச்சி அடைவதற்கு ஒருவர் சுயத்தை வெறுக்க வேண்டும். ஒருவர் அப்போஸ்தலனாகிய பவுலின் மாதிரியை கவனித்து தன்னுடைய மனசாட்சியின் குரலுக்கு செவிகொடுக்க வேண்டும். "இதனால் நான் தேவனுக்கும் மனுஷருக்கும் முன்பாக எப்பொழுதும் குற்றமற்ற மனச்சாட்சியை உடையவனாயிருக்கப் பிரயாசப்படுகிறேன்" அப்போஸ்தலர் 24:16 இது உண்மையில் நம்முடைய சொந்த முயற்சியினால் பயிற்சி பெறவேண்டும்.

2. சுயகட்டுப்பாட்டை நாம் பழக்கமாக பழகிக் கொள்ளவேண்டும். மாறாக சூழ்நிலைகளுக்கு ஏற்றபடி நம்மை மாற்றிக் கொள்ளக்கூடாது. ஒரு தனிப்பட்ட நபர்

தன்னுடைய வழிகளை உண்மையில் மாற்றிக் கொள்ளவேண்டும் என்ற நோக்கமுடையவர்களாக இருந்தால் அவர்கள் தொடர்ந்து அந்த பாதையில் நம்மைக்கு இசைவாக பயணிக்கவேண்டும்.

3. சுயக்கட்டுப்பாட்டை தனித்தனியாக ஒருவர் பிரிக்க இயலாது. ஒருவர் தம்முடைய கம்பியூட்டரை பயன்படுத்துவதில் கட்டுப்பாட்டோடே இருந்தாலும் டி.வி பார்ப்பதில் அந்த கட்டுப்பாட்டை கொண்டுவர முடியவில்லை என்று அவர் சொல்லக்கூடாது. ஏனெனில், எந்த தனி நபரும் தன்னுடைய வாழ்க்கையின் எல்லா துறைகளிலும் சுயகடகட்டுப்பாட்டை சமமாக வெளிப்படுத்த வேண்டும்.

4. ஓய்வெடுப்பதற்கான போதிய காலத்தை நீங்கள் புறக்கணிக்க வேண்டாம். அயர்ந்த நித்திரை நம்முடைய மனதிற்கும் சரீரத்திற்கும் நல்ல ஆரோக்கியத்தைத் தந்து நம்முடைய கிறிஸ்தவ வாழ்க்கையில் கிடைக்கும் வாய்ப்புகளை சுயக்கட்டுப்பாட்டோடு கிரியை செய்வதற்கு வழிநடத்தும்.

5. இந்த குறிப்புகளை நாம் செயல்படுத்தும் பொழுது உடனடியாக எந்த மாற்றங்களும் ஏற்படாது. நாம் பொறுமையோடும் நிதானத்தோடும் காத்திருப்பது அவசியம். ஆயினும் ஒருவர் இவைகளுக்கு காலம் கடத்தி விடக்கூடாது.

சுயக்கட்டுப்பாடு ஒரு இனிமையான கோட்பாடாக இருக்க வேண்டும் என்பது அவசியமல்ல. நாம் விரும்பும் காரியங்களைச் செய்யாமலும் நாம் விரும்பாத காரியங்களைச் செய்ய நம்மை உட்படுத்துவதே சுயக்கட்டுப்பாடாகும். நம்மில் அநேகர் நம்முடைய வாழ்க்கையில் சில "சூழ்நிலைகளில் நம்மை நாம் சுயகட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர வேண்டும் என்பதையே கவனத்தில் கொள்வதில்லை.

"உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றும் உங்களில் தங்கியும் இருக்கிறபரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருக்கிறதென்றும்,நீங்கள் உங்களுடைய வர்களல்லவென்றும் அறியீர்களா? கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்களே; ஆகையால் தேவனுக்குஉடைய வைகளாகிய உங்கள் சரீரத்தினாலும் உங்கள் ஆவியினாலும் தேவனை மகிமைப்படுத்துங்கள்" (1கொரி 6:19, 20) என்ற ஒரு கேள்வியை பவுல் கேட்கிறார். இந்த ஒரு வசனம் வேசித்தனத்தை குறித்து பேசுகிறது, ஆனால் அதன் கோட்பாடு, அதற்கு மேலான பொருளை குறிக்கக்கூடியதாக இருக்கிறது.

மற்றொரு பரிச்சயமான வசனத்தை (ரோமர் 12:1, 2)-ல் காணலாம். "அப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்க வேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்; இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை. நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்"

இவைகளை செய்வதினால் நாம் கட்டாயமாக சுயக்கட்டுப்பாட்டை பழகிக்கொள்ளலாம்.நம்முடைய சரீரங்களுக்கு நன்மையாக இருக்கக்கூடிய காரியங்களை மட்டுமே நாம் நடப்பிக்காமல் நம்முடைய சரீரங்களை தேவனுக்கேற்ற பரிசுத்தமான ஜீவபலியாக ஒப்புக் கொடுக்க வேண்டும். நம்முடைய சரீரத்தினால் செய்யப்படும் எல்லா காரியங்களும் இதற்கு இசைவாக இருக்கவேண்டும். ஏனெனில் "எல்லாவற்றையும் அநுபவிக்க எனக்கு அதிகாரமுண்டு, ஆகிலும் எல்லாம் தகுதியாயிராது; எல்லாவற்றையும் அநுபவிக்க எனக்கு அதிகாரமுண்டு, ஆகிலும் நான் ஒன்றிற்கும் அடிமைப்படமாட்டேன்" (1கொரி 6:12) என்று பவுல் எழுதுகிறார்.

இங்கு பவுல் உணவைக் குறித்துப் பேசினாலும் இவ்வசனம் அனைத்து காரியங்களுக்கும் பொருந்தும். நாம் யாருக்கும் அல்லது எந்த காரியத்திற்கும் அடிமைகளாய் இருக்கக்கூடாது. "இரண்டு எஜமான்களுக்கு ஊழியஞ் செய்ய ஒருவனாலும் கூடாது; ஒருவனைப் பகைத்து, மற்றவனைச் சிநேகிப்பான்; அல்லது ஒருவனைப் பற்றிக்கொண்டு, மற்றவனை அசட்டை பண்ணுவான்; தேவனுக்கும் உலகப்பொருளுக்கும் ஊழியஞ்செய்ய உங்களால் கூடாது" (மத் 6:24)

சுயகட்டுப்பாடு எளிதான காரியம் அல்ல. தேவனை மகிழ்விக்க இது மிக அவசியம். நம்முடைய சரீரத்தினால் தேவனை மகிமைப்படுத்தாத எந்த காரியத்திற்கும், நம்மை நாம் அடிமையாக விட்டுவிடக்கூடாது. நாம் தேவனுக்கு மட்டுமே அடிமைகளாக இருந்து அவருடைய பணிக்காக நம்முடைய சரீரங்களை பயன்படுத்துவோமாக.

**நமக்குரிய சவால்**

சுயக்கட்டுப்பாடு மற்றும் காலத்தை பிரயோஜனப்படுத்துதல் ஆகிய இவ்விரண்டும், ஒன்றொடொன்று இசைந்து செயல்படுகிறது. இதைக் குறித்து பவுல் எபேசியர் 5:15-16-ம் வசனங்களில் நம்மை எச்சரிக்கிறார். "ஆனபடியினாலே, நீங்கள் ஞானமற்றவர் களைப்போல நடவாமல், ஞானமுள்ளவர் களைப்போலக் கவனமாய் நடந்து கொள்ளப்பார்த்து, நாட்கள் பொல்லாதவைகளானதால் காலத்தைப் பிரயோஜனப் படுத்திக்கொள்ளுங்கள்"

கீழ்க்காணும் கேள்விகளை நமக்குள் கேட்போம். அனுதினமும் வசனங்களை வாசிக்கிறேனா? நான் மற்ற காரியங்களை வாசிப்பதற்கும், பார்ப்பதற்கும் செலவழிக்கும் நேரத்தைக் காட்டிலும் அதிகமான நேரத்தை வேதவாசிப்புக்காக செலவழிக்கிறேனா ?

கூடுமான வரைக்கும் சபைக் கூடுதலையும், மாநாடுகளிலும் நான் கலந்து கொள்கிறேனா? நம்முடைய சொந்த மாம்சமும் சித்தமுமாகிய உலக பிரகாரமான உறவுகள், அயலகத்தார்கள், உறவினர்களைக் காட்டிலும், விசுவாசிகளின் ஐக்கியத்தில் நான் மகிழ்ச்சியடைகிறேனா ? முதலாவது தேவனுடைய இராஜ்யத்தைத் தேடுகிறேனா? நான் உலகப் பிரகாரமான காரியங்களைக் காட்டிலும் மேலான காரியங்களுக்கு ஆர்வம் காட்டுகிறேனா ?

தேவனுடைய அன்பையும் அவருடைய இரட்சிப்பின் திட்டத்தையும் பிறரிடம் பகிர்ந்து கொள்வதற்கு எனக்குள் அதிகமாக வாஞ்சை உள்ளதா? "சுவிசேஷத்தை நான் பிரசங்கித்து வந்தும், மேன்மை பாராட்ட எனக்கு இடமில்லை; அது என்மேல் விழுந்த கடமையாயிருக்கிறது; சுவிசேஷத்தை நான் பிரசங்கியாதிருந்தால், எனக்கு ஐயோ" (1கொரிந்தியர் 9:16) என்று பவுல் உணர்ந்ததைப் போல் நான் உணருகிறேனா ?

"நான் வந்து உங்களைக் கண்டாலும், நான் வராமலிருந்தாலும், நீங்கள் ஒரே ஆவியிலே உறுதியாய் நின்று, ஒரே ஆத்துமாவினாலே சுவிசேஷத்தின் விசுவாசத்திற்காகக் கூடப்போராடி, எதிர்க்கிறவர்களால் ஒன்றிலும் மருளாதிருக்கிறீர்களென்று உங்களைக்குறித்து நான் கேள்விப்பட்டபடி, எவ்விதத்திலும் நீங்கள் கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குப் பாத்திரராக மாத்திரம் நடந்து கொள்ளுங்கள்" (பிலி 1:27) என்று அப்போஸ்தலர் பவுல் எழுதியுள்ளார். சுயக்கட்டுப்பாட்டை கடுமையாக பயிற்றுவிக்க விரும்பும் அனைவருக்கும் இது ஒரு ஏற்ற ஜெபமாய் உள்ளது.

"பயிற்சி ஒருவரை பூரணப்படுத்தும்" என்ற வாசகத்தை ஆசிரியர் அல்லது பெற்றோரிடம் நம்மில் அநேகர் கேட்டிருக்கலாம். இந்தக் கட்டுரையை எழுதின ஆசிரியர் தன்னுடைய இள வயதில் இந்த அறிவுரையை பலமுறைக் கேட்டிருக்கிறார். பல சூழ்நிலைகளில் கேட்டிருக்கிறார். ஆயினும் "பயிற்சி ஒருவரை நிரந்தரமாக்கும்" (Practice makes perfect) நாம் எவைகளை பழகுகிறோமோ அவைகள் நம்முடைய விதிமுறைகள் ஆகிவிடும். நாம் தவறான காரியங்களை பழகினோம் என்றால் அதன் பலன் முற்றிலும் தவறான காரியங்களில் முடிவடையும்.

"ஒரு சிந்தனையை விதைத்தால் ஒரு கிரியையை அறுவடை செய்யலாம். ஒரு கிரியையை விதைத்தால் ஒரு பழக்கத்தை அறுவடை செய்யலாம். ஒரு பழக்கத்தை விதைத்தால் ஒரு குணத்தை அறுவடை செய்யலாம். ஒரு குணத்தை விதைத்தால் ஒரு இலக்கை அறுவடை செய்யலாம் என்ற பிரபலமான வாசகம் ஒன்று உண்டு. இதே காரியத்தை அப்போஸ்தலனாகிய பவுல் கலாத்தியர் 6:7-9-ம் வசனங்களில் எழுதியுள்ளார். "மோசம் போகாதிருங்கள், தேவன் தம்மைப் பரியாசம்பண்ணவொட்டார்; மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான். தன் மாம்சத்திற்கென்று விதைக்கிறவன் மாம்சத்தினால் அழிவை அறுப்பான்; ஆவிக்கென்று விதைக்கிறவன் ஆவியினாலே நித்தியஜீவனை அறுப்பான். நன்மை செய்கிறதில் சோர்ந்து போகாமல் இருப்போமாக; நாம் தளர்ந்து போகாதிருந்தால் ஏற்ற காலத்தில் அறுப்போம்."

**ஒப்புக்கொள்ளுதல் அவசியம்**

அப்போஸ்தலனாகிய பவுலும் ஒரு பந்தயத்தை ஒப்புமைப்படுத்துகிறார். இதைக்குறித்து 1கொரிந்தியர் 9:25-27-ல் வாசிக்கலாம். "பந்தயத்திற்குப் போராடுகிற யாவரும் எல்லாவற்றிலேயும் இச்சையடக்கமாயிருப்பார்கள். அவர்கள் அழிவுள்ள கிரீடத்தைப் பெறும்படிக்கு அப்படிச் செய்கிறார்கள், நாமோ அழிவில்லாத கிரீடத்தைப் பெறும்படிக்கு அப்படிச் செய்கிறோம். ஆதலால் நான் நிச்சயமில்லாதவனாக ஓடேன்; ஆகாயத்தை அடிக்கிறவனாகச் சிலம்பம் பண்ணேன். மற்றவர்களுக்குப் பிரசங்கம் பண்ணுகிற நான்தானே ஆகாதவனாய்ப் போகாதபடிக்கு, என் சரீரத்தை ஒடுக்கிக் கீழ்ப்படுத்துகிறேன்."

"கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப்பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடருகிறேன்" (பிலிப்பியர் 3:14) என்று பவுல் எழுதுகிறார். இலக்கை நோக்கி நிதானமாகவும், கவனத்தோடும் செல்லுவதை "தொடருகிறேன்" என்ற வார்த்தை வலியுறுத்துகிறது. நீடிய சகிப்பு தன்மையோடும், உண்மையோடும் அந்த இலக்கை வாஞ்சையோடு தேடுவதையும் இது பொருள்படுத்துகிறது. நம்முடைய இலக்கு கிறிஸ்து மட்டுமே இந்த இலக்கை அடைய நம்முடைய வாழ்க்கையின் முடிவு பரியந்தம் சகல காரியத்திலும் சுயக்கட்டுப்பாட்டை நடைமுறைப்படுத்த வேண்டும்.

# விடாமுயற்சி



"ஆகையால், எனக்குப் பிரியமான சகோதரரே, கர்த்தருக்குள் நீங்கள் படுகிற பிரயாசம் விருதாவாயிராதென்று அறிந்து, நீங்கள் உறுதிப்பட்டவர்களாயும், அசையாதவர்களாயும், கர்த்தருடைய கிரியையிலே எப்பொழுதும் பெருகுகிறவர்களாயும் இருப்பீர்களாக" (1கொரி 15:58)

Cecil Norde

கிறிஸ்தவ பயணத்திற்கு தேவைப்படும் குணங்களில் இந்த விடாமுயற்சியும் ஒன்று. இந்த குணத்தை நம்முடைய விசுவாசத்தோடு கூட்டிச்சேர்க்க வேண்டுமென்று பேதுரு வலியுறுத்துகிறார். (11பேது 1:6)

"விடாமுயற்சி" உள்ளம், தடைவந்தாலும் காரியங்களை நிறைவேற்றுதல், இடைவிடாமல் செயல்படுதல் போன்ற வார்த்தைகளை விடாமுயற்சி என்ற வார்த்தைக்கு அகராதியில் பொருள் காணலாம். இது கிறிஸ்துவை தரித்துக் கொள்வதற்காக எதிர்நோக்கக்கூடிய போர்களைப் பற்றி விவரிக்கிறது. நம்முடைய பயணத்தை தடைசெய்யக்கூடிய எல்லா தடைகளையும் மேற்க்கொள்வதற்கு உறுதியான மனநிலையையும். நிலையான சிந்தனையையும் நாம் கொண்டிருக்க வேண்டும். கிறிஸ்துவின் முழு சாயலை அடைவதற்கான இந்த பயணத்தில் "தொடர்ந்து செயல்படும்" மனநிலையே விடாமுயற்சி என்று கருதப்படுகிறது.

நம்முடைய இடுக்கமான வழியின் பயணத்தில் நாம் மேற்கொள்ளக்கூடிய விடாமுயற்சியைப் பற்றி வசனங்கள் விவரிக்கிறது. நம்முடைய ஆதார வசனங்களில் பவுல் விடாமுயற்சி என்ற வார்த்தையை நேரடியாக பயன்படுத்தவில்லை. ஆனாலும், "உறுதிப்பட்டவர்களாய்" என்ற வார்த்தையைக் கொண்டு இதை விவரிக்கிறார்.

இங்கு விடாமுயற்சிக்கு மாதிரியாக இருக்கும். மூன்று நபர்களைக் குறித்துக் காணலாம். மோசே, இயேசுகிறிஸ்து, அப்போஸ்தலனாகிய பவுல். இவர்கள் பல உபத்திரவங்களின் மத்தியில் தேவனுடைய சித்தத்தை தொடர்ந்து நிறைவேற்றியவர்கள். வேதத்தில் விடாமுயற்சிக்கான மூன்று மாதிரிகள் இவர்களே.

"அதுமாத்திரமல்ல, உபத்திரவம் பொறுமையையும், பொறுமை பரீட்சையையும், பரீட்சை நம்பிக்கையையும்,உண்டாக்குகிறதென்று நாங்கள் அறிந்து, உபத்திரவங்களிலேயும் மேன்மை பாராட்டுகிறோம். மேலும் நமக்கு அருளப்பட்ட பரிசுத்த ஆவியினாலே தேவஅன்பு நம்முடைய இருதயங்களில் ஊற்றப்பட்டிருக்கிறபடியால், அந்த நம்பிக்கை நம்மை வெட்கப்படுத்தாது" (ரோம 5:3-5)கிறிஸ்துவுக்குள் ஜீவிக்கக்கூடிய புது சிருஷ்டிகளுக்கு இந்த விடாமுயற்சியே சிந்தையில் ஒழுக்கமாயிருப்பதற்கு பலமாய் இருக்கிறது. தங்களுடைய அழைப்பையும், தெரிந்து கொள்ளுதலையும் உறுதிபடுத்திக் கொள்வதற்கு இக்குணம் தொடர்ந்து வழிநடத்துகிறது.

**மோசே**

நியாயப்பிரமாணத்தின் கீழ் ஒரு புதிய தேசத்தை ஸ்தாபிக்க, எகிப்தின் அடிமைத் தனத்திலிருந்து இஸ்ரயேல் ஜனங்களை வழிநடத்துவதற்கு தேவன் மோசேயை தேர்வு செய்த காரணத்தை பற்றி ஒருவரும் கேள்வி எழுப்பமுடியாது. கிட்டத்தட்ட எண்பது வருடங்களாக இந்த நிர்வாகத்திற்கும், தலைமைக்கும் பார்வோன் அரண்மனையின் உறுப்பினராகவும், பிற்பாடு மீதியான் தேசத்தின் மேய்ப்பராகவும் இருக்கும் பொழுது மோசே ஆயத்தப் படுத்தப்பட்டார்.

இதைத்தவிர மோசே வேறு எந்த சூழ்நிலையிலும் விடாமுயற்சியை கற்றுக்கொண்டார் என்பதற்கு வேறு எந்த பதிவும் இல்லை. அவர் இஸ்ரயேல் ஜனத்தை வழி நடத்த அழைக்கப் பட்டபோது எண்ணிக்கைக்கு அடங்கா சூழ்நிலைகளில் மோசேக்கு விடாமுயற்சி தேவைப்பட்டது. நாற்பது வருடங்கள் வணங்கா கழுத்துள்ள ஜனங்களை கானான் தேசத்திற்குள் பிரவேசிப்பதற்கு ஆயத்தப்படுத்தினார். (யாத் 3:14-17)

துவக்கத்தில் இந்த பொறுப்புகளை ஏற்றுக்கொள்ள மோசே மிகவும் பயந்தார். ஆயினும் தேவன் அவரோடு கூட இருந்த இந்த வனாந்திரத்தில் தேவைப்படும் சகல காரியங்களையும் அவர் கொடுப்பார் என்று தேவன் மோசேயிடம் வாக்களித்திருந்தார். "அதற்கு அவர்: நான் உன்னோடே இருப்பேன்; நீ ஜனத்தை எகிப்திலிருந்து அழைத்து வந்தபின், நீங்கள் இந்த மலையில் தேவனுக்கு ஆராதனை செய்வீர்கள்; நான் உன்னை அனுப்பினேன் என்பதற்கு இதுவே அடையாளம் என்றார்" யாத் 3:12)

ஜனங்களிடம் ஒரு உறுதியான தலைமையை மோசே நடப்பித்தாலும், சில நேரங்களில் தனக்குள் ஒதுக்கி வைத்த காரியங்களையும், தேவனுக்கு பயப்படும் பயத்தையும் மோசே வெளிப்படுத்தினார். ஜனங்களை வழிநடத்துவதற்கு மோசே தேவனிடம் உதவிகள் கேட்டு பலமுறை மன்றாடினார். (யாத் 6:1-25; 16:2,3; 32: 11-14; 33:12-23) ஒவ்வொரு முறையும் தேவன் மோசேக்கு தேவையான உதவிகளையும்,

வாக்குறுதிகளையும், வழிநடத்துதலையும் கொடுத்தார். மோசேயைப் போல நாமும் நம்முடைய போராட்டங்களின் மத்தியில் தேவனுக்குள் விசுவாசத்தில் நிலைத்திருப்பதற்கு நாம் எப்பொழுதும் தேவனுடைய உதவியையும் ஆலோசனையையும் தேட வேண்டும்.

விடாமுயற்சியை வளர்த்துக்கொள்வதற்கு தேவன் மோசேக்கு தன்னுடைய வாழ்க்கையில் எதிர்நோக்கும் பிரச்சனைகளை தீர்வு காண்பதற்கு அதிகமான ஞானத்தைக் கொடுத்தார்.தேவனுடைய வழி நடத்துதலின் வழியாக மோசே ஒரு சிறந்த தலைவராக மாறினார். ஆரோன், காலேப் ,எத்திரோ, யோசுவா மற்றும் இஸ்ரயேலின் கோத்திரத்து பதினோரு மூப்பர்களும் அவருக்கு கூடுதலான உதவி அளித்தார்கள். தேவன் அவர்களுக்கு பத்து கற்பனைகளையும் மற்ற பிரமாணங்களையும் கொடுத்து அவர்களின் வாழ்க்கைக்குரிய கோட்பாடுகளை வரையறுத்தார். (யாத் 20 -24 அதிகாரங்கள்)

மோசே எப்பொழுதும் ஜெபத்திலும் யோகோவா தேவனின் ஐக்கியத்திலும் தரித்திருந்தார். யோசுவாவின் தலைமையின் கீழ் அவர் இராணுவ அணிகளை அழைத்திருந்தார்.( யாத் 17: 8-13) மேலும் கோராகுவினால் ஏற்படுத்தப்பட்ட அரசியல் பிரச்சனைகளையும் மேற்க்கொண்டார். (எண் 6) மோசே விசுவாசத்தினாலும் கீழ்படிதலினாலும், தேவனுடைய வாக்குறுதிகள் மற்றும் ஜனங்களுக்காக அவர் வைத்திருக்கும் திட்டத்தினாலும் தனக்குள் விடாமுயற்சியை வளர்த்துக் கொண்டார். இதை அவருடைய சொந்த வார்த்தைகளில் காணலாம்.

"கர்த்தர் என் பெலனும் என் கீதமுமானவர்; அவர் எனக்கு இரட்சிப்புமானவர்; அவரே என் தேவன், அவருக்கு வாசஸ்தலத்தை ஆயத்தம் பண்ணுவேன்; அவரே என் தகப்பனுடைய தேவன், அவரை உயர்த்துவேன்" (யாத் 15:2)

தான் சரியான பாதையில் நடந்து கொண்டு இருப்பதை மோசே எப்பொழுதும் தேவனோடு கொண்டுள்ள தொடர்பின் வழியாக உறுதிப்படுத்திக் கொண்டார். நம்முடைய உபத்திரவங்களிலும், பாடுகளிலும் மோசேயைப் போல நம்முடைய பாதைகள் செவ்வையானதா? என்று தேவனிடத்தில் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும் அல்லவா ? நம்முடைய வெற்றிகளுக்காகவும் நித்தமும் அவருக்கு நன்றிகளை ஏறெடுத்துக் கொண்டு நம்முடைய தோல்விகளில் உதவிக்காக விண்ணப்பித்து, நித்தமும் சகோதரர்களிடத்திலும் உதவியை நாட வேண்டும். இவ்வனைத்து பாடங்களையும் மோசேயின் விடாமுயற்சியில் நாம் காணலாம். நியாயப்பிரமாணத்தின் மத்தியஸ்தராகவும், ஒரு தீர்க்கதரிசியாகவும் இருந்த மோசேயின் வாழ்க்கையில் தேவனுடைய பணியை நிறைவேற்ற அவருடைய விடாமுயற்சி காணப்படுகிறது.

**இயேசு**

மனுக்குலத்தை மீட்பதற்கு சரிநிகர் சமமான விலை கொடுப்பதற்கு பிதாவாகிய தேவன் இயேசுவை ஒரு மனுஷனாக அனுப்பினார். ஆதியில் ஆதாம் தேவனோடு கொண்டிருந்த மகிழ்ச்சியான உறவை மீண்டும் மனுக்குலம் பெற வேண்டும் என்பதற்காக தேவன் இக்காரியத்தை செய்தார். தேவனிடத்தில் செய்த இந்த உடன்படிக்கையானது அநேக பாடுகளையும், உபத்திரவங்களையும், கொண்டு வருமென்று இயேசு அறிந்திருந்தார். முன் குறிக்கப்பட்ட தேவனுடைய திட்டத்தை நிறைவேற்றும்படியாக இயேசு இந்த பலியின் மரணத்தை நிறைவேற்றினார்.

அவருடைய ஊழியத்தின் போது தன்னுடைய குடும்பத்திலிருந்தும், சீஷர்களிடமிருந்தும், ஜனங்களிடமிருந்தும், மத போதகர்கள் மற்றும் அவரை பிடிக்க வகை தேடின அரசாங்கத்தின் வழியாக வந்த சாத்தானை இயேசு சந்திக்க வேண்டியதாக இருந்தது. இப்படிப்பட்ட சவாலான நேரங்களில் தனக்குள்ளிருந்த விடாமுயற்சியை தக்க வைத்துக்கொள்வது மிக அவசியமாயிருந்தது.

சீஷர்கள் தங்களுடைய உடன்படிக்கையை நிறைவேற்றுவதற்கு இக்குணம் மிக அவசியமென்று இயேசு அவர்களுக்கு கற்பிக்கத் துவங்கினார். "இடுக்கமான வாசல்வழியாய் உட்பிரவேசியுங்கள்; கேட்டுக்குப் போகிற வாசல் விரிவும், வழி விசாலமுமாயிருக்கிறது; அதின் வழியாய்ப் பிரவேசிக்கிறவர்கள் அநேகர். ஜீவனுக்குப் போகிற வாசல் இடுக்கமும், வழி நெருக்கமுமாயிருக்கிறது; அதைக் கண்டுபிடிக்கிறவர்கள் சிலர்"(மத்7:13,14)

இயேசு அடிக்கடி உவமைகளின் வழியாக சத்தியங்களை கற்றுக் கொடுத்தார். லூக்கா 11:5-10 ம் வசனங்களில், ஒரு மனுஷன் நடுராத்திரியில் தன் அயலானிடம் சென்று தன்னுடைய விருந்தாளிக்கு அப்பம் வேண்டும் என்று கேட்டார். முதலில் அவர் மறுத்தாலும், அதற்குப்பின் அவருக்கு அப்பங்களை கொடுத்தாக வாசிக்கிறோம். இந்த ஒரு எடுத்துக்காட்டு விடாமுயற்சியோடு தேவனுடைய ஆசீர்வாதங்களுக்காகப் பிரயாசப்படவேண்டும் என்பதை காட்டுகிறது. "கேளுங்கள் அப்பொழுது கொடுக்கப்படும்.... தட்டுங்கள்.... திறக்கப்படும்.... தேடுங்கள் ....... கண்டடைவீர்..."

லூக் 18:1-8 ம் வசனங்களில் இந்த உவமையில் விடா முயற்சியோடு கேட்பதற்கு இயேசு கற்றுக் கொடுத்தார். மத் 15:21-28 ல், ஒரு புறஜாதியான ஸ்திரியின் விடா முயற்சியினிமித்தம்

இயேசு அவளுடைய மகளை சொஸ்தப் படுத்தினதை வாசிக்கிறோம். அவளுடைய விசுவாசம் மிகப் பெரியது என்று இயேசு சொன்னார். அவளுடைய விடா முயற்சி விசுவாசத்தை எடுத்துக் காட்டியது. விடாமுயற்சி நமக்குள் விசுவாசத்தை வளர்த்து இடுக்கமான பாதையில் பிரவேசிக்க நம்மை அதிகமாக வழிநடத்தும் என்று மேற்கூறப்பட்ட எடுத்துகாட்டுகள் வலியுறுத்துகிறது.

நாம் தைரியமாகவும் பலங் கொண்டவர்களாகவும், சத்தியத்திற்கு சாட்சிகளாக நிற்க வேண்டும். மற்ற எந்தவிதமான நோக்கத்துடன் அல்ல, பாபிலோனின் ஒவ்வொரு தலைமையிலிருக்கும் தேவனுடைய பொக்கிஷங்களை கூட்டிச்சேர்ப்பதே நோக்கமாக இருக்க வேண்டும். "பலியினாலே என்னோடே உடன்படிக்கை பண்ணின என்னுடைய பரிசுத்தவான்களை என்னிடத்தில் கூட்டுங்கள் என்பார்" (சங் 50 -5)

சுவிசேஷ யுகத்தின் முடிவில் இயேசு கிரியை செய்தார். அவர் அவருடைய பொக்கிஷத்தை சேர்த்துக் கொண்டிருந்தார். அவருடைய எதிரியின் மத்தியில் வெற்றியுமடைந்தார். அதே போல தேவனுடைய வழிநடத்துதலின் கீழ் நம்முடைய கிரியைகளும் வெற்றி பெறும். அநேக சூழ்நிலைகள் பாதகமாக இருப்பினும், மற்றவர்களுக்கு தவறாக தோன்றினாலும் நம்முடைய ஆண்டவர் சிலுவையில் அறையப்படுவதும் பிதாவின் வெற்றிகரமான திட்டத்தின் ஒரு பகுதியாக இருந்தது. ( R3786)

நாம் கிறிஸ்துவுக்குள் விசுவாசமுள்ள ஊழியக்காரர்களாய் இருக்கும் பட்சத்தில் சத்தியம் நமக்குள் நிலைத்திருக்கும்."ஆகையால் என்ன உத்தரவு சொல்லுவோமென்று கவலைப்படா திருக்கும்படி உங்கள் மனதிலே நிர்ணயம் பண்ணிக் கொள்ளுங்கள். உங்களை விரோதிக்கிறவர்கள் ஒருவரும் எதிர்பேசவும், எதிர்நிற்கவும் கூடாத வாக்கையும் ஞானத்தையும் நான் உங்களுக்குக் கொடுப்பேன். பெற்றோராலும், சகோதரராலும், பந்துஜனங்களாலும், சிநேகிதராலும் காட்டிக் கொடுக்கப்படுவீர்கள். உங்களில் சிலரைக் கொலை செய்வார்கள். என் நாமத்தினிமித்தம் எல்லாராலும் பகைக்கப்படுவீர்கள். ஆனாலும் உங்கள் தலை மயிரில் ஒன்றாகிலும் அழியாது. உங்கள் பொறுமையினால் உங்கள் ஆத்துமாக்களைக் காத்துக்கொள்ளுங்கள்" (லூ 21:14-19

**பவுல்**

எருசலேமில் பவுல் என்னப்பட்டவர் யூதர்கள் மத்தியில் கிறிஸ்தவர்களை உபத்திரவப்படுத்தும் ஒருவராக இருந்தார். (அப் 8:1-3) கிறிஸ்துவை பின்பற்றக் கூடியவர்களை உபத்திரவப்படுத் துவதற்காக அவர் எடுத்துக்கொண்ட விடாமுயற்சி ஆதியில் அவர் கொண்டிருந்த குணமாகக் காணப்பட்டது. சவுல் ஒரு பரிசேயனாக இருந்ததினால் அவர் சென்ற இடங்களில் நியாயப்பிரமாணத்தை போதிப்பதில் தகுதி பெற்றிருந்தார். சவுல், தோரா, மற்றும் யூதர்களின் பாரம்பரிய பழக்க வழக்கங்களையும் நன்கு அறிந்திருந்தார். அவர் ஒரு நல்ல தொழிலதிபராகவும் இருந்தார். தனிப்பட்ட முறையில் கூடாரத்தொழில் அறிந்தவராக இருந்தார். (அப் 18:3) கூடாரங்களை சரி செய்வது, விற்பது போன்ற காரியங்களுக்காக மத்திய கிழக்கு பகுதிகளிலுள்ள கவுல் சிரியா, போனிசியா, எகிப்து மற்றும் இஸ்ரயேல் போன்ற இடங்களுக்கு அவர் சென்றார்.

சவுல் பொதுஜனங்கள் பேசிய அராமிக் மொழியையும், வணிகத்தைப் பொறுத்த வரைக்கும் கிரேக்க மொழியையும் சரளமாகப் பேசினார். எருசலேம் தொழில் மையப்பகுதியாய் இருந்ததினால் சவுல் அங்கு வருவோர் போவோரால் நன்கு அறியப்பட்டிருந்தார். ரோமக் குடியுரிமையைப் பெற்றிருந்ததினால் சவுல் பல இடங்களுக்குச் செல்ல அதை பயன்படுத்தினார்.

சவுல் ஒரு மதிகெட்ட யூதனாயும், யூதர்களின் எல்லைக்கு அப்பால் இயேசுவை பற்றிய செய்தியை அறிவிப்பதற்கு நல்ல தகுதிப் பெற்றவராயுமிருந்தார். கிறிஸ்தவர்களை உபத்திரப் படுத்த வேண்டும் என்ற நோக்கத்துடன் தமஸ்குவுக்கு செல்லும் வழியில் அவர் மனம் மாற்றப்பட்டார். (அப் 9)

அவர் தேவனுடைய குமாரனிடத்திலிருந்து சத்தியத்தின் ஒளியைப் பெற்றுக்கொண்டார். அவர் மட்டுமே இவ்வகையான அனுபவத்திற்குள் சென்றார். அதோடு கூட கிறிஸ்துவின் உபதேசங்களைக் கற்றுக் கொள்வதற்கும் பரிசுத்த ஆவியின் வழிநடத்துதலின் கீழ் புதுசிருஷ்டியாக வளர்ச்சியடைவதற்கும் சகோதரர்களுடைய உதவி அவருக்குத் தேவைப்பட்டது. துவக்கத்தில் அனனியா, பர்னபா மற்றும் தீத்துவிடமிருந்து உதவிகளைப் பெற்றார். (அப் 9, கலா 1,2)

கிறிஸ்துவின் சீஷர்களை உபத்திரவப் படுத்தின காரியத்தில் சவுல் காட்டின அதே விடாமுயற்சி, இப்பொழுது இயேசுவே தேவனுடைய குமாரன் என்று பிரசங்கிப்பதில் வெளிப்படுத்தப்பட்டது. சவுலை பகைத்த யூதர்களினால் அவர் பயமுறுத்தப்பட்ட போது அவர் தனது தாய் நாடாகிய தர்சு பட்டணத்திற்குச் சென்றார்.

அவருடைய பெயர் பவுல் என்று மாற்றப்பட்டது. (அப் 13:9) பரிசுத்த ஆவியின் வழி நடத்துதலின் கீழ் தன்னுடைய புதிய கிறிஸ்தவ வாழ்க்கையை ஆயத்தம் பண்ணினார். அவர் தர்சுவில் வாழ்ந்த வருடங்களில் அவமானங்களையும் பல எதிர்ப்புகளையும் கோபங்களையும் எதிர் நோக்கினார்.

.. மத் 10:22 என்ற இயேசுவின் வார்த்தைகளை அவர் நினைவு கூர்ந்தார். அவர் விடாமுயற்சியோடு ஜெபித்து வேதத்தை ஆராய்ந்துப் பார்த்தார். காலப்போக்கில் புறஜாதிகளின் மத்தியில் சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதற்கு தேவனிடத்திலிருந்து அதிகாரம் பெற்றார்.

பவுலின் மூன்று ஆவிக்குரிய பயணங்கள் அதிக சோதனைகளையும், உபத்திரவங்களையும் வருவித்தது - சிறையிருப்பு, சாட்டைஅடி, கல்லெறிதல், மற்றும் கப்பல் சேதம். ஆனால், எந்த விதமான பாடுகளும், பவுல் தேவனிடத்தில் செய்த உடன்படிக்கையை நிறைவேற்றுவதற்கு தடையாக இருக்கவில்லை. எல்லா சூழ்நிலைகளிலும் உற்சாகத்தோடு கிறிஸ்துவுக்குள் செயல்பட தேவையான ஞானத்தை அவருக்குள்ளிருந்த விடா முயற்சி கொடுத்தது."ஆகையால், மேகம் போன்ற இத்தனை திரளான சாட்சிகள் நம்மைச் சூழ்ந்து கொண்டிருக்க, பாரமான யாவற்றையும், நம்மைச் சுற்றி நெருக்கி நிற்கிற பாவத்தையும் தள்ளிவிட்டு, விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம்; அவர் தமக்கு முன் வைத்திருந்த சந்தோஷத்தின் பொருட்டு, அவமானத்தை எண்ணாமல், சிலுவையை சகித்து, தேவனுடைய சிங்காசனத்தின் வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறார். ஆகையால் நீங்கள் இளைப்புள்ளவர்களாய் உங்கள் ஆத்துமாக்களில் சோர்ந்து போகாதபடிக்கு, தமக்கு விரோதமாய்ப் பாவிகளால் செய்யப்பட்ட இவ்விதமான விபரீதங்களைச் சகித்த அவரையே நினைத்துக்கொள்ளுங்கள்" (எபி 12:1-3)

**விசுவாசமுள்ளவர்களின் விடாமுயற்சி**

தேவனுடைய வேலைகளை உற்சாகமாக செய்வதற்கு- மோசே, இயேசு மற்றும் பவுலிடம் காணப்பட்ட விடாமுயற்சியானது சிறந்த எடுத்துக்காட்டாக இருக்கிறது. ஆயினும் இவர்கள் ஒவ்வொருவரும் மிகுந்த மனத்தாழ்மையை வெளிப்படுத்தினார்கள்.

எகிப்தின் அரண்மனையில் பயிற்சி பெற்ற மோசே யேகோவா தேவனின் சித்தத்தை செய்வதற்கு சகலத்தையும் விட்டுக் கொடுத்தார். (எண் 12:3)

இயேசு தேவனுடைய லோகாஸாக இருந்தாலும், மனுக்குலத்தை இரட்சிப்பதற்கு சகலத்தையும் விட்டுக்கொடுத்தார். "கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது; அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார். அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார். "(பிலி 2:5-8)

பவுல் கமாலியேலின் பாதபடியில் கற்றிருந்தாலும், புறஜாதிக்கு சுவிசேஷத்தை அறிவிக்கவும், தன்னுடைய அழைப்பை உறுதிப்படுத்திக் கொள்ளவும் சகலத்தையும் விட்டுக் கொடுத்தார்."இங்கேயும் உம்முடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுகிற யாவரையுங் கட்டும்படி அவன் பிரதான ஆசாரியர்களால் அதிகாரம் பெற்றிருக்கிறானே என்றான். அதற்கு கர்த்தர்: நீ போ; அவன் புறஜாதிகளுக்கும் ராஜாக்களுக்கும் இஸ்ரவேல் புத்திரருக்கும் என்னுடைய நாமத்தை அறிவிக்கிறதற்காக நான் தெரிந்து கொண்ட பாத்திரமாயிருக்கிறான். அவன் என்னுடைய நாமத்தினிமித்தம் எவ்வளவாய்ப் பாடுபட வேண்டுமென்பதை நான் அவனுக்குக் காண்பிப்பேன் என்றார்" (அப் 9:14-16)

**மனதாழ்மையும், விடாமுயற்சியும்**

நாம் தேவனிடத்தில் செய்த உடன் படிக்கையை நிறைவேற்றவும், சபை நிறைவடையவும், நாம் மனத்தாழ்மையோடு கூடிய விடாமுயற்சியை வெளிப்படுத்துவோம். நாம் ஒவ்வொருவரும் நம்முடைய விசுவாசத்தோடு விடா முயற்சியை கூட்டிச் சேர்த்து மனப்பூர்வமாய் நம்முடைய சித்தங்களை தேவனிடத்தில் அர்ப்பணிப்போம்."அவர் உங்களை விசாரிக்கிறவரானபடியால், உங்கள் கவலைகளையெல்லாம் அவர்மேல் வைத்து விடுங்கள். தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள், விழித்திருங்கள்; ஏனெனில், உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம்போல் எவனை விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித்திரிகிறான். விசுவாசத்தில் உறுதியாயிருந்து, அவனுக்கு எதிர்த்து நில்லுங்கள்; உலகத்திலுள்ள உங்கள் சகோதரரிடத்திலே அப்படிப்பட்ட பாடுகள் நிறைவேறிவருகிறதென்று அறிந்திருக்கிறீர்களே.கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மைத் தமது நித்திய மகிமைக்கு அழைத்தவராயிருக்கிற சகல கிருபையும் பொருந்திய தேவன்தாமே கொஞ்சக்காலம் பாடநுபவிக்கிற உங்களைச் சீர்ப்படுத்தி, ஸ்திரப்படுத்தி, பலப்படுத்தி, நிலை நிறுத்துவாராக"(1பேது 5:7-10)

யுசிபியா

# தேவ பக்தி



"அந்தப்படி, முந்தின நடக்கைக்குரிய மோசம்போக்கும் இச்சைகளாலே கெட்டுப்போகிற பழைய மனுஷனை நீங்கள் களைந்துபோட்டு, உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியுள்ளவர்களாகி, மெய்யான நீதியிலும் பரிசுத்தத்திலும் தேவனுடைய சாயலாகச் சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக்கொள்ளுங்கள்" எபேசி 4:22-24 (நீதி 17:22)

B.F Holister என்பவருடைய சொற்பொழிவிலிருந்து எடுக்கப்பட்டது

பேதுருவின் வரிசையில் விசுவாசத்தோடு கூட்ட வேண்டிய குணலட்சணங்களில் தேவபக்தியும் காணப்படுகிறது. (1பேது 1:6) யுசிபியா (eusebeia)என்ற கிரேக்க வார்த்தை தேவபக்தி என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. (2150) புதிய ஏற்பாட்டில் உள்ளான பக்தி ஆவிக்குரிய முதிர்ச்சி மற்றும் தேவ பக்திக்கு இவ்வார்த்தை பயன் படுத்தப்பட்டிருக்கிறது. "தேவனுடைய ஊழியக்காரனும், இயேசுகிறிஸ்துவினுடைய அப்போஸ்தலனுமாகிய பவுல், பொதுவான விசுவாசத்தின்படி உத்தம குமாரனாகிய தீத்துவுக்கு எழுதுகிறதாவது"(தீத்து1:1) முழுமையாக சத்தியத்தின் அறிவை நடை முறைப்படுத்துவதினால் தேவபக்தியின் நிலை ஒருவர் பெறலாம் என்று பவுல் இங்கு குறிப்பிடுகிறார்.

(eusebeia)யுசிபியா என்ற வார்த்தைக்கு ஒரு ஆர்வமூட்டும் வரலாறு உண்டு. முதன்முதலில் கிமு 1000-ல் ஹோமர் என்ற கவிஞன் இதை பயன்படுத்தினார். கிரேக்க கவிஞன், அதற்குப்பின் மனித உறவுகளில் தனிப்பட்ட பக்தியை குறிப்பிடுவதற்கு அத்தேனே பட்டணத்தார் பயன்படுத்தினார்கள். கிரேக்க தெய்வங்கள் ஆட்சி செய்து கொண்டிருந்த பட்டணத்தில் தங்களுடைய கடமையை விசுவாசத்தோடு நிறைவேற்றக் கூடிய ஒரு நபரை விவரிப்பதற்கு இவ்வார்த்தையை பயன்படுத்தினார்கள். பொதுவாக வெளிப்படையாகக் குறிப்பிடுவதற்கு இந்த வார்த்தையை பயன்படுத்தினார்கள். பலிகளில் பங்களித்தல், கடவுளுக்கு காணிக்கை செலுத்துதல் அல்லது பொதுவான வழிபாடு.

(eusebeia) யுசிபியா என்ற வார்த்தை பொதுவான கிரேக்க மொழியில் பயன்படுத்த துவங்கப்பட்டு, உள்ளான மனுஷன் தேவனுக்குள் விசுவாசமாய் இருப்பதையும், ஆவிக்குரிய உள்ளான பக்தியையும் பொருள்பட துவங்கியது. கட்டுப்பாடு அல்லது கிறிஸ்துவின் சாயலை பெறக்கூடிய பரிசுத்த ஆவியினால் நிரப்பப்படக்கூடிய கோட்பாடு தீத்துவில் சொல்லப்பட்ட வசனத்தில் விவரிக்கப்படுகிறது.

பக்தி சில நேரங்களில் தவறான கருத்துக்களையும் குறிப்பிடும். ஆயினும் ஆவிக்குரிய முதிர்ச்சி நிலையை அடைந்த ஒருவரை விவரிக்கும்பொழுது இந்த வார்த்தை சரியாக பொருந்தும். மற்றவர்களை ஈர்ப்பதற்கோ மேலோட்டமான வேஷத்தை தரிப்பதற்கோ இது வார்த்தை இல்லை. தேவனுடைய வார்த்தைகளை ஆராய்ந்து அவரிடம் செலுத்தக் கூடிய முழு அர்ப்பணிப்பிலிருந்தே உண்மையான பக்தி வெளிப்படும். பக்தியுள்ளவர்கள் தேவனுடைய உபதேசங்களை கற்றறிந்து கொள்வதினால் மட்டுமல்ல, தங்களுடைய வாழ்க்கையில் முழுமையாக நடைமுறைப்படுத்தக் கூடியவர்களாகவும் இருப்பார்கள்.

தேவபக்தியை பிரதிபலிக்கும் ஒரு கிறிஸ்தவர் தேவனுடைய ஆவியினால் நடத்தப்பட வேண்டும். நம்முடைய வாழ்க்கையில் பல காரியங்கள், நம்மை திசை திருப்புவதால் இது ஒரு கடினமான காரியமாக உள்ளது. சகல சிந்தனைகளையும் மற்றும் வார்த்தைகளையும் தேவனுடைய சித்தத்திற்கு அர்ப்பணிப்பதே தேவ பக்தி ஆகும். முழுமையான அர்பணித்தல், உண்மையான அன்பு தேவனிடத்தில் கொண்டுள்ள ஆழமான பக்திவைராக்கியம், உண்மையோடு அவருக்கு கீழ்ப்படிதல் போன்ற காரியங்களும் தேவ பக்திஆகும். மனுஷ இலக்குகளை பெறுவதைக் காட்டிலும் தேவபக்தியே இலாபகரமானது. ஏனெனில், இனிவரும் காலங்களில் அதன் பலனை அடைவோம். அதின் வழியாய் முதலாம் உயிர்த்தெழுதலில் பங்கடைதல். மேலும் இனிவரக்கூடிய காலங்களில் நாம் செய்யக்கூடிய வேலைகளுக்கு இந்த தேவபக்தி நம்மை ஆயத்தப் படுத்தும்.

### சபைக்கு தேவனுடைய வாக்குறுதிகள்

இந்த உலகத்தில் பெறக்கூடிய வெற்றிகளை தேவ நம்பிக்கை தடை செய்வதாக எண்ணி பலர் தேவன் மேல் வைக்கும் நம்பிக்கையை புறக்கணிக்கிறார்கள். ஆயினும் தேவன் தம்முடைய பலன்களுக்கு இந்த வாழ்க்கையில் நூறத்தனையான ஆசீர்வாதங்களை வாக்களித்திருக்கிறார். (மாற் 10:30) "கர்த்தருடைய பரிசுத்தவான்களே, அவருக்குப் பயந்திருங்கள்; அவருக்குப் பயந்தவர்களுக்குக் குறைவில்லை. சிங்கக்குட்டிகள் தாழ்ச்சியடைந்து பட்டினியாயிருக்கும்; கர்த்தரைத் தேடுகிறவர்களுக்கோ ஒரு நன்மையுங் குறைவுபடாது"சங் 34:9,10 போல

வேதாகமத்தில் பல வாக்குத்தத்தங்களைக் காணலாம்.." ஆகையால் பொல்லாப்பு உனக்கு நேரிடாது, வாதை உன் கூடாரத்தை அணுகாது. உன் வழிகளிலெல்லாம் உன்னைக் காக்கும்படி, உனக்காகத் தம்முடைய தூதர்களுக்குக் கட்டளையிடுவார்" சங் 91:10,11"அவன் நீர்க்கால்களின் ஓரமாய் நடப்பட்டு, தன் காலத்தில் தன் கனியைத் தந்து, இலையுதிராதிருக்கிற மரத்தைப் போலிருப்பான்; அவன் செய்வதெல்லாம் வாய்க்கும்"(சங் 1:3) இவ் வாக்குத்தத்தங்களை " மனுஷன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக் கொண்டாலும், தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன? மனுஷன் தன் ஜீவனுக்கு ஈடாக என்னத்தைக் கொடுப்பான்?"(மத் 16:26) என்று சொல்லப்பட்ட இயேசுவின் வார்த்தைகளோடு ஒப்பிட்டுப் பாருங்கள்.

தேவபக்தி சோம்பேறித்தனத்தை எப்பொழுதும் ஊக்குவிப்பதில்லை. "அசதியாயிராமல் ஜாக்கிரதையாயிருங்கள்; ஆவியிலே அனலாயிருங்கள்; கர்த்தருக்கு ஊழியஞ் செய்யுங்கள்"ரோமர் 12:11 என்ற அப்போஸ்தலர் கூறுகிறார்." ஒருவன் தன் சொந்த ஜனங்களையும் விசேஷமாகத் தன் வீட்டாரையும் விசாரியாமற் போனால், அவன் விசுவாசத்தை மறுதலித்தவனும், அவிசுவாசியிலும் கெட்டவனுமாயிருப்பான்" 1தீமோ 5:8 என்றும் அவர் கூறுகிறார்.

நீ என்ன வேலை செய்கிறாய் என்று ஒரு செருப்பு தைப்பவரிடம் கேட்ட பொழுது, "நான் தேவனை சேவிக்கிறேன், என்னுடைய செலவுக்காக செருப்பு தைக்கிறேன்." ஒரு நியாயமான கிறிஸ்தவருடைய நியாயமான நோக்கம் இப்படியாகவே இருக்க வேண்டும். அதிகமான கிறிஸ்தவ பயணத்தை மேற்கொண்ட பவுல், உயர்வான யூதர்களின் மத்தியில் அதிகமாக சம்பாதித்தார். நான் யூதனுக்கு யூதன் என்று "மாம்சத்தின்மேல் நம்பிக்கை வைக்க வேண்டுமானால் நானும் வைக்கலாம்; வேறொருவன் மாம்சத்தின்மேல் நம்பிக்கையாயிருக்க நினைத்தால் நான் அதிகமாய் அப்படிச் செய்யலாம். நான் எட்டாம் நாளிலே விருத்தசேதனமடைந்தவன், இஸ்ரவேல் வம்சத்தான், பென்யமீன் கோத்திரத்தான், எபிரெயரில் பிறந்த எபிரெயன், நியாயப்பிரமாணத்தின்படி பரிசேயன்; பக்திவைராக்கியத்தின்படி சபையைத் துன்பப்படுத்தினவன், நியாயப்பிரமாணத்திற்குரிய நீதியின்படி குற்றஞ்சாட்டப்படாதவன்.ஆகிலும், எனக்கு லாபமாயிருந்தவைகளெவைகளோ அவைகளைக் கிறிஸ்துவுக்காக நஷ்டமென்று எண்ணினேன்" (பிலி 3:4-7) என்ற வசனங்களில் தன்னைக் குறித்து விவரித்தார். மேலும் ரோமருக்குரிய விசேஷித்த குடியுரிமையை தன்னுடைய தந்தையின் மூலம் பெற்றதை பெஸ்து ரோம ஆளுநருக்கு முன் பயன்படுத்தினார் "நான் அநியாயஞ்செய்து, மரணத்துக்குப் பாத்திரமானது ஏதாகிலும் நடப்பித்ததுண்டானால், நான் சாகாதபடிக்கு மனு கேட்கமாட்டேன். இவர்கள் என்மேல் சாட்டுகிற குற்றங்கள் முற்றிலும் அபத்தமானால், அவர்களுக்குத் தயவு பண்ணும்பொருட்டு ஒருவரும் என்னை அவர்களுக்கு ஒப்புக்கொடுக்கலாகாது. இராயருக்கு அபயமிடுகிறேன் என்றான்."(அப் 25:11) தன்னுடைய சுய லாபத்திற்காக அல்ல சுவிசேஷத்தை பிரசிங்கிப்பதற்காகவே இப்படிப்பட்ட மாம்ச லாபங்களை இழந்து கிறிஸ்துவுக்கு ஒரு அப்போஸ்தலனானார்.

தேவபக்தியில் வளர்ச்சி அடையவேண்டுமென்று விரும்புபவர்கள், வேதாகமத்தை நன்கு ஆராய்ந்து யுகங்களை பற்றிய தேவனுடைய திட்டத்தை அவர் தமது வசனங்களின் மூலமாக அறிவித்திருக்கிறார் என்பதை உணர்ந்து கொள்வார்கள். தேவனுடைய இந்த திட்டத்தை அறிவிப்பதே சபைக்குண்டான இக்காலத்து வேலை என்று பவுல் கூறுகிறார். "உன்னதங்களிலுள்ள துரைத்தனங்களுக்கும் அதிகாரங்களுக்கும் அவருடைய அனந்த ஞானமானது சபையின் மூலமாய் இப்பொழுது தெரிய வரும் பொருட்டாக,இயேசுகிறிஸ்துவைக் கொண்டு எல்லாவற்றையும் சிருஷ்டித்த தேவனுக்குள்ளே ஆதிகாலங்கள் முதல் மறைந்திருந்த இரகசியத்தினுடைய ஐக்கியம் இன்னதென்று, எல்லாருக்கும் வெளிப்படையாகக் காண்பிக்கிறதற்கு, இந்தக் கிருபை எனக்கு அளிக்கப்பட்டிருக்கிறது." (எபே 3:10,11)

**தேவ பக்தியினால் வரும் பலன்கள்**

இவ்வாழ்க்கையில் தேவ பக்தியினால் நான்கு அடிப்படையான பலன்களை நாம் பெறலாம். முதலாவது, தேவனுடைய பரிசுத்தஆவியினால் ஸ்நானம் பெறுவதே இன்றைய கிறிஸ்தவர்கள் அனுபவிக்கும் மிக உயர்ந்த பலனாகும். இந்த ஒரு பரிசு இயேசு உயிர்த்தெழுந்த ஐம்பதாவது நாளிலே சீஷர்களுக்குக் கொடுக்கப்பட்டது. (அப் 25:15-17) பலமான காற்று அந்த மேல் வீட்டை நிரப்பி அக்கினியின் நாவுகளைப் போல பிரிந்த நாவுகள் ஒவ்வொருவரின்மேல் இறங்கினதாக (அப் 2:1-4) வசனங்கள் விவரிக்கிறது. மூன்றரை வருடங்களுக்குப் பின்பு புறஜாதிகளுக்கு தேவனுடைய பரலோக இராஜ்யத்திற்கான அழைப்பு திறக்கப்பட்ட போது கொர்நேலியுவிற்கும் அவருடைய வீட்டாருக்கும் பரிசுத்த ஆவியின் அபிஷேகம் கிடைத்தது. இப்படிப்பட்ட மாபெரும் வழிநடத்துதலை தேவன் தம்முடைய ஆவியினால் கொடுத்ததை நம்மால் முழுமையாக புரிந்து கொள்ள முடியாது."இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: ஒருவன் என்னில்

அன்பாயிருந்தால், அவன் என் வசனத்தைக் கைக்கொள்ளுவான், அவனில் என் பிதா அன்பாயிருப்பார்; நாங்கள் அவனிடத்தில் வந்து அவனோடே வாசம் பண்ணுவோம்" யோவான் 14:23, என்று இயேசு கூறுகிறார். இந்த ஒரு வாக்குத்தத்தமானது ஒரு மனுஷனை பக்தியற்ற வழிகளிலிருந்து தூக்கி புதிதான வழியில் நடக்க வழிநடத்துகிறது. "இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுசிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்து போயின, எல்லாம் புதிதாயின"(11கொரி 5:17)

தேவனுடைய பரிசுத்த ஆவியை பெற்ற பின்பு ஓர் நன்மை, நம்மை தொடருகிறது. பக்தி உள்ளவர்கள் முதலில் விசுவாசத்தினால் நீதிமானாக்கப்பட வேண்டும். கல்வாரியில் ஈடுபலி செலுத்தப்பட்டு தேவனால் அங்கீகரிக்கப்படும் வரை இந்த ஒரு காரியம் நடத்தப்படவில்லை. ஆதாமின் மரணத்தீர்ப்பிலிருந்து விசுவாசிகளுக்கு இந்த ஈடுபலியின் கிரயம் விடுதலையளிக்கிறது. "அறியாமையுள்ள காலங்களைத் தேவன் காணாதவர்போலிருந்தார்; இப்பொழுதோ மனந்திரும்ப வேண்டுமென்று எங்குமுள்ள மனுஷரெல்லாருக்கும் கட்டளையிடுகிறார். மேலும் ஒரு நாளைக் குறித்திருக்கிறார்; அதிலே அவர் தாம் நியமித்த மனுஷனைக்கொண்டு, பூலோகத்தை நீதியாய் நியாயந்தீர்ப்பார்; அந்த மனுஷனை மரித்தோரிலிருந்து எழுப்பினதினாலே அதின் நிச்சயத்தை எல்லாருக்கும் விளங்கப் பண்ணினார் என்றான்" அப் 17:30,31 நீதிமானாக்கப்பட்ட நிலை பூரணமாகும்போதே ஒருவரின் பாவமான வாழ்க்கை நிலை மாற்றப்பட்டு நீதியின் பாதையில் செல்ல வழிவகுக்கிறது. பல தடைகளின் மத்தியிலும் இப்படிப்பட்ட வாழ்க்கை தொடர்ந்து நடத்தப்பட வேண்டும். இதைக் குறித்து ரோமர் 12:1-ல் காணலாம். "அப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்க வேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்; இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை."

மூன்றாவதாக பக்தி உள்ளவர்களுக்கு வேதத்தின் வழியாக போதனைகளும், உபதேசங்களும், மாதிரிகளும் நேரடியாக கொடுக்கப்படுகிறது. (11கொரி 3:18) இது ஒரு கண்ணாடிக்கு ஒப்பிடப்படுகிறது. "நாமெல்லாரும் திறந்த முகமாய்க் கர்த்தருடைய மகிமையைக் கண்ணாடியிலே காண்கிறது போலக் கண்டு, ஆவியாயிருக்கிற கர்த்தரால் அந்தச் சாயலாகத்தானே மகிமையின்மேல் மகிமையடைந்து மறுரூபப்படுகிறோம்."

நான்காவதாக தேவபக்தியில் நடப்போர் தேவனுடைய நன்மைகளையும், வழி நடத்துதலையும் பெற்று தொடர்ந்து பிதாவாகிய ஆதாமின் சாயலில் இருந்தவர்கள் கிறிஸ்துவின் சாயலுக்கு உருமாற்றப்படுகிறார்கள். இதற்குள்ளாக தங்களுக்குள்ளான விசுவாசத்தையும், தைரியத்தையும், நீடிய பொறுமையையும், சகோதர அன்பையும், தேவபக்தியையும் சகல ஜனங்களின் மேல் காட்டும் தேவ அன்பிலும் இவர்கள் வளர்ச்சியடைவார்கள். (11பேது 1:5-8)

**மற்ற பலன்கள்**

தேவ பக்தியின் அடிப்படையிலான பலன்களை மகிழ்ச்சியோடு அனுபவிப்பார்கள். கூடுதலாக ஆவிக்குரிய விடுதலை, சமாதானம், வல்லமை மற்றும் ஐசுவரியங்களைத் தருகிறது."சரீரமுயற்சி அற்ப பிரயோஜனமுள்ளது; தேவபக்தியானது இந்த ஜீவனுக்கும் இதற்குப் பின்வரும் ஜீவனுக்கும் வாக்குத்தத்தமுள்ளதாகையால் எல்லாவற்றிலும் பிரயோஜனமுள்ளது "1தீமோ 4:8 என்று பவுல் கூறுகிறார்.

இந்த உலகத்தின் குடிமக்கள் மத்தியில் சுதந்திரம் ஒரு விலையேறப் பெற்றக் காரியமாக இருக்கிறது. இந்த குடியுரிமையைப் பெற்று விடுதலையடைவதற்கு அநேகர் மிகப்பெரிய யுத்தங்களை நடப்பித்து மரித்தும் இருக்கிறார்கள். உலகம் முழுவதிலும் அரசியல் ரீதியாகவும், மத ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் விடுதலை பெறுவதற்கு நீண்ட கால புரட்சிகள் ஏற்பட்டது. ஆயினும் கிறிஸ்துவின் உண்மையான சீஷர்களே உண்மையான விடுதலை பெற்றவர்கள். இவர்கள் பாவத்தின் அடிமையிலிருந்தும் இனிவரும் வாழ்க்கையின் பயத்திலிருந்தும் விடுதலை பெற்றவர்கள். பக்தியுள்ளவர்களாய் நடக்க விரும்புபவர்கள் நன்மை மட்டும் செய்து தங்களின் வாழ்க்கை நிலையை உயர்த்திக் கொள்ளுகிறார்கள். மீட்புக்குரிய பூரண பிரமாணத்தை இரவும், பகலும் தியானித்து இயேசுவின் சீஷர்களாக இயேசுவின் உபதேசத்தில் கீழ்ப்படிய முயற்சிப்பார்கள். "சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும் என்றார்"" ஆகையால் குமாரன் உங்களை விடுதலையாக்கினால் மெய்யாகவே விடுதலையாவீர்கள்"(யோவ 8:32,36) என்று இயேசு உறுதியளித்தார்.

இந்த உலகத்தில் சிலர் தங்களுடைய வாழ்க்கையில் சமாதானம் என்பதைப்பற்றி அறியாமல் இருக்கிறார்கள். இந்த உலக வாழ்க்கையில் போராட்டங்களும், நம்பிக்கையற்ற நிலையும் இயல்பாக காணப்படுகிறது. ஆயினும் தேவபக்தி உள்ளவர்கள் வாழ்க்கையில் இது முற்றிலும் வேறுபடுகிறது. "சமாதானத்தை உங்களுக்கு

வைத்துப்போகிறேன், என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன்; உலகம் கொடுக்கிற பிரகாரம் நான் உங்களுக்குக் கொடுக்கிறதில்லை. உங்கள் இருதயம் கலங்காமலும், பயப்படாமலும் இருப்பதாக."(யோவ 14:27)என்று இயேசு தெளிவாக விளக்கினார்.

இன்றைய உலகம் அதிகமாக பாதுகாப்பை நாடுகிறது. அநேகர் தங்களுடைய சொந்த பாதுகாப்பிற்காக தனிப்பட்ட முயற்சிகளை எடுக்கிறார்கள். கடந்த ஐந்து வருடங்களாக அநேகர் பொருளாதார பாதுகாப்பை இழந்திருக்கிறார்கள். ஆயினும் எல்லா சூழ்நிலைகளின் மத்தியிலும் தேவ பிள்ளைகள் மிக பாதுகாப்பாய் இருக்கிறார்கள்." தேவன் நமக்கு அடைக்கலமும் பெலனும், ஆபத்துக் காலத்தில் அநுகூலமான துணையுமானவர். ஆகையால் பூமி நிலைமாறினாலும், மலைகள் நடுச்சமுத்திரத்தில் சாய்ந்து போனாலும், அதின் ஜலங்கள் கொந்தளித்துப் பொங்கி, அதின் பெருக்கினால் பர்வதங்கள் அதிர்ந்தாலும், நாம் பயப்படோம். (சேலா.) ஒரு நதியுண்டு, அதின் நீர்க்கால்கள் தேவனுடைய நகரத்தையும், உன்னதமானவர் வாசம்பண்ணும் பரிசுத்த ஸ்தலத்தையும் சந்தோஷிப்பிக்கும். தேவன் அதின் நடுவில் இருக்கிறார், அது அசையாது; அதிகாலையிலே தேவன் அதற்குச் சகாயம் பண்ணுவார்"(சங் 46:1-5)

இன்றைய தினத்தில் மிகுந்த வல்லமையையும் மேலான கனத்தையும் பெற வேண்டுமென்று மனுஷர் இயல்பாக விரும்புகிறார்கள். ஆயினும் தேவபக்தியே உண்மையான மிகுந்த கனத்தையும் வல்லமையையும் கொடுக்கக் கூடியதாய் இருக்கிறது. "நீதிமான் தன் அயலானைப்பார்க்கிலும் மேன்மையுள்ளவன்; துன்மார்க்கருடைய வழியோ அவர்களை மோசப்படுத்தும்" நீதி 12:26 என்று சாலொமோன் கூறுகிறார் "என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ்செய்ய எனக்குப் பெலனுண்டு" (பிலி 4:13) என்று பவுல் பெருமை பாராட்டுகிறார். இந்த தீமையான உலகத்தை ஆட்சி செய்யக்கூடிய நிலைகளில் இருப்பவர்கள் மூலமாக செயல்படக்கூடிய துன்மார்க்கமான அசுத்த ஆவிகள் நமக்கெதிராக செயல்படுகிறது. ஆயினும் அவர்கள் மேல் வெற்றியடைவோம் என்று நமக்கு வாக்களிக்கப் பட்டிருக்கிறது. நாம் தேவனுடைய எண்ணற்ற ஞானத்தை அவர்களுக்குக் காண்பிக்கலாம் (எபே 3:10, 6:12) பக்தி உள்ளவர்கள் சுயத்தை ஜெயிப்பதற்கு அழைக்கப்படுகிறார்கள். சுயநீதிகளை எதிர்க்கக் கூடிய சகல எதிர்ப்புகளையும் எதிர்ப்பதற்கான வல்லமை வாக்களிக்கப்படுகிறது. (நீதி 16:32)

உண்மையும் உத்தமுமான வாழ்க்கையை வாழக்கூடியவர்களுக்கு ஆச்சரியமான ஆவிக்குரிய ஆசீர்வாதங்கள் வாக்களிக்கப்பட்டுள்ளது. "இப்படியிருக்க, ஒருவனும் மனுஷரைக்குறித்து மேன்மைபாராட்டாதிருப்பானாக; எல்லாம் உங்களுடையதே; பவுலாகிலும், அப்பொல்லோவாகிலும், கேபாவாகிலும், உலகமாகிலும், ஜீவனாகிலும், மரணமாகிலும், நிகழ் காரியங்களாகிலும், வருங்காரியங்களாகிலும், எல்லாம் உங்களுடையது; நீங்கள் கிறிஸ்துவினுடையவர்கள்; கிறிஸ்து தேவனுடையவர்" 1கொரி 3:21-23)" சகல காட்டு ஜீவன்களும், பர்வதங்களில் ஆயிரமாயிரமாய்த் திரிகிற மிருகங்களும் என்னுடையவைகள். மலைகளிலுள்ள பறவைகளையெல்லாம் அறிவேன்; வெளியில் நடமாடுகிறவைகளெல்லாம் என்னுடையவைகள். நான் பசியாயிருந்தால் உனக்குச் சொல்லேன்; பூமியும் அதின் நிறைவும் என்னுடையவைகளே"(சங் 50:10,12) என்று சங்கீதக்காரரும் கூறுகிறார்.

**நித்தியத்திற்கான வாக்குறுதிகள்**

*"என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு; அப்படியில்லாதிருந்தால், நான் உங்களுக்குச் சொல்லியிருப்பேன்; ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்போகிறேன். நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம் பண்ணினபின்பு, நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக் கொள்ளுவேன்" யோவா 14:2,3

*"நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கி றோமென்று ஆவியானவர் தாமே நம்முடைய ஆவியுடனே கூட சாட்சி கொடுக்கிறார்.நாம் பிள்ளைகளானால் சுதந்தரருமாமே; தேவனுடைய சுதந்தரரும், கிறிஸ்துவுக்கு உடன் சுதந்தரருமாமே; கிறிஸ்துவுடனேகூட நாம் மகிமைப்படும்படிக்கு அவருடனே கூடப் பாடுபட்டால் அப்படியாகும்"ரோமர் 8:16,17

*"பாவஞ்செய்த தூதர்களை தேவன் தப்ப விடாமல், அந்தகாரச் சங்கிலிகளினாலே கட்டி நரகத்திலே தள்ளி நியாயத்தீர்ப்புக்கு வைக்கப்பட்டவர்களாக ஒப்புக்கொடுத்து"11பேதுரு 1:4 இந்த வாக்குறுதிகளை ஏற்றுக் கொண்டாலும். "பிரியமானவர்களே, இப்பொழுது தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம், இனி எவ்விதமாயிருப் போமென்று இன்னும் வெளிப்படவில்லை; ஆகிலும் அவர் வெளிப்படும்போது அவர் இருக்கிறவண் ணமாகவே நாம் அவரைத் தரிசிப்பதினால், அவருக்கு ஒப்பாயிருப்போமென்று அறிந்திருக்கி

றோம்" 1யோவ 3:2) என்பதையும் நாம் ஒத்துக்கொள்ள வேண்டும்.

கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவைப் போல இருப்பதால், வருங்காலத்தில் அவர்களுக்குண்டான மகிமையைக் குறித்து வசனங்கள் விவரிக்கிறது. யேகோவா தேவன் தம்முடைய சர்வ வல்லமையைப் பயன்படுத்தி கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பி சகல காரியங்களுக்கும் சுதந்தரவாளியாக்கி, எல்லா சிருஷ்டிகளுக்கும் மேலாக அவரை உயர்த்தி தமது வலது பாரிசத்தில் வீற்றிருக்கச் செய்து, சரீரமான சபைக்கு தலையாகவும் ஏற்படுத்தினார் என்பதை நன்கு அறிந்திருக்கிறோம். இந்த உலகத்தில் அவர் மனுஷனாக வருவதற்கு முன் பெற்றிருந்த நிலைமையைக் காட்டிலும் மிக உன்னதமான மகிமையின் நிலையை இப்பொழுது அடைந்திருக்கிறார். துவக்கத்தில் அவர் தேவனுடைய பிரதிநிதியாக லோகாஸாக பூமியையும் அதிலுள்ள சகலத்தையும் சிருஷ்டித்தார். இப்பொழுது கிறிஸ்து யோகோவா தேவனின் சொந்த நிலைக்குரிய மகிமையைப் பெற்றிருக்கிறார். (யோவ 1:1-3, அப் 22-6, அப் 26:13, எபேசி 1:19-23, 1தீமோ 6:15,16, எபி 1:2-4)

தெய்வீக சபையைப் பொறுத்தவரையில் பவுலும் இப்படிப்பட்ட வார்த்தைகளைப் பயன்படுத்தினார்." எழுதியிருக்கிறபடி: தேவன் தம்மில் அன்பு கூருகிறவர்களுக்கு ஆயத்தம் பண்ணினவைகளைக் கண் காணவுமில்லை, காது கேட்கவுமில்லை, அவைகள் மனுஷருடைய இருதயத்தில் தோன்றவுமில்லை;

நமக்கோ தேவன் அவைகளைத் தமது ஆவியினாலே வெளிப்படுத்தினார்; அந்த ஆவியானவர் எல்லாவற்றையும், தேவனுடைய ஆழங்களையும், ஆராய்ந்திருக்கிறார்"(1கொரி 2:9,10) "அழிவுள்ளதாகிய இது அழியாமையையும், சாவுக்கேதுவாகிய இது சாவாமையையும் தரித்துக்கொள்ளும்போது, மரணம் ஜெயமாக விழுங்கப்பட்டது என்று எழுதியிருக்கிற வார்த்தை நிறைவேறும். மரணமே! உன் கூர் எங்கே? பாதாளமே! உன் ஜெயம் எங்கே?" (1கொரி 15:54,55)

கிறிஸ்து மற்றும் அவருடைய சபை வருங்காலத்தில் உயர்த்தப்படும் நிலையைக் குறித்து நாம் எண்ணிப் பார்க்கையில் வியக்கத் தக்கதாயிருக்கிறது. மேலும் ஆயிர வருட ஆட்சியில் இவர்கள் செய்யக்கூடிய பிரம்மாண்டமான கிரியையை எண்ணும் போதும் மிக ஆச்சரியமாக உள்ளது. இந்த உலகத்தை பரிசுத்தவான்கள் ஆட்சி செய்வார்கள் என்று 1கொரி 6:2 ல் வாசிக்கிறோம். "அந்த ஆயிர வருஷமளவும் பரிசுத்தவான்கள் கிறிஸ்துவுடனே கூட ஆட்சி செய்வதை யோவான் தரிசனத்தில் கண்டார் என்று (வெளி 20 : 4)ல் வாசிக்கிறோம். இந்த ஆட்சி முழு மனுக்குலத்தின் மேல் நடத்தப்படும். ஏனெனில். " இதைக்குறித்து நீங்கள் ஆச்சரியப்பட வேண்டாம்; ஏனென்றால் பிரேதக்குழிகளிலுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்குங்காலம் வரும்; அப்பொழுது, நன்மை செய்தவர்கள் ஜீவனை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும், தீமை செய்தவர்கள் ஆக்கினையை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும் புறப்படுவார்கள்" (யோவா 5:28,29) என்று இயேசு கூறுகிறார். இது தண்டனை அளிக்கக்கூடிய தீர்ப்பாயிராமல் திருந்துவதற்கான முயற்சியாகும். ஏனெனில், "என் ஆத்துமா இரவிலே உம்மை வாஞ்சிக்கிறது; எனக்குள் இருக்கிற என் ஆவியால் அதிகாலையிலும் உம்மைத் தேடுகிறேன்; உம்முடைய நியாயத்தீர்ப்புகள் பூமியிலே நடக்கும் போது பூச்சக்கரத்துக்குடிகள் நீதியைக் கற்றுக்கொள்வார்கள்" ஏசா 26:9 என்று ஏசாயா கூறுகிறார்.

"சீயோனின் சிறையிருப்பைக் கர்த்தர் திருப்பும் போது, சொப்பனம் காண்கிறவர்கள்போல் இருந்தோம்.அப்பொழுது நம்முடைய வாய் நகைப்பினாலும், நம்முடைய நாவு ஆனந்த சத்தத்தினாலும் நிறைந்திருந்தது; அப்பொழுது: கர்த்தர் இவர்களுக்குப் பெரிய காரியங்களைச் செய்தார் என்று புறஜாதிகளுக்குள்ளே சொல்லிக் கொண்டார்கள்.கர்த்தர் நமக்குப் பெரிய காரியங்களை செய்தார்; இதினிமித்தம் நாம் மகிழ்ந்திருக்கிறோம்"சங் 126:1-3 என்பதே சபை பெற்றுள்ள வாக்குத்தத்தங்களில் மிகச் சிறந்ததாகும்.

இந்த வாழ்க்கையில் கிறிஸ்துவின் சாயலை அடைவதற்கு ஒருவர் எடுக்கக்கூடிய முயற்சியே சிறந்ததாகும். "அதற்கு இயேசு: மறு ஜென்மகாலத்திலே மனுஷகுமாரன் தம்முடைய மகிமையுள்ள சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கும் போது, என்னைப் பின்பற்றின நீங்களும், இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரங்களையும் நியாயந்தீர்க்கிறவர்களாகப் பன்னிரண்டு சிங்காசனங்களின் மேல் வீற்றிருப்பீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். என் நாமத்தினிமித்தம் வீட்டையாவது, சகோதரரையாவது, சகோதரிகளையாவது, தகப்பனையாவது, தாயையாவது, மனைவியையாவது, பிள்ளைகளையாவது, நிலங்களையாவது விட்டவன் எவனோ, அவன் நூறத்தனையாய் அடைந்து, நித்திய ஜீவனையும் சுதந்தரித்துக்கொள்ளுவான்" மத் 19: 28, 29 என்ற வசனங்களில் இயேசு இவைகளின் பலனைக் குறித்து விவரிக்கிறார்.



# சகோதர அன்பு

"சகோதர சிநேகம் நிலைத்திருக்கக்கடவது" எபிரெயர் 13:1

Ed Byrd

பேதுரு தன்னுடைய வாழ்க்கையின் முடிவு கட்டத்தில் தம்முடைய இரண்டாவது நிருபத்தை எழுதினார். அதில் நமக்கும் சகல அப்போஸ்தலர்களுக்கும் அவரோடு கூட பெற்றிருந்த விலையேறப் பெற்ற விசுவாசத்தைக் குறித்து அவர் கூறுகிறார்(2 பேதுரு 1:1). கிறிஸ்துவின் மூலமாக தேவனுடைய தெய்வீக வல்லமை பெறலாம் என்று பேதுரு கூறுகிறார்.(2 பேதுரு 1:3)

கிறிஸ்துவின் சீஷர்களாக வளர்ச்சியடைவதற்குத் தேவையான சகல காரியங்களையும், தேவன் தம்முடைய தெய்வீக வல்லமையின் மூலம் கையளிக்கிறார். நம்முடைய பங்கிற்கு தேவனோடு கிரியை செய்வதற்கு சகல முயற்சிகளையும் மேற்க்கொள்ள வேண்டும், (2 பேதுரு 1:5) தேவன் நமக்குள் கிரியை செய்கிறார் என்றும், அந்த கிரியைகளில் நமக்கு ஒரு பங்கு இருக்கிறது என்று நாம் விசுவாசித்து, தேவனோடு இசைந்து அவருக்கு ஏற்ற பிள்ளைகளாக மாறுவதற்கு பேதுரு ஊக்குவிக்கிறார்.(2பேதுரு1:8,10) பேதுரு வரிசைப் படுத்தின கிறிஸ்துவின் குணநலன்களை நாம் ஒவ்வொருவரும் நமக்குள் வளர்ச்சியடைய செய்வதற்கான ஒரு முயற்சியை மேற்க்கொள்ள வேண்டும்.

அந்த குணநலன்களில் ஒன்று, சகோதர அன்பு (2பேதுரு 1:7). பிலதெல்பியா என்ற கிரேக்க வார்த்தையிலிருந்து சகோதர அன்பு என்ற வார்த்தை மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. இதற்கு சகோதரர்களிடத்தில் "அன்பு கூறுவது" என்று பொருளாகும். குடும்ப அங்கத்தினர்களாகிய சகோதர, சகோதரிகள் மற்றும் நெருங்கிய உறவினர்களுக்கு பிலதெல்பியா என்ற வார்த்தை கிரேக்க மொழியில் பயன்படுத்தப்பட்டுள்ளது. புதிய ஏற்பாட்டில் இந்த வார்த்தை கிறிஸ்துவுக்குள்ளான சகோதரர்களின் அன்பையும், நட்பையும் இந்த வார்த்தை விவரித்தது. தேவ ஜனங்கள் மத்தியில் வெளிப்படக்கூடிய தூய்மையான அன்பையே இந்த வார்த்தை தெளிவாகப் பொருள் படுத்துகிறது.

பிலதெல்பியா என்ற வார்த்தை வேதாகமத்தில் நான்கு பகுதிகளில் காணப்படுகிறது.

ரோமர் 12:10 - "சகோதர சிநேகத்திலே ஒருவர் மேலொருவர் பட்சமாயிருங்கள்; கனம் பண்ணுகிற திலே ஒருவருக்கொருவர் முந்திக்கொள்ளுங்கள்."

1தெசலோனிக்கேயர் 4:9 - "சகோதர சிநேகத்தைக்குறித்து நான் உங்களுக்கு எழுத வேண்டுவதில்லை; நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருக்கும்படிக்குத் தேவனால் போதிக்கப் பட்டவர்களாயிருக்கிறீர்களே."

எபிரெயர் 13:1 - "சகோதர சிநேகம் நிலைத்திருக் கக்கடவது."

1 பேதுரு 1:22 - "ஆகையால் நீங்கள் மாயமற்ற சகோதர சிநேகமுள்ளவர்களாகும்படி, ஆவியினாலே சத்தியத்திற்குக் கீழ்ப்படிந்து, உங்கள் ஆத்துமாக்களைச் சுத்தமாக்கிக் கொண்டவர் களாயிருக்கிற படியால், சுத்த இருதயத்தோடே ஒருவரிலொருவர் ஊக்கமாய் அன்பு கூருங்கள்;"

இப்படிப்பட்ட விசேஷமான நட்பை இயல்பாக சகோதரத்துவத்துக்குள் காணப்பட வேண்டும். ஆகையால் பேதுரு எழுதும் போது, சகல நற்குணங்களோடு சகோதர சிநேகத்தை கூட்டி வழங்க வேண்டும் என்று வலியுறுத்துகிறார். ஒருவேளை இந்த சகோதர சிநேகத்தை எல்லா நேரங்களிலும் சுலபமாக வெளிப்படுத்தலாம். ஆனால் சில நேரங்களில் அதை வெளிப்படுத்துவது சற்று கடினமாகத் தோன்றும்.

இயேசுவின் சீஷராக இருந்தபோது, பேதுரு பெற்ற சொந்த அனுபவங்களின் விளைவாக நமக்கு இக்காரியங்களை வலியுறுத்துகிறார். ஏனெனில் அவர் பன்னிரண்டு அப்போஸ்தலர்களில் ஒருவராகவும், ஆதி சகோதரத்துவத்துக்குத் தலையாகவும் இருந்தவர். (1 பேதுரு 2:17) கிறிஸ்தவத்தைப் பொருந்தவரைக் கும் யூதர்கள் மற்றும் புறஜாதி கிறிஸ்தவர்களைக் குறித்த கடினமான பிரச்சனைகளை தீர்வு காண ஆதி சபையில் ஏற்பட்ட வாதங்களில் பேதுருவும் கலந்து கொண்டார்.

ஆதிகால சபையில் இயேசுவை விசுவாசிக்கும் புறஜாதி சகோதரர்களுக்கு சில கற்பனைகளும், பிரமாணங்களும் விதிக்கப்பட வேண்டும் என்று யூத கிறிஸ்தவர்கள் எண்ணினார்கள். ஆதி எருசலேம் சபையில் இருந்த தலைவர்களான யூதர்கள்

இதைக் குறித்து பல கேள்விகளை எழுப்பினார்கள். அதில் 1. புறஜாதி கிறிஸ்தவர்கள் யூதர்களின் முறைமையின் படி உணவு உட்கொள்ள வேண்டுமா? 2. புறஜாதிகள் விருத்தசேதனம் செய்ய வேண்டுமா? இந்த சர்ச்சையின் அடிப்படையில் எழுப்பப்பட்ட கேள்விகள் மிகவும் வெளிப்படையான உணர்ச்சி ஊட்டக்கூடிய வேதனையை ஏற்படுத்தியது. (அப்போஸ்தலர் 12:7) "அப்பொழுது கர்த்தருடைய தூதன் அங்கே வந்து நின்றான்; அறையிலே வெளிச்சம் பிரகாசித்தது. அவன் பேதுருவை விலாவிலே தட்டி, சீக்கிரமாய் எழுந்திரு என்று அவனை எழுப்பினான். உடனே சங்கிலிகள் அவன் கைகளிலிருந்து விழுந்தது" என்று லூக்கா அந்த சூழ்நிலையை விவரிக்கின்றார்.

இந்த விவாதங்களில் பேதுரு மிகத் தெளிவாகக் காணப்பட்டார். (அப்போஸ்தலர் 15:6) பரிசுத்த ஆவியைப் பெற்றும், தனிப்பட்ட முறையில் இயேசுவை நன்கு அறிந்திருந்தும் இந்த தலைவர்கள் சுதந்தரிக்கப்பட்ட குறைபாடுள்ள மனிதர்களாகக் காணப்பட்டார்கள். ஆயினும் அவர்கள் மத்தியில் காணப்பட்ட சகோதர அன்பினால் அனைவரும் ஒருமித்த கருத்தை ஏற்றுக் கொண்டார்கள். சபையிலுள்ள புறஜாதி அங்கத்தினர்கள், அவர்கள் எடுத்த முடிவுகளை கட்டாயமாகக் கடைப்பிடிக்கும்படி கட்டளைப் பெற்றார்கள். அப்போஸ்தலர் 15:20 - "விக்கிரகங்களுக்குப் படைத்த அசுசியானவைகளுக்கும், வேசித்தனத்திற்கும், நெருங்குண்டு செத்ததிற்கும், இரத்தத்திற்கும், விலகியிருக்கும்படி அவர்களுக்கு நாம் எழுத வேண்டுமென்றும் நான் தீர்மானிக்கிறேன்."

பேதுரு தம்மோடு உடன் வாழ்ந்தவர்களையும் , பல நூற்றாண்டுகளுக்குப் பின் வாசிக்கக்கூடிய நமக்கும், இப்படிப்பட்ட சகோதர சிநேகத்தை நமக்குள் வளர்த்திக் கொண்டால், எப்படிப்பட்ட தடைகளையும் மேற்க்கொள்ளலாம் என்று அவர் நம்மை வலியுறுத்துகிறார். ஆயினும் இப்படிப்பட்ட சோதனைகளின் மத்தியில் சகோதர சிநேகம் வளர்ச்சியடைந்தது. சபையில் புறஜாதியாரின் எண்ணிக்கை அதிகரிக்கும்போது சபையும் உறுதிப்பட்டது.

### பேதுரு மற்றும் பவுல்

சகோதர சிநேகத்தினிமித்தம் பேதுரு பெற்றிருந்த பொறுப்புகள் நேரடியாக சோதிக்கப்பட்டது. அப்பொழுது பவுல், பேதுரு செய்த மாய்மாலத்தை நேரடியாக கண்டித்தார். அந்த சூழ்நிலையில் பேதுரு அந்தியோகியாவில் இருந்தார். அப்பொழுது அவர் யூதர்கள் மற்றும் புறஜாதி கிறிஸ்தவர்களோடு கலந்து உணவு புசித்துக் கொண்டிருந்தார். (கலா 2:12, 13) ஆயினும் சற்று நேரம் பின்னர் எருசலேமிலிருந்து யூதர்கள் வந்தபோது பேதுரு புறஜாதி கிறிஸ்தவர்களிடமிருந்து சற்று விலகி நின்றார். (கலா 2:11, 12) பேதுருவை ஒரு மூப்பனாக பார்த்துக் கொண்டிருந்தவர்கள் - பவுல் கூட இருந்த பர்னபா முதற்கொண்டு அவருடைய மாதிரியைப் பின்பற்ற துவங்கினார்கள்.

அப்பொழுது பவுல் நேரடியாக பேதுருவை கண்டித்தார். ஆனால், அதற்குப்பின் பவுல் பேதுருவை இதைக் குறித்து கண்டிக்கவில்லை. ஏனெனில் இவர்கள் இருவர் மத்தியில் சகோதர சிநேகம் அதிகமாய் காணப்பட்டதை நாம் அறிந்திருக்கிறோம். பேதுரு தம்முடைய இரண்டாம் நிருபத்தில் "நம்முடைய பிரியமான சகோதரனாகிய பவுல்" என்று பேதுரு பவுலைப் பற்றி கூறுகிறார். அவர்களுக்குள் அந்த விதமான கடுமையான உணர்வுகளும் பிரச்சனைகளும் இருந்திருந்தால், அவர்கள் அதை சரி செய்திருப்பார்கள். இந்த அனுபவத்தில் பேதுருவின் மனத்தாழ்மையையும் உடன் வேலையாளான பவுலினிடத்தில் அவர் வெளிப்படுத்தின சகோதர அன்பும் நம் அனைவருக்கும சிறந்த மாதிரியாக இருக்கிறது. 1 பேது 3:8 - "மேலும், நீங்களெல்லாரும் ஒரு மனப்பட்டவர்களும், இரக்கமுள்ளவர்களும், சகோதர சிநேகமுள்ளவர்களும், மன உருக்கமுள்ளவர்களும், இணக்கமுள்ளவர்களுமாயிருந்து,"

### சகோதர அன்பு பெருகக்கடவது

நம்முடைய இயல்பான குடும்பங்களில் நாம் ஒருவரையும் தனிப்பட்ட முறையில் வேதனைப் படுத்துவதில்லை. நமக்குப் பிடித்தாலும் சரி பிடிக்காவிட்டாலும் சரி,நாம் அவர்களோடு இணைந்து வாழ்ந்து கொண்டிருக்கிறோம். பல அழுத்தங்கள் மற்றும் பல வேறுபாடுகளின் மத்தியில் குடும்ப அங்கத்தினர்கள் ஒருவர் மேல் ஒருவர் அன்பு செலுத்துகிறார்கள். கிறிஸ்துவின் குடும்பமாகிய சபையிலும் நாம் எப்படிப்பட்ட அனுபவங்களைப் பெறுகிறோம். நாம் நம்முடைய சகோதரர்களைக் காயப்படுத்தாமல் அவர்கள் எப்படியிருந்தாலும் அவர்களை நேசிக்க வேண்டும். அன்பின் பாதை சில நேரங்களில் அநேக தடைகளினால் நிறைந்திருக்கும். ஆனால் தேவ ஜனங்களோடு நம் மத்தியில் காணப்படும் பொதுவான தேவனுடைய காரியங்களைப் பற்றிக் கொண்டு மாம்சீக கருத்து வேறுபாடுகளை நாம் ஒதுக்கி வைப்பதற்கு மிக கவனமாய் இருக்க வேண்டும்.

ஆதிகால சபையில் இப்படிப்பட்ட அன்பு சோதிக்கப்பட்டதுபோல, இக்காலத்திலும் சோதிக்கப்படுகிறது. உபதேசங்கள் மற்றும் தீர்க்கதரிசனங்களில் காணப்படும் வித்தியாசமான

கண்ணோக்கங்கள் கடுமையான சண்டைகளையும், கசப்பான அனுபவங்களையும் தந்து சில நேரங்களில் பிரிவினைகளையும் உண்டாக்குகிறது. இச்சூழ்நிலைகளில் சகோதர அன்பு குறைவாகக் காணப்படுகிறது. முழுமையான சீஷர்களாக இருப்பதற்குத் தகுதிப்படுத்தும் குணங்களை பவுல் வரிசைப் படுத்தினது போலவும், பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதினது படியும் சகோதரரிடத்தில் காணப்பட வேண்டும். 2தீமோத்தேயு 2:23 - "புத்தியீனமும் அயுக்தமுமான தர்க்கங்கள் சண்டைகளைப் பிறப்பிக்குமென்று அறிந்து, அவைகளுக்கு விலகியிரு." மேலும், 2 தீமோத்தேயு 2:24 - "கர்த்தருடைய ஊழியக்காரன் சண்டை பண்ணுகிறவனாயிராமல், எல்லாரிடத்திலும் சாந்தமுள்ளவனும், போதக சமர்த்தனும், தீமையைச் சகிக்கிறவனுமாயிருக்க வேண்டும்" என்று பவுல் தீமோத்தேயுவுக்குக் கூறுகிறார்.

கருத்து வேறுபாடுகளினால் ஏற்படும் வாக்குவாதங்களின் போது நாம் இப்படிப்பட்ட அறிவுரையைப் பின்பற்ற வேண்டும். நாம் ஒருவருக்கொருவர் வலுகட்டாயமாக அவரவருடைய கருத்துக்களை மற்றவர் மேல் கட்டாயப்படுத்தக் கூடாது. மாறாக ஒரு விதமான குடும்ப உறவுகளைப் போல மேலான அன்பை நாம் வளர்த்திக் கொண்டு ஒருவர் மேல் ஒருவர் பற்றுதலாய் இருக்க வேண்டும். சந்தேகத்திற்கு இடமின்றி அபூரணமான ஜனங்கள் மத்தியில் கருத்து வேறுபாடுகள் நிச்சயமாக ஏற்படும்.

இப்படிப்பட்ட சூழ்நிலைகளின் மத்தியில் நாம் பேசுவதற்கு அல்லது செயலாற்றுவதற்கு முன்பதாக தேவனிடத்தில் ஞானத்தைக் கேட்டு ஜெபித்து நாம் என்ன பேச வேண்டும், எப்படி செயல்பட வேண்டும் என்றும் முன்னதாகவே தீர்மானித்துக் கொள்ள வேண்டும். "சங்கத்தாரை நோக்கி: இஸ்ரவேலரே, இந்த மனுஷருக்கு நீங்கள் செய்யப் போகிறதைக்குறித்து எச்சரிக்கை யாயிருங்கள். ஏனென்றால் இந்நாட்களுக்கு முன்னே தெயுதாஸ் என்பவன் எழும்பி, தன்னை ஒரு பெரியவனாகப் பாராட்டினான்; ஏறக்குறைய நானூறுபேர் அவனைச் சேர்ந்தார்கள்; அவன் மடிந்து போனான்; அவனை நம்பின அனைவரும் சிதறி, அவமாய்ப்போனார்கள். அவர்களுக்குப்பின்பு, குடிமதிப்பின் நாட்களிலே, கலிலேயனாகிய யூதாஸ் என்பவன் எழும்பி, தன்னைப் பின்பற்றும்படி அநேக ஜனங்களை இழுத்தான்; அவனும் அழிந்து போனான்; அவனை நம்பியிருந்த அனைவரும் சிதறடிக்கப்பட்டார்கள். இப்பொழுது நான் உங்களுக்குச் சொல்லுகிறதென்னவென்றால், இந்த மனுஷருக்கு ஒன்றுஞ்செய்யாமல் இவர்களை விட்டு விடுங்கள். இந்த யோசனையும் இந்தக் கிரியையும் மனுஷரால் உண்டாயிருந்ததானால் ஒழிந்துபோம். தேவனால் உண்டாயிருந்ததேயானால், அதை ஒழித்துவிட உங்களால் கூடாது; தேவனோடே போர் செய்கிறவர்களாய்க் காணப்படாதபடிக்குப் பாருங்கள் என்றான்" (அப் 5:35-39) என்று அப்போஸ்தலர்கள் சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதைக் குறித்து கமாலியேல் ஆலோசனை சங்கத்தாருக்கு ஆலோசனை சொன்னது போல நாமும் நடந்து கொள்ள வேண்டும்.

"இந்த காரியம் முக்கியமானதா?" ஒரு கிறிஸ்தவர் இதை விசுவாசிப்பதற்கும் அல்லது அதை செய்வதற்கும் ஏதாகிலும் வசன ஆதாரங்கள் உண்டா? என்ற கேள்வியை நமக்குள் கேட்டுக் கொள்ள வேண்டும்.

பேதுரு மற்றும் பவுலின் நாட்களிலிருந்த சபை, பல வேலைகளைச் செய்தது. சூழ்நிலைகளுக்குத் தகுந்தபடி பிரச்சனையும் வேறுபட்டது. பவுல் கலாத்தியருக்கு எழுதும் போது, கலா 3:28 - "யூதனென்றும் கிரேக்கனென்றுமில்லை. அடிமையென்றும் சுயாதீனனென்றுமில்லை, ஆணென்றும் பெண்ணென்றுமில்லை; நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவுக்குள் ஒன்றாயிருக்கிறீர்கள்" என்று எழுதினார். ஏனெனில், கிறிஸ்துவின் சரீரத்திற்குள் பிரிவினை ஏற்படுத்தும் காரியங்கள் கலாத்தியர் சபையில் அதிகமாய் இருந்ததை பவுல் அறிந்திருந்தார்.

உபதேசங்கள், சமுதாய அந்தஸ்து, நாகரீகம், கல்வியறிவு போன்ற எந்த காரியத்திலும் காணப்படும் வித்தியாசத்தினால் பிரிவுகள் ஏற்படும் பட்சத்தில், கிறிஸ்துவின் சரீர அங்கங்களாய் இருக்கும் நாம் ஒருவர் மேல் ஒருவர் ஊக்கமாய் அன்பு செலுத்த வேண்டும். ஒருவரில் ஒருவர் ஊக்கமாய் அன்பு செலுத்த வேண்டும் என்று முதலாம் சபைக்கு பவுலும், பேதுருவும் எச்சரித்து அறிவுரைக் கூறினது போல, நம்மையும் அவர்கள் எச்சரித்திருக்கிறார்கள்.

நாம் வெற்றி பெறுவதற்கு வேண்டிய சகல காரியங்களையும் தேவன் கொடுத்திருக்கிறார். நம்முடைய பங்குக்கு நாம் முழு முயற்சிகளை மேற்கொண்டு நம்முடைய அழைப்பையும், தெரிந்து கொள்ளுதலையும் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். 2 பேது 1:10 - "ஆகையால், சகோதரரே, உங்கள் அழைப்பையும், தெரிந்துகொள்ளுதலையும் உறுதியாக்கும்படி ஜாக்கிரதையாயிருங்கள்; இவைகளைச் செய்தால் நீங்கள் ஒருக்காலும் இடறி விழுவதில்லை."



# அகாபே

"இப்படியிருக்க, நீங்கள் அதிக ஜாக்கிரதையுள்ளவர்களாய் உங்கள் விசுவாசத்தோடே தைரியத்தையும், தைரியத்தோடே ஞானத்தையும், ஞானத்தோடே இச்சையடக்கத்தையும், இச்சையடக்கத்தோடே பொறுமையையும், பொறுமையோடே தேவபக்தியையும், தேவபக்தியோடே சகோதரசிநேகத்தையும், சகோதரசிநேகத்தோடே அன்பையும் கூட்டி வழங்குங்கள். இவைகள் உங்களுக்கு உண்டாயிருந்து பெருகினால், உங்களை நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை அறிகிற அறிவிலே வீணரும் கனியற்றவர்களுமாயிருக்க வொட்டாது" 2 பேதுரு 1:5-8.

**Mark Grillo**

சிந்தையில்லாமல் மொழிகள் தோன்றுமா? மொழிகள் வெளிப்படுத்த முடியாத சத்தியங்கள் உண்டா? Wittgel Steil என்ற தத்துவஞானி, மொழியின் எல்லைகள் உலகத்தின் எல்லைகள் வரைக்கும் இருக்கும் என்று அவர் விவாதித்தார். மொழிகளின் வரம்புக்கு மிஞ்சி பேசுவதோ, யோசிப்பதோ இயலாத காரியம் என்று கூறுகிறார். இப்படிப்பட்ட அனுபவங்களை அமைதியாக கடக்க வேண்டும் என்று கூறுகிறார். இப்படிப்பட்ட வருணிக்க முடியாத அனுபவங்களில் அகாபே அன்பும் ஒன்றாக இருக்க வேண்டும்.

எபிரெய மற்றும் கிரேக்க மொழிகளில் பல வார்த்தைகள் அன்பு என்று மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது. அதில் அகாபே என்ற ஒரு கிரேக்க வார்த்தை அன்பு என்று மொழி பெயர்க்கப் பட்டிருக்கிறது. அகாபே என்ற வார்த்தை கீழ்க்காணும் வசனங்களில் பயன்படுத்தப் பட்டிருப்பதைக் காணலாம். யோவான் 3:16 - "தேவன், தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும் படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்." லூக்கா 10:27 - "அவன் பிரதியுத்தரமாக: உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் உன் முழு பலத்தோடும் உன் முழுசிந்தையோடும் அன்புகூர்ந்து, உன்னிடத்தில் அன்புகூருவதுபோலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக என்று எழுதியிருக்கிறது என்றான்."

ஆங்கில மொழியைப் பொறுத்த வரைக்கும் ஒரு வார்த்தை பல சூழ்நிலைகளில் அநேகக் காரியங்களைப் பொருள்படுத்தும். எடுத்துக் காட்டாக, தரைப்பந்து விளையாட்டை நான் நேசிக்கிறேன் அல்லது என் மனைவியை நேசிக்கிறேன் அல்லது என் சகோதரர்களை நேசிக்கிறேன். இந்த எடுத்துக்காட்டில் செலுத்தப்படும் அன்பு வெவ்வேறு நிலைகளில் இருந்தாலும் ஒரே வார்த்தை பயன்படுத்தப்படுகிறது. எடுத்துக்காட்டாக - ஒருவர் - "என் மனைவியை நான் நேசிக்கிறேன்" என்று சொல்லலாம். அதே நேரத்தில், "நான் கால்பந்து விளையாட்டை நேசிக்கிறேன் " என்றும் அவர் சொல்லலாம். தேவன் விரும்பும் உண்மையும் பரிசுத்தமுமான அன்பு என்னும் உணர்வை நம்முடைய மிகுந்த உணர்ச்சியினாலும் கூட அந்த வார்த்தையின் சரியான பயன்பாட்டை வெளிப்படுத்த முடியாத அளவுக்கு, அந்த வார்த்தை தவறான கண்ணோக்கத்தில் நம் மனதில் பதிந்துள்ளது. யோவான் 3:16 - "தேவன், தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்பு (அகாபே) கூர்ந்தார்" என்ற வரியின் விளக்கத்தின் ஆழத்தையும், அகலத்தையும் புரிந்து கொள்ள முடியாத அளவுக்கு அன்பு மிகவும் கொடுக்கப்பட்டுள்ளது.

நம்முடைய இயல்பான சம்பாஷனையில் அன்பு என்ற வார்த்தையை நாம் பயன்படுத்தும் பொழுது, நாம் எந்த காரியத்தை அறிவிக்கிறோம்? மற்றும் கேட்போர் என்ன காரியத்தைக் கேட்டுக் கொள்கிறார்கள்? இயல்பாக கேட்கக்கூடிய ஒருவர் அன்பு என்ற வார்த்தையை தங்களுடைய முன்மாதிரியின் அடிப்படையில் வெவ்வேறு உருவங்களை அமைத்துக் கொள்கிறார்கள். அன்பு என்னும் உண்மையான உருவம், சுயம் என்ற பாவம் நிறைந்த உலகில் உரு சிதைந்து விட்டது.

*ஏசாயா 55:9 - "பூமியைப்பார்க்கிலும் வானங்கள் எப்படி உயர்ந்திருக்கிறதோ, அப்படியே உங்கள் வழிகளைப் பார்க்கிலும் என் வழிகளும், உங்கள் நினைவுகளைப் பார்க்கிலும் என் நினைவுகளும் உயர்ந்திருக்கிறது."

தேவனைப் போலவும், கிறிஸ்துவைப் போலவும் அன்புள்ளவர்களாய் ஜீவிக்க அல்லது அகாபே வாழ்க்கைக்குள் ஜீவிக்க நாம் எவ்வாறு கற்றுக் கொள்வது? அப்போஸ்தலர் பவுல் கொரிந்தியருக்கு எழுதின முதலாம் நிருபத்தில் நாம் வளர வேண்டிய அகாபேயின் பொருளைக் குறித்த ஆழத்தைப் புரிந்து கொள்வதற்கு நமக்கு சில காரியங்களை விவரிக்கிறார். நாம் கொஞ்சம் கொஞ்சமாக வளர்ச்சியடைந்து முதிர்ச்சி நிலையை அடைய வேண்டும் என்கிறார். 1 கொரிந்தியர் 13:11 அவர் தேர்ச்சியடைந்தார். நாம் குழந்தைகளாய் இருக்கும்போது சுயநலம் தேடுகிறவர்களாகவும் மற்றவர்களுடைய தேவைகள் குறித்து கவலையற்றவர்களாகவும் இருந்தோம்.

நாம் வளர்ச்சியடையும் போது, வாழ்க்கையில் நாம் பெறக்கூடிய அனுபவங்களினால், நாம் அதிக பொறுப்புள்ளவர்களாக மாறி விடுகிறோம். நம்மை குறித்து அதிகமாக சிந்திக்காமல், பிறரைக் குறித்து அதிகமாக யோசிக்கிறோம். நம்மையும் தாண்டி சில காரியங்களை யோசிக்க துவங்குகிறோம். நம்முடைய தேவைகளுக்கு முன் மற்றவர்களுடைய தேவைகளை வைக்கிறோம். நம்முடைய தேவைகளை பூர்த்தி செய்வதற்கு முன்னதாக மற்றவர்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்ய முயற்சிக்கிறோம். இதுவே அகாபே. இது கைமாறு செலுத்தக்கூடிய அன்பல்ல. மாறாக, இது ஒரு பலியினால் செலுத்தக்கூடிய அன்பாகும்.

நீங்கள் ஒரு காரியத்தை செய்ய யோசித்து அதை மிக அருமையாக செய்வதற்கு கடுமையாக உழைக்கலாம். அதே நேரத்தில், உங்கள் வாழ்க்கையில் மற்றொரு நபர் உங்களுடைய உதவியை அதிகமாக நாடும் பொழுது உங்களுடைய வேலைகளை செய்வதைக் காட்டிலும், தேவைப்படுபவர்களுக்கு உங்களால் முடிந்த உதவியை செய்வதே அகாபே ஆகும். இப்படியாகவே, இயேசு இவ்வுலகத்தில் வாழ்ந்தார். மொத்தத்தில் உங்களுடைய பொருள், பலம், இன்னும் சகல காரியங்களையும்... மற்றவர்களுக்காக செலவழிப்பதே அகாபே ஆகும். 1 யோவான் 3:14 - "நாம் சகோதரரிடத்தில் அன்பு கூருகிறபடியால், மரணத்தைவிட்டு நீங்கி ஜீவனுக்குட்பட்டிருக் கிறோமென்று அறிந்திருக்கிறோம்; சகோதரனிடத்தில் அன்புகூராதவன் மரணத்திலே நிலை கொண்டிருக் கிறான்."

அன்புக்கு வல்லமை உண்டு. இவைகள் காரியங்களை நடப்பிக்கிறது. அன்பு ஒருவருடைய இருதயத்தின் எண்ணங்களை ஊக்குவித்து நல்ல முடிவுகளை எடுக்கச் செய்கிறது. "தேவன் நம்மேல் வைத்திருக்கிற அன்பை நாம் அறிந்து விசுவாசித்திருக்கிறோம். தேவன் அன்பாகவே இருக்கிறார்; அன்பில்

நிலைத்திருக்கிறவன் தேவனில் நிலைத்திருக்கிறான், தேவனும் அவனில் நிலைத்திருக்கிறார்" 1யோவான் 4:16 ஆகவே தேவனுக்குள்ளிருக்கும் மிக சிறப்பான வல்லமையை நாம் அன்பு என்று அழைத்தால் அதில் ஒரு சிறிய பகுதியை எடுத்து நம்மை சிருஷ்டித்தாரா? நமக்குள் இருக்கும் அன்பில் வளர்ச்சியடைந்தால் நாம் தேவனைப் போல் மாறிவிடலாமா?

இவைகள் அனைத்தையும் பாஸ்டர் ரஸலின் விமர்சனத்தின் அடிப்படையில் நாம் காணலாம். சுயநலம் மற்றும் அகாபே மத்தியில் காணப்படும் போராட்டமே நமக்கு முன் இருக்கும் பிரச்சனையாகும். ஏனெனில் தேவ குமாரனுடைய சாயலைப் பெறுவதற்கு தகுதியற்ற அபூர்ணமான சரீரத்தை நாம் பெற்று இருக்கிறோம். ஏனெனில், "நாம் மற்றவர்களைப் போல கோபாக்கினையின் பிள்ளைகளாய் இருந்தோம்" (எபேசியர் 2:3) என்று பவுல் கூறுகிறார்.

பாவம் செய்வதற்கு முன் தந்தையாகிய ஆதாம் பெற்றிருந்த உண்மையான தேவ சாயலை கடந்த 6000 வருடங்களாக மிகப் பரிதாபமாக தொலைந்து விட்டது. ஆகவே தெய்வீக சுபாவத்தில் அகாபே அன்பில் வளர்ச்சியடைவதற்கு பதிலாக நாமனைவரும் பாவத்தில் கர்ப்பந்தரித்து, துர்க்குணத்தில் உருவாக்கப்பட்டிருக்கிறோம். நம்முடைய குணங்களை இயல்பாக அகாபேவின் கோட்பாடுகள் ஆட்கொண்டு இருப்பதற்கு பதிலாக பல சூழ்நிலைகளில் அவைகள் முற்றிலுமாக நீக்கப்பட்டு முழுமையான சுயநலமும், தீமையுமே நிறைந்து காணப்படுகிறது.

"தேவனை ஒருவரும் ஒருபோதும் கண்டதில்லை; நாம் ஒருவரிடத்தில் ஒருவர் அன்புகூர்ந்தால் தேவன் நமக்குள் நிலைத்திருக்கிறார்; அவருடைய அன்பும் நமக்குள் பூரணப்படும்" 1யோவ 4:12.

ஒளிக்கதிர் ஓர் ஊடகத்தின் வழியாக பாய்ச்சப்படும் பொழுது வானவில் நிறங்களில் அது பிரிந்து வெவ்வேறு வண்ணங்களில் காணப்படுவது போல, ஒவ்வொருவருடைய உண்மையான கிறிஸ்தவ வாழ்க்கையிலும் அன்பே வெளிப்பட வேண்டும். அன்பின் பல குணங்களின் வெளிப்பாட்டைக் குறித்து அப்போஸ்தனலாகிய பவுல் வர்ணித்திருக்கிறார்.

*"அன்பு நீடிய சாந்தமும் தயவுமுள்ளது; அன்புக்குப் பொறாமையில்லை; அன்பு தன்னைப் புகழாது, இறுமாப்பாயிராது, அயோக்கிய மானதைச் செய்யாது, தற்பொழிவை நாடாது, சினமடையாது, தீங்கு நினையாது, அநியாயத்தில் சந்தோஷப்படாமல், சத்தியத்தில் சந்தோஷப்படும்" 1கொரி 13:4-6.

*"சகலத்தையும் தாங்கும், சகலத்தையும் விசுவாசிக்கும், சகலத்தையும் நம்பும், சகலத்தையும் சகிக்கும்.

அன்பு ஒருக்காலும் ஒழியாது. தீர்க்கதரிசனங்களானாலும் ஒழிந்துபோம், அந்நிய பாஷைகளானாலும் ஓய்ந்துபோம், அறிவானாலும் ஒழிந்துபோம்" 1கொரி 13:7,8.)

*"இப்பொழுது விசுவாசம், நம்பிக்கை, அன்பு இம்மூன்றும் நிலைத்திருக்கிறது; இவைகளில் அன்பே பெரியது" 1கொரி 13:13.

**நம் சவால்**

நமக்குள் வளர்ந்துக் கொண்டிருக்கும் புது சிருஷ்டியின் இயல்புக்கு நேர் எதிரிடையான ஒரு சூழ்நிலையின் மத்தியில் இந்த உலகத்தில் நாம் எதிர் நீச்சலிட்டுக் கொண்டிருக்கிறோம். இப்படியாக தொடர்ந்து வாழ்ந்து நம்முடைய சிந்தைகள் மறுரூபமாக்கப்பட வேண்டும். (ரோ 12:1,2) ஆகவே, நமக்குள் அகாபே பூரணமான வளர்ச்சி அடைவதற்கு நம்மை சுற்றி பற்றியெரிகிற அக்கினியைக் கண்டு ஆச்சரியப்படவேண்டாம். (1பேது 4:12)

*"இப்பொழுது கண்ணாடியிலே நிழலாட்டமாய்ப் பார்க்கிறோம், அப்பொழுது முகமுகமாய்ப் பார்ப்போம். இப்பொழுது நான் குறைந்த அறிவுள்ளவன், அப்பொழுது நான் அறியப்பட்டிருக்கிறபடியே அறிந்து கொள்ளுவேன்" 1 கொரி 13:12.

இக்காலத்தில் முகம் பார்க்கும் கண்ணாடியில் நாம் பார்ப்பது போல நமக்குள் வளர்ச்சியடைந்திருக்கும் அகாபே அன்பின் பிரதிபலிப்பை நாம் பார்க்கும் பொழுது அது மிக அற்பமாக காணப்படுகிறது. அதிலும் நாம் மிக சரியானவர்கள் என்று நம்முடைய மனதில் எண்ணிக் கொண்டிருக்கிறோம். எச்சரிக்கையாய் இருங்கள் நம்முடைய ஆண்டவரை முகமுகமாய் சந்திக்கக் கூடிய நாள் நெருங்கி நிற்கிறது. அப்பொழுது நாம் அவருடைய சாயலைப் பெற்றிருந்தால் மட்டுமே காண முடியும்.

கிறிஸ்தவர்களின் ஊழியத்திற்கு அடையாளமாக இயேசு சீஷர்களின் கால்களை கழுவினார். (யோவ 13:5-14) அவர் முடித்தவுடன், "நான் உங்களுக்குச் செய்தது போல நீங்களும் செய்யும்படி உங்களுக்கு மாதிரியைக் காண்பித்தேன் "யோவ 13:15 என்று சீஷர்களிடம் கூறினார். ஆகவே நம்முடைய ஆண்டவர் இந்த உலகத்திற்கு இந்த மாதிரியைக் கொடுக்க வில்லை. ஏனெனில் "எனக்கு என்னுடைய, மற்றும் நான்" என்புதைக் குறித்தே இந்த உலகம் பேசுகிறது. ஆனால் அகாபே அன்பில் வாழக்கூடிய வாழ்க்கையானது மற்றவர்களுக்காக வாழ்ந்து தனக் குள்ளவைகளை செலவழித்து மறுரூபமாக்கப்பட்ட ஜீவனைப் பெறுகிறது. உங்களுடைய நேரத்தையும், ஆரோக்கியத்தையும் மற்றவர்களுக்காக செல வழிப்பது இந்த உலகம் வரவேற்பது இல்லை. அன்பு (அகாபே)ஒரு சுபிட்சமான உணர்வுகளையோ, வசீகரமான அழகோ ஐசுவரியவான்களுடைய பரிசோ அல்ல, மேலும் நாம் பெறுவதை அன்பு என்று கூறாமல், நாம் பிறரிடத்தில் கொடுப்பதையே அகாபே என்கிறோம்.

ஆனால் இல்லாத போது குளிர் இருப்பது போல, வெளிச்சம் இல்லாத போது இருள் இருப்பது போல அன்பு இல்லாத போது முழுமையான சுயநலம் காணப்படும். "இயேசு அதைக் கேட்டு: இன்னும் உன்னிடத்தில் ஒரு குறைவு உண்டு; உனக்கு உண்டானவைகளையெல்லாம் விற்றுத் தரித்திரருக்குக் கொடு, அப்பொழுது பரலோகத்திலே உனக்குப் பொக்கிஷம் உண்டாயிருக்கும்; பின்பு என்னைப் பின்பற்றிவா என்றார்." (லூக் 18:22)

இராஜரீகமானவர்களுக்கே அவசியமான அகாபேயின் குணநலன்களை முதன்மையாக பேதுரு தம்முடைய இரண்டாம் நிருபத்தில் முதலாம் அதிகாரத்தில் வரிசைப் படுத்துகிறார் - விசுவாசத்தோடு தைரியம், ஞானம், இச்சையடக்கம், பொறுமை, தேவபக்தி, மற்றும் அகாபே. (2 பேது 1:5-8) வசனங்களில் அகாபேவுக்கு கொடுக்கப்படும் இடத்தைப் பார்க்கும் பொழுது - ஆவிக்குரிய இலக்கை அடைவதன் உச்சகட்ட நிலையை கொடுத்திருக்கிறார். பேதுருவைப் போல பவுலும் கொரிந்தியருக்கு எழுதும் நிருபத்தில் அகாபேவின் கோட்பாட்டை கிறிஸ்தவ குணலட்சணங்களின் தலைமையானது என்று குறிப்பிடுகிறார். எப்படிப்பட்ட பலிகளும் சுயத்தை வெறுத்தலும் அகாபேயின்றி தேவனுடைய பார்வையில் பயனற்றதாக இருக்கும் என்று கூறுகிறார். ஆனால் நமக்குள் இந்த அகாபே இருக்கும் பட்சத்தில்,நம்முடைய சிறிய முயற்சிகளும் கிறிஸ்துவுக்குள் அங்கீகரிக்கப்படும். (R2807)

நம்முடைய அறிவு புகழ்ச்சி, அல்லது திறமையின் அடிப்படையில் அல்ல, மாறாக நாம் தேவன் மேலும் சகோதரர்கள் மேலும், பொதுவாக இந்த உலகத்தின் மேலும் விசேஷமாக நம்முடைய எதிராளிகள் மேலும் நாம் வெளிப்படுத்தக் கூடிய அகாபேவின் அடிப்படையில் அவர் நம்மை அளவிடுகிறார். ஆகவே நம்முடைய வாழ்க்கையில் அகாபேயை முன்வைத்து அதற்கான பிரதான பரீட்சைகளைக் கடந்து தேவனிடத்தில் நெருங்கி அவருடைய அங்கீகரிப்பைப் பெற முயற்சிக்க வேண்டும். (R 3150)

நம்முடைய வளர்ச்சிக்காக தேவன் கொடுத்த வரிசையில் இந்த அகாபே முதன்மையாக இடம் பெறுவதை மீண்டும் மீண்டுமாக வசனங்கள் நிரூபிக்கிறது. ஆகவே சில வருடங்கள் ஆனாலும் சரி, பல வருடங்கள் ஆனாலும் சரி, நம்முடைய குணநலன்களை மெருகேற்றி நம்முடைய மறுரூபமாக்குதலை பூரணப்படுத்த வேண்டும். நம்முடைய சித்தங்களை பிதாவின் சித்தத்தோடு ஒருங்கிணைத்து அகாபேவின் சாயலைப் பெற வேண்டும்.

தீர்க்கதரிசனத்தில் இன்று

# அழியாமைக்கான தேடல்

"இதைக்குறித்து நீங்கள் ஆச்சரியப்படவேண்டாம்; ஏனென்றால் பிரேதக்குழிகளிலுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்குங்காலம் வரும்;அப்பொழுது, நன்மைசெய்தவர்கள் ஜீவனை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும், தீமைசெய்தவர்கள் ஆக்கினையை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும் புறப்படுவார்கள்." (யோவான் 5 :28-29)

2010ம் ஆண்டு விஞ்ஞானிகள் முதல் முறையாக தங்கள் ஆய்வுகூடங்களில் ஒன்றுகூடி தங்களுடைய இரசாயணங்களின் மூலம் ஒரு உயிருள்ள ஜீவனை உருவாக்க எண்ணினர். மேலும் பல விஞ்ஞானிகள், ஜோதிடர்கள், தத்துவ ஞானிகள், நித்திய வாழ்வு என்பதும் விரைவில் அடையக்கூடிய ஒன்று என்ற கருதுகிறார்கள். மேலும் சிலர் அதற்கு சில தடைகள், இருப்பதால் இன்னும் சிறிது காலம் ஆகும் என்றும் கருதுகிறார்கள். மனிதனின் வயதுதை தலைகீழாக திரும்ப மாற்றும் ஆராய்ச்சியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் ஆராய்ச்சியாளர் ஆபெரி டி கிரே 2040 ம் ஆண்டிற்குள் நித்திய வாழ்வை அடைய முடியும் என்று நம்புகிறார்.

இங்கிலாந்தில் உள்ள நாட்டிங்கஹம் பல்கலைக்கழகத்தில் இருக்கும் ஆராய்ச்சியாளர்கள் 2012 பிப்ரவரியில் வெளிவந்த National academy of science என்ற பத்திரிகையில் ஒரு வகையான புழு, ஏறக்குறைய நித்திய வாழ்வை அடைந்துவிட்டதாக கூறுகிறார். அவர்கள் ஆராய்ச்சியின் மூலம் வயது முதிர்வயதையும், வயது முதிர்வதெற்கான சில குணநலன்களையும் மனித அனுக்களில் மாற்றி அமைக்க முடியும் என்று நம்புகிறார்கள். டிமிட்டிரி இஸ்கோவ் என்கிற 31வயதான ஒருவர் பல ரஷ்ய விஞ்ஞானிகளை சேர்த்துக் கொண்ட மனிதனின் எல்லா உணர்ச்சிகளையும் உணரும் செயற்கை மூலையை உள்ளடங்கிய செயற்கையான மனித உருவத்தை தயாரிப்பதில் ஈடுபட்டுள்ளார். அவருடைய இந்த வேலை திட்டத்திற்கான பண உதவி உலகில் உள்ள எல்லா தன்னார்வமிக்க பணக்கார மக்களிடமிருந்து வருகிறது. நீண்ட கால வாழ்வை பற்றின ஆராய்ச்சியில் வல்லுனரான டாக்டர் லியோநிட் காவிரிலோவ் நித்திய வாழ்வை பற்றின திட்டத்தில் மேற்பார்வையாளர். அவரும் அவருடன் சேர்ந்த விஞ்ஞானிகளும் செயற்கை முயற்சியின் மூலம் நீண்ட வாழ்வை பெறுவதனால் கிடைக்கக் கூடிய விஞ்ஞான பூர்வமான நன்மைகள் என்ன என்ற ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ளனர்.

**நித்திய வாழ்வின் திட்டம்**

கடந்த பத்து வருடங்களாக பல மில்லியன் ஜனங்கள் மரணத்தின் நிலைக்கு நெருங்கி விட்ட அனுபவத்தையும் மீண்டும் மறுவாழ்வு பெற்றதை பற்றியும் கூறிக்கொண்டிருக்கிறார்கள். இந்த அனுபவம் பல தொலைக்காட்சி விவாதங்களுக்கும், தேசிய பத்திரிக்கைகளுக்கும் ஒரு பரவலான பேச்சாக அமைந்துள்ளது.

அண்மையில் நித்தயவாழ்வின் திட்டம் என்ற புத்தகத்தை மொழிப்பெயர்த்த கலிபோனியா பல்கலைக்கழகத்தின் தத்துவ பேராசிரியரான மார்டீன் பிஷ்ஷர் என்பவருக்கு John Templeton என்ற அமைப்பு 5 மில்லியன் டாலர் பரிசாக கொடுத்தது. பிஷ்ஷர் மற்றும் அவருடன் சேர்ந்த விஞ்ஞானிகள், தத்துவ ஞானிகள் மற்றும் சமய சித்தாந்தவாதிகள் மரணத்தை நெருங்கி விட்டு மீண்டும் மறுவாழ்வு பெற்று வாழ்ந்து கொண்டிருக்கும் மக்களின் குணநலன்களை ஆராய்வில் ஈடுபட்டுள்ளனர். அவர்களின் ஆராய்ச்சிகள் எல்லாம் "நித்தயவாழ்வு மற்றும் மரணத்தின் பொருள் " என்ற தலைப்பில் வெளிவரும் புத்தகத்தில் இடம் பெற்றிருக்கும். மரணத்தை நெருங்கி விட்டு மீண்டும் மறுவாழ்வு பெற்ற மக்களின் அனுபவங்கள் ஏன் வித்தியாசப்படுகிறது என்று ஆராய்வார்கள் என்று எதிர்ப்பார்க்க படுகிறது.

**மரணத்திற்குபின் வாழ்வு**

நித்திய வாழ்வை பற்றி என்னதான கடினமான மற்றும் நீண்ட கால முயற்சிகள் மேற்க்கொண்டாலும் அல்லது மரணத்திற்குப் பின் மறுவாழ்வின் ஆராய்ச்சியின் ஈடுப்பட்டிருந்தாலும் வேதத்தில் உள்ள மிக சாதாரண உண்மைக்கு இணையாகாது. "மனுஷன் செத்தபின் பிழைப்பானோ? எனக்கு மாறுதல் எப்போது வருமென்று எனக்குக் குறிக்கப்பட்ட போராட்டத்தின் நாளெல்லாம் நான் காத்திருக்கிறேன்." (யோபு 14:14) தன் கேள்விக்கே பதில் கூறும் வகையில் யோபு வேதத்தில் உள்ள ஒரு அடிப்படையான உண்மையைக் கூறுகிறார். "மனுஷன் செத்தபின் பிழைப்பானோ? எனக்கு மாறுதல் எப்போது வருமென்று எனக்குக் குறிக்கப்பட்ட போராட்டத்தின் நாளெல்லாம் நான் காத்திருக்கிறேன்.என்னைக் கூப்பிடும், அப்பொழுது நான் உமக்கு உத்தரவு சொல்லுவேன்; உமது கைகளின் கிரியையின்மேல் விருப்பம் வைப்பீராக." (யோபு 14:14,15) புது வாழ்விற்கு மரணம் ஒரு நுழைவாயில் இல்லை ஆனால் ஒரு பெரிய சாபம் இந்த பூமியில் நித்திய வாழ்வு அடையவேண்டும் என்றால் அது தேவனுடைய சத்திய வார்த்தைகளால் மட்டுமே முடியும்.

எல்லா மனிதரும் மரணத்திலிருந்து தீர்ப்புக்காகவும், ஆசீர்வாதத்திற்காகவும் உயிரோடு எழுப்பப்படுவர் என்று கர்த்தர் கூறிய இந்த வார்த்தைகளே இநத் கட்டுரையின் முக்கிய கருத்தாக உள்ளது. அப்போஸ்தலர் பவுல் உயிர்த்தெழுதல் இல்லாமல் "கிறிஸ்துவுக்குள் நித்திரையடைந்தவர்களும் கெட்டிருப்பார்களே." (1கொரி 15:18) என்ற கூறுகிறார். உயிர்த்தெழுந்த பின் கிடைக்கப் போகும் நிரந்திர வாழ்வு மட்டும் இன்று மனிதன் கேட்டுக் கொண்டிருக்கும் பல கேள்விகளுக்கு பதிலாக உள்ளது. உயிர்தெழுதல் இல்லை என்றால், மறிப்பவர்கள் எல்லோருக்கும் வாழ்வு என்பது இல்லாத ஒன்றாகி விடும்.

ஆயினும், தேவன் மரணத்திற்குபின் வாழ்வு உண்டு என்ற வாக்களித்துள்ளார். இந்த உயிர்த்தெழுதலை மனதில் கொண்டே இயேசு கிறிஸ்து மரித்த அனைவரும் "நித்திரையில்" இருக்கிறார்கள் என்று,தன்னுடைய ஊழித்தில் நடத்தின ஒரு முக்கியமான அற்புதத்தின் போது கூறினார். மார்த்தாள் மற்றும் மரியாளிடமிருந்து தனது உயிர் நண்பனான லாசரு மரித்து விட்டார் என்ற செய்தி கேட்டவுடன் கர்த்தர் தனது சீஷர்களிடம் "நம்முடைய சிநேகிதனாகிய லாசரு நித்திரையடைந்திருக்கிறான்," என்ற கூறுனார். இந்த அறிவிப்பில் நிகழும் குழப்பத்தை நீக்குவதற்காக கர்த்தர் மேலும் "லாசரு மரித்துப்போனான் என்று வெளிப்படையாய்ச்" (யோவ 11:11-14) சொன்னார். உணர்வுகள் அற்ற நிலை என்பதை உணர்ந்த கர்த்தர் மரணத்தை நித்திரைக்கு சமமாக கூறுகிறார்.

**நல்லுணர்வோடு, சுயாதீனம்**

தேவன் மனுஷனை முழு சுயாதீனத்தோடு சிருஷ்டித்தாலும், கீழ்படியாமையின் விளைவுகளைக் குறித்து நன்கு எச்சரித்தார் "தேவனாகிய கர்த்தர் மனுஷனை நோக்கி: நீ தோட்டத்திலுள்ள சகல விருட்சத்தின் கனியையும் புசிக்கவே புசிக்கலாம்.ஆனாலும் நன்மைதீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்கவேண்டாம். அதை நீ புசிக்கும் நாளில் சாகவே சாவாய் என்று கட்டளையிட்டார்." (ஆதி 2:16,17) ஆதாமின் கீழ்படியாமைக்கு மரணமே தண்டனையாக இருந்தது. ஆதாமுக்கு மட்டும் அல்ல அவனுடைய சந்ததிக்கும் இந்த மரணம் வழங்கப்பட்டது. மனித வாழ்க்கையை நீடிப்பதற்கு எவ்வளவு முயற்சிகள் எடுத்தாலும், ஒருவரும் மரணத்திலிருந்து தப்பிக்க முடியாது. "ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறதுபோல, கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள்." (1கொரி 15:22)

தேவன் மரணத்தை மட்டும் அனுமதிக்காமல், மரண செயல் முறையை ஒரு காரணத்திற்காக அனுமதித்தார். பாவத்தின் கொடுமையான பின் விளைவுகளையும் பரலோக பிதாவின்றி வாழக்கூடிய வாழ்க்கையின் நிலைமையையும் எளிதில் கற்றுக் கொள்கிறார்கள். இந்த அனுபவம் நித்தியமானது அல்ல. ஆதாம் மற்றும் அவருடைய சந்ததி முழுமையாக மீட்கப்படுவதற்கு அவருக்குப் பதிலாக இயேசு தாமே வாழக்கூடிய மனித உரிமையை தத்தம் செய்தார். (யோவ 6-51) இயேசுவின் ஈடுபலி செலுத்தப்பட்ட பின்னும் மனுக்குலத்தின் ங்கததினர் மரணத்தின் செயல்முறையை மற்றும் மரணத்தில் நித்திரையை இன்னும் அனுபவித்துக் கொண்டுவருகின்றனர். ஆயினும், இந்த உலகத்தில் மரித்துப்போன ஒவ்வொரு தனிநபரும் வருங்காலத்தில், மிக குறுகிய நேரததில் உயிர்த்து எழுப்பப்படுவார்கள்.

அப்பொழுது, இந்த பூமியின் மேல் காணப்படும் அமைப்பானது, இன்றைய சமுதாய அமைப்பைக் காட்டிலும, முற்றிலும் வித்தியாசமாக காணப்படும்."அவருடைய வாக்குத்தத்தத்தின்படியே நீதி வாசமாயிருக்கும் புதிய வானங்களும் புதிய பூமியும் உண்டாகுமென்று காத்திருக்கிறோம்." (11பேது 3:13) ஒரு புதிய உலகத்தை மட்டுமல்ல, கிறிஸ்துவினால் வழிநடத்தப்படக்கூடிய நீதியும், நியாயமுள்ள ஒரு ஆட்சி அங்கு நடைபெறும். பாவம் மற்றும் மரணத்தின் விளைவுகள் முற்றிலும் வேரோடு பிடுங்கப்பட்டு, கீழ்படிதலுள்ளோருக்கு பரிசளிக்கப்படும்.

**தேவனை அறியும் அறிவினால் பூமி நிரப்பபடுதல்**

"சமுத்திரம் ஜலத்தினால் நிறைந்திருக்கிறதுபோல், பூமி கர்த்தருடைய மகிமையை அறிகிற அறிவினால் நிறைந்திருக்கும்." (ஆப 2:14) என்று ஆபகூக் தீர்க்கதரிசி மனுஷனுடைய உயிர்த்தெழுதலினால் பெறக்கூடிய ஆசீர்வாதங்களை விவரிக்கிறார். "" (செப் 3 :9)இக்காலத்தை வேதாகமம் விடியல் என்று குறிப்பிடுகிறது. ஏனெனில் பூமியில் உள்ள முழு குடும்பங்கள் சத்தியத்தினால் பிரகாசிக்கப்பட்டு முழு மகிழ்ச்சியை அடைவார்கள். "சாயங்காலத்தில் அழுகை தங்கும், விடியற்காலத்திலே களிப்புண்டாகும்." (சங் 30:5)

தேவனுடைய வார்த்தைகளை கவமாக வாசிக்கும் ஒவ்வொருவரும் - மனுஷன் நித்திய ஜீவனை பெறும்படி சிருஷ்டிக்கப்பட்டான் என்பதை நன்கு புரிந்துக் கொள்வார்கள். இனி நித்திய ஜீவனை பெறுவதற்கு, மனுஷன் வேறு வழிகளை தேடுவதில்லை. இது தேவன் கொடுக்கும் பரிசாகும். மரணமில்லாத உலகத்தை கற்பசைன் செய்வது கடினமாக உள்ளது. ஏனெனில் இன்றைய உலகம் வேதனை, துன்பங்கள், அநீதி நிறைந்ததாய் இருக்கிறது. ஆயினும், உயிர்த்தெழுதலின் இந்நிலைகள் நீக்கப்படும் என்று தேவன் வாக்களித்திருக்கிறார். (வெளி 21:4)

நாம் எவ்வாறு உயிர் வாழ்கிறோம் என்றும், எவ்வாறு பெலன் பெறுகிறோம் என்றும் மனுஷனால் உண்மையில் புரிந்துகொள்ளமுடியவில்லை. ஆனால் தேவன் சகலத்தையும் அறிந்தவர். கிறிஸ்துவின் இராஜ்யத்தின் பிரமாணங்களை கீழ்படிபவர்களுக்கு நித்திய ஜீவனை தேவன் அளிப்பார். இதையே அவர் நமக்கு வாக்குத்தத்தம் செய்திருக்கிறார். இதுவே, இயேசு திரும்பி வந்து பூமிக்குரிய இராஜ்யத்தை ஸ்தாபிப்பதற்கான முக்கிய நோக்கமாக இருக்கிறது. நித்திய ஜீவனை கொடுக்கக்கூடிய தேவனுடைய வாக்குத்தத்தங்களை எண்ணி மகிழ்ந்து களிக்கூறுவோம்.